# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு

விலை: 20

பக்கங்கள்: 28

சுடர் 32 கதிர் 285 ஆவணி 22ஆம் நாள் வியாழக்கிழமை 07 செப்ரெம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048




### கையளித்த உறவுகளை காணாமலாக்கிய

# ராணுவத்தை ஒருபோதும் மன்னிக்கவேமாட்டோம்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மைத்திரியிடம் முகத்துக்கு நேரே இடித்துரைப்பு

யாழ்ப்பாணம், செப். 7

“எங்கள் உறவுகளை காணாமல் ஆக்கிய இராணுவத்தினரை ஒரு போதும் மன்னிக்கமாட்டோம். அவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படவேண்டும். எங்கள் பிள்ளைகள் காணாமல் ஆக்கப்பட்டதற்கு அவர்கள் பொறுப்புக்கூறியே ஆக வேண்டும்"

இவ்வாறு அரச தலைவர் மைத்திரி பால சிறிசேனவிடம் முகத்துக்கு நேராக இடித்துரைத்தனர் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கும் இடையேயான சந்திப்பு நேற்று இரண்டு மணிநேரம் நடைபெற்றது.

இரகசிய முகாம்களில் எமது பிள்ளைகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்ற குற்றச்சாட்டை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முதலில் தெரிவித்தனர். இதற்குப் பதிலளித்த அரச தலைவர் மைத்திரி, "இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் முப்படையினரிடமும் கேட்டுவிட்டேன். அப்படி எந்தவொரு இரகசிய முகாமும் இல்லை. யாரும் தடுத்து வைக்கப்படவுமில்லை என்று சொல்கின்றனர்" என்றார். >> 25

## காணாமற்போனோர் அலுவலகத்தை நிறுவாததற்கு இதுதான் காரணமாம்

### பொருத்தமானவர்களைத் தேடும் அரசு

>> 25

## தமிழர் வாக்குகளாலேயே அரச தலைவனானவன் நான்

### நன்றி பாராட்டிய சிறிசேன

யாழ்ப்பாணம், செப். 7

"தமிழ் மக்களில் 90 சதவீதத்தினர் எனக்கு வாக்களித்தனர். அவர்களின் வாக்குகளாலேயே நான் அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டேன். உங்களுக்கு நியாயமா கவே நான் செயற்படுவேன்"

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களிடம் நேரில் தெரிவித்தார்.

அரச தலைவர் செயலகத்தில், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கும் அரச தலைவருக்கும் >> 25

## “நானும் காணாமல் ஆக்கப்பட்டவன்தான்”

### அன்று நடந்ததை இன்று சொல்கிறார் மைத்திரி

யாழ்ப்பாணம், செப். 7

"நானும் கடந்த காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டிருந்தேன். காணாமல் ஆக்கப்படுதலால் ஏற்படும் வலி - இழப்பு எனக்கு நன்கு தெரியும்"

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களிடம் தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வடக்கு கிழக்கிலிருந்தும், கொழும்பிலிருந்தும், அரச தலைவர் செயலகத்தால் அழைக்கப்பட்டிருந்தனர். காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களுடன் நேரடியாகத் தொடர்பு >> 25

## கடலுக்குள் தவறி வீழ்ந்தவர் பரிதாபச் சாவு

### வலிப்பால் துயரம்

யாழ்ப்பாணம், செப். 7

வேலை முடிந்து வீட்டுக்கு திரும்பிக்கொண்டிருந்த குடும்பத்தலைவர், வலிப்பு ஏற்பட்டதன் காரணமாக கடலுக்குள் தவறி வீழ்ந்து >> 25

## 8 கிலோ கஞ்சா சுழிபுரத்தில் வீடொன்றுக்குள் சிக்கியது

### அங்கிருந்தவர் கைது

யாழ்ப்பாணம், செப். 7

வட்டுக்கோட்டை, சுழிபுரம் பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்று 8 கிலோ கஞ்சா மீட்கப்பட்டது. அதனை மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் அந்த வீட்டிலிருந்த >> 25

## ஜெனரல் ஜெகத்துக்கு எதிராக உடன் போர்க்குற்ற விசாரணை

### நாடாளுமன்றில் கூட்டமைப்பு வலியுறுத்து

கொழும்பு, செப். 7

போர்க்குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராக உரிய விசாரணைகளை உடனடியாக முன்னெடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நாடாளுமன்றத்தில் நேற்றுக் கோரியுள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் நாடாளுமன்றில் ஆற்றிய உரையில் தெரிவித்ததாவது:

போரின்போது இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் உரிய நீதி விசாரணை நடத்தப்படும் என்று இலங்கை அரசு 2015ஆம் ஆண்டு பன்னாட்டுச் சமூகத்திடம் உறுதியளித்திருந்தது.

ஆனந்தபுரம், முல்லைத்தீவு போன்ற இடங்களில் இறுதிப் போரின் போது நான்கு லட்சம் மக்கள் இருந்தனர். 20 ஆயிரம் மக்களுக்கு மாத்திரமே உணவுகள் அனுப்பட்டிருந்தன. இந்தக் காலங்களில் >> 25

## தைக்கொண்டோ போட்டியில் வடக்குக்கு முதல் தங்கம்

### கிளிநொச்சியின் தமிழ்மகள் பெற்றுத் தந்தார்

யாழ்ப்பாணம், செப். 7



தேசிய மட்ட பெண்களுக்கான தைக்கொண்டோவில் வடக்கு மாகாணச் சேர்ந்த ஆர்.தமிழ் மகளுக்கு தங்கப்பதக்கம் கிடைத்துள்ளது.

43ஆவது தேசியமட்ட விளையாட்டு விழா கொழும்பில் நடை >> 25

## இழுபறிக்குள் இருந்த இடைக்கால அறிக்கை நேற்று முழுமையானது

### செப். 21 சபைக்கு முன்வைப்பு; ஒக்டோபரில் விவாதம்

யாழ்ப்பாணம், செப். 7

புதிய அரசமைப்பு உருவாக்கத்தை முன்னெடுக்கும் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை நேற்றைய கூட்டத்தில் இறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த மாதம் 21ஆம் திகதி காலை, நாடாளுமன்றம் அரசமைப்பு நிர்ணய சபையாகக் கூடும். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இடைக் >> 25

### பொன்சேகாவின் அறிவிப்பு தனிப்பட்டதே

# எந்தவொரு படையினரையும் அரசு சிறைக்குள் தள்ளாது

## சபை முதல்வர் திட்டவட்டம்

கொழும்பு, செப். 7

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜயசூரிய தொடர்பில் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா வெளியிட்டுள்ள கருத்து அரசின் நிலைப்பாடு அல்ல. எந்தவொரு படைத் தளபதியையும் கூட்டு அரசு சிறையில் அடைக்காது என்றும் சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல நேற்று நடாளுமன்றில் தெரிவித்தார்.

“முன்னாள் இராணுவத் தள >> 25

## கல்லுண்டாய் குப்பை மேடு திடீர் திடீரென பற்றி எரிகிறது

### மீதேன் வாயுப் பெருக்கமே காரணம்: அச்சத்தில் மக்கள்

யாழ்ப்பாணம், செப். 6

யாழ்ப்பாணத்தின் கழிவுகளைக் கொட்டும் இடமான கல்லுண்டாய் குப்பை மேடு திடீர் திடீரெனத் தீப் பற்றி எரிகிறது. கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக நடக்கும் இந்த நிகழ்வால் அந்தப் பகுதி மக்களும் அதன் வழியே பயணம் செய்பவர்களும் அச்சமடைந்துள்ளனர். இரவில் பயணிப்போர் மேலும் கலங்கிப் போகின்றனர். குப்பைகள் மற்றும் கழிவுகளால் ஏற்படும் அளவுக்கதிகமான மீதேன் வாயுவே தீ எரிவதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

“அதிகரித்த வெப்பம் கார >> 25

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு சு.கட்சியே தடை

## அமைச்சர் கபீர் ஹாசீம் தெரிவிப்பு

நிறைவேற்று அதிகாரத்தை ஒழித்து, புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முயற்சிக்கின்ற போதும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி அதற்கு எதிராகச் செயற்படுகிறது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் அரச தொழில் முயற்சிகள் அமைச்சருமான கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மகிந்த ராஜபக்ச தனது ஆட்சியில் நிறைவேற்று அதிகாரத்தையும் விட மேலதிக அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சித்தார். நிறைவேற்று அதிகாரம் தொடர்பில் இன்று எம்மைவிட அவர்களே கதைக்கின்றார்கள். திறந்த பொருளாதாரக் கொள்கையை எம்மைவிட அவர்களே சிறப்பாக முன்னெடுத்துச் செல்கின்றனர். அரசமைப்பு மாற்றம் தொடர்பில் நாம் உறுதியாக இருக்கின்றோம். எமக்கென்று ஒரு கொள்கை காணப்படுகின்றது. நாங்கள் திறந்த பொருளாதாரக் கொள்கையுடன் இருந்தோம். இன்று அதிலிருந்து மாறி சமூகப் பொருளாதாரக் கொள்கையுடன் செயற்படுகின்றோம். ஜே.ஆர்.ஜயவர்தனவின் அப்போதைய அரசமைப்பு இன்றைய காலக்கட்டத்துக்குப் பொருத்தமில்லை. அந்தக் காலத்துக்கு அது பொருத்தமாக இருந்தது. அதில் சில திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். நிறைவேற்று அதிகாரத்தால் இந்த நாடு மிகவும் பாதிக்கப்பட்டது. ஆடைத் தொழிற்சாலைகளை அமைத்த போதும், முதலாவது கிரிக்கெட் போட்டி நடைபெற்ற போதும் அனைத்துக்கும் எதிராகச் செயற்பட்டவர்கள் சுதந்திரக் கட்சியினரே-என்றார். (ஐ)

# நாட்டின் கடன் கட்டுப்பாட்டில்

## தலைமை அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,செப்.7

"இலங்கையின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்ட அரசாக தற்போதைய அரசு திகழ்கின்றது. நாட்டின் கடன் சுமைக்கான தீர்வை எமது காலத்திலேயே பெற்றுக்கொடுப்பதாக வாக்குறுதி அளித்திருந்தோம். அதன்படி கடன் சுமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கின்றோம்."

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் 71 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் சமய வழிபாடுகள் நேற்று நடைபெற்றன. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

பன்னாடுகளிடமிருந்து எமக்கு ஏராளமான வரப்பிரசாதங்கள் கிடைத்து வருகின்றன. கடந்த காலங்களில் நாம் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்திருக்கிறோம். குறிப்பாக நாட்டில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதாக உறுதியளித்திருந்தோம். தற்போது 4 இலட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.



இனிவரும் காலங்களில் அந்த 4 இலட்சம் வேலைவாய்ப்புகளில் வருமானத்தை அதிகரிப்பதுடன், மேலும் தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்தவுள்ளோம்" என்றார்.

ஐக்கிய தேசிய கட்சியின் 71ஆவது ஆண்டு நிறைவு விழாவின் முதன்மை நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இரத்தினபுரி சீவலி மைதானத்தில் நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# குடும்பத்தலைவர் தீக்குளிக்க முயற்சி

வவுனியா.செப்.7

நடைபாதையில் வியாபாரம் மேற்கொண்டவர் மீது வவுனியா நகர சபையினர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வியாபாரி ஒருவர் தீக்குளிக்க முயற்சித்தார். அவரைப் பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா சந்தை சுற்றுவட்ட வீதியில் நடைபாதையில் வியாபாரம் மேற்கொண்ட வியாபாரி ஒருவரை, நகரசபையினர் நடைபாதையில் வியாபாரம் மேற்கொள்ள வேண்டாம் என்று தடுத்த போதே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

வவுனியா சந்தை சுற்றுவட்ட வீதியிலுள்ள வியாபார நிலையங்களுக்கு முன்பாக வியாபாரம் மேற்கொண்டு வரும் வியாபாரிகளுக்கு எதிராக, நகரசபையினரின் வழமையான செயற்பாடுகளை நேற்று மேற்கொண்டனர்.

அதன்போது நடைபாதையில் மரக்கறிகளை வைத்து வியாபாரம் மேற்கொண்ட கணேசபுரம் பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தை, நகரசபை ஊழியர்களின் செயற்பாடுகளுக்கு இடையூறு எற்படுத்தும் விதமாகச் செயற்பட்டார். தனது பொருள் களை அகற்ற மறுத்ததுடன், நகரசபை ஊழியர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அவர் ஒரு கானில் பெற்றோலை எடுத்து, தனது உடலில் ஊற்றி விட்டு வீதியிலிருந்து பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தியுள்ளார். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அவரைக் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

கைது செய்யப்பட்ட நபர் தற்போது பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். தற்கொலைக்கு முயன்றார் எனவும் நகரசபை உத்தியோகத்தர்களின் பணிக்கு இடையூறு ஏற்படுத்தினார் எனவும் அவர் குடும்பஸ்தர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ஐ)

# முசலியில் 120 பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டன

மன்னார்.செப்.7

முசலி பிரதேசச் செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 120 பயனாளிகளுக்கு நேற்று கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டன.



மன்னார் மாவட்டம் முசலி பிரதேசச் செயலர் பிரிவுக்கு உட்பட்ட கிராமங்களைச் சேர்ந்த வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் மாகாண சபையின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து அவை வழங்கப்பட்டன.5 கிராமங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 120 பயனாளிகளுக்கு முசலி பொது மண்டபத்தில் வைத்து உதவித்திட்டம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் மற்றும் அமைச்சரின் இணைப்பாளர் முஹமட் முஜாஹிர் மற்றும் மீள்குடியேற்ற துரித செயலனி மன்னார் மாவட்ட இணைப்பாளர் எம்.முஜீப் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-56)

# காணி ஆக்கிரமிப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

நுவரெலியா,செப்.7

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நிவ்வெளி தோட்டத்துக்குச் சொந்தமான காணியை வெளியார் ஆக்கிரமித்துள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தப் பகுதி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நிவ்வெளி மற்றும் கிளங்கன் தோட்டத் தொழிலாளர்களே ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

அங்கு கம்பியால் போடப்பட்டிருந்த வேலியை உடைத்தெறிந்து, தமக்குச் சொந்தமான இடத்தை வெளியார் ஆக்கிரமிக்க இடமளிக்க முடியாது என்று அவர்கள் வாதிட்டனர்.

50 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அங்கு ஒன்று கூடியமையால் பதற்ற நிலமை ஏற்பட்டது. சம்பவ இடத்துக்கு தந்த தோட்ட உதவி முகாமையாளர் "இந்த இடம் நிவ்வெளி தோட்டத்துக்கச் சொந்தமானது. சட்டவிரோதமாக இந்த இடம் வெளியாரினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால், சட்ட நடவடிக்கை எடுக்ககோரி நோர்வூட் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்படும் " என்று தெரிவித்தார்.

முகாமையாளரின் உறுதிமொழியை அடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அந்த இடத்தை விட்டு கலைந்து சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)



யாழ்ப்பாணம் - இந்து மகளிர் கல்லூரியின் பவள விழா மண்டபத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மண்டபத்தைத் திறந்தார். (ஐ-ரி)

## கருணா மீதான விசாரணை நிறைவு

### நிதி மோசடி விசாரணைப் பிரிவு

கொழும்பு,செப்.7
அரச தலைவர் செயலகத்துக்குச் சொந்தமான 9 கோடி பெறுமதியான குண்டு துளைக்காத வாகனம் ஒன்றைத் தவறான முறையில் பாவித்தமை தொடர்பாக முன்னாள் அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். அவர் மீதான விசாரணைகள் நிறைவடைந்துள்ளன என்று நிதி மோசடி விசாரணைப் பிரிவு நேற்று நீதிமன்றுக்குத் தெரிவித்தது.

விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு எதிரான வழக்கு கொழும்பு நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணைகள் தொடர்பில் சட்ட மா அதிபரிடம் ஆலோசனை பெறப்பட்வுள்ளது என்று நிதி மோசடி விசாரணைப் பிரிவு நீதிமன்றில் குறிப்பிட்டது.

அதேவேளை சந்தேக நபர் தொடர்பில் இதுவரை சட்ட மா அதிபர் மூலம் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்படவில்லை என்று பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

இந்த வழக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று கொழும்பு பிரதான நீதிவான் லால் ரணசிங்க உத்தரவிட்டுள்ளார்.

(ஐ)

# ஏமாற்றும் அரசியல்வாதிகளால் முஸ்லிம் மக்களுக்கு விடிவில்லை

## கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

திருமலை,செப்.7
கிழக்கு மாகாணத்தில் ஏமாற்றிப் பிழைப்பு நடத்தும் அரசியல்வாதிகள் ஆட்சியில் இருக்கும் வரை முஸ்லிம் சமூகத்துக்கு விடிவு கிடைக்கப் போவதில்லை. இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தின் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

காத்தான்குடி இயற்கைப் பசளைத் தயாரிப்பு விஸ்தரிப்பு நிலையத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நாட்டில் 30 வருடங்களாக இடம்பெற்ற போர் மற்றும் தற்போது வரை தொடர்ந்து கொண்டிருக்கும் இனவாதம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ள முஸ்லிம் சமூகம், தனது அரசியல் வழிமுறைகள் பற்றி மீளாய்வு செய்து கொள்ள வேண்டும். சமூகத்தில் ஒரு சில அரசியல்வாதிகள் மக்களை ஏமாற்றிப் பிழைப்பு நடத்தும் துரோகத்தனமான அரசியலைத் தமது முதலீடாகக் கொண்டிருக்கின்றனர்.

பித்தலாட்டம் செய்து தங்களது அரசியலைத் தக்க வைத்து மக்களைக் குழப்பத்தில் விழுத்திப் பிழைப்பு நடத்துவதை அவர்கள் கைவிட வேண்டும். மக்களின் வரிப்பணத்தில் கிடைக்கும் ஒதுக்கீடுகளைக் கொண்டு கட்டடங்களைக் கட்டிவிட்டு அதற்குத் தங்களது பெயர்களைப் பொறிப்பதை முற்றாகத் தடை செய்ய வேண்டும்.

எதிர்காலத்தில் கிழக்கு மாகாண சபை ஆட்சியினூடாக அரசியல்வாதிகள் பாடசாலைகளுக்கும், பொதுக் கட்டடங்களுக்கும் பொறித்துள்ள அவர்களது பெயர்களை அகற்ற நாம் நடவடிக்கை எடுப்போம்.

ஒரு அரசியல்வாதி தனது பெயரைப் பாடசாலைக்குச் சூட்டுவது எதிர்காலத்தில் அந்தப் பாடசாலையின் கல்விப் பின்னடைவுக்கே வழிவகுக்கும். காரணம் மாற்று அரசியல்வாதிகளின் பெயரிலுள்ள அந்தப் பாடசாலைக்கு மற்றொரு அரசியல்வாதி அபிவிருத்திக்கு நிதி ஒதுக்க முன்வரமாட்டார். இது யதார்த்தம்.

அதற்குத் தீர்வாக அரசியல்வாதிகளின் பெயர்களுக்குப் பதிலாக மனித குல மேம்பாட்டுக்காக உழைத்த அரசியலற்ற பெரியார்களின் பெயர்களைப் பொறிப்பதில் நமக்கு எந்தவித ஆட்சேபனையுமில்லை.



அரசியல்வாதிகள் தமது பெயர் பொறிக்கப்பட வேண்டுமாக இருந்தால், தமது சொந்தப் பணத்தில் கட்டடங்களைக் கட்டிவிட்டு அதற்குத் தாம் விரும்பிய படி பெயரிடுவதில் ஆட்சேபனை இல்லை. மக்களின் வரிப்பணத்தில் அரசியல்வாதிகளின் பெயர் துலங்க வேண்டிய எந்த அவசியமும் இல்லை.

மியன்மார் நாட்டில் மனிதர்களையே கொன்றொழித்து அரசியல் நடத்தும் மனித குலம் வெட்கித் தலைகுனிய வேண்டிய கேவலமான அரசியல் நடந்து கொண்டிருக்கின்றது.

இந்த விடயத்தில் ஐ.நாவும், அயல்நாடுகளும், மனித உரிமை ஆர்வலர்களும் தாங்கள் கையாலாகாதவர்களாக இருப்பது குறித்து வெட்கப்பட வேண்டும். இது ஒட்டு மொத்த மனித குலத்துக்கே தலைக்குனிவு - என்றார்.

(ஐ-47)



## கொரிய இளைஞர் குழுவுடன் இராஜாங்க அமைச்சர் சந்திப்பு

கொழும்பு,செப்.7
கொரிய நாட்டின் இளைஞர் குழு, கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதகிருஸ்ணனை நேற்றுச் சந்தித்தனர்.

இலங்கையின் இளைஞர்களுக்குக் கொரிய நாட்டில் கல்வி, வேலை வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பது தொடர்பாக அந்தக் குழு, கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கொரிய நாட்டின் பன்னாட்டு இளைஞர் சம்மேளனத்தின் இலங்கைக்கான தேசிய அமைப்பாளர் ஹேய்ன் ஹோங் ஜொய் தலைமையிலான குழுவினர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். இந்தக் குழு எதிர்வரும் 14ஆம் திகதி கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்தைச் சந்திக்கவுள்ளது. அத்துடன் எதிர்வரும் 16ஆம் திகதி ஹற்றன் நகரில் நடைபெறவுள்ள மலையக மக்கள் முன்னணியின் இளைஞர் மாநாட்டிலும் பங்குபற்றவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கிழக்கு மாகாணச் சுகாதார அமைச்சின் புதிய செயலாளராக அன்ஸார் நியமனம்

கிழக்கு மாகாண சுகாதார, சுதேச, சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்புச் சமூக சேவைகள், கிராமிய மின்சார அமைச்சின் செயலாளராக ஏ.எச்.எம். அன்ஸார் நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றார். கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர் ஏ.எல். முஹம்மட் நஸீர் முன்னிலையில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். கிழக்கு மாகாணச் சுகாதார அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய கே.கருணா கரன் வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார் அவரது வெற்றிடத்துக்கு புதிய செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# 20 விடயத்தில் கூட்டமைப்பு அவசரப்படாது

## தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவிப்பு



மட்டக்களப்பு,செப்.7
புதிய அரசமைப்பின் 20வது சட்ட வரைவை அங்கீகரிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவசரப்பட்டு முடிவுகளை எடுக்காது. கூடி ஆராய்ந்து ஒரு இறுதி முடிவு ஒன்றை வெளியிடுவோம் இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளரும் கிழக்கு மாகாண விவசாய அமைச்சருமான கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

அரசமைப்பின் 20 ஆவது சட்ட வரைவு தொடர்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடுகளை ஊடகங்களுக்கு நேற்றுத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

20 ஆவது சட்ட வரைவு தொடர்பாக பல கலந்துரையாடல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்கு எதிராக வழக்குகளும் பல தொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. வழக்கின் தீர்ப்புகளும் வர இருக்கின்றன. அதற்கிடையில் அதில் பல திருத்தங்கள் வேண்டும் என்பது தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நிலைப்பாடாக இருக்கின்றது.

அதிகாரங்களையெல்லாம் நாடாளுமன்றுக்குக் கையளிப்பதாக ஒரு கருத்துரை நிலவிக் கொண்டிருக்கின்றது. இது தொடர்பாக நாங்கள் ஆழ்ந்து ஆராய வேண்டி இருக்கின்றது.

மாகாணசபையைக் கலைக்கின்ற அதிகாரம் முதலமைச்சரினுடனான கலந்துரையாடலின் அடிப்படையில் அரச தலைவரால் செய்யப்படுகின்ற ஒரு விடயம். இந்த விடயம் இப்போது வேறு விதமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஏற்கனவே இருக்கின்ற ஏற்பாட்டை அது பாதிக்கும் என்பது தொடர்பாக இன்னும் ஆழமாக நாங்கள் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இந்த அடிப்படையிலே எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமை அமைச்சருடன் செய்து கொண்ட சில கலந்துரையாடல்களின் அடிப்படையில் அவர் ஒரு அறிக்கையை வெளியிடுவார். அதில் இந்தச் சட்டத்தில் ஏற்படுத்தக் கூடிய திருத்தங்கள் பற்றிக் கூறுவார் என்று நினைக்கின்றோம். இந்தச் சட்ட வரைவு நாடாளுமன்றில் முதலாவது வாசிப்பாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. இரண்டாவது வாசிப்பின் போது அதற்கான திருத்தங்கள் முன்மொழியக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன.

தற்போது காலம் முடிவடையப் போகும் மாகாண சபைகளுடைய காலத்தை நீட்டுவது, அதே நேரத்தில் ஒரே தடவையில் தேர்தல்களை நடத்துவது என இரண்டு விடயங்கள் இருக்கின்றன. அதில் ஒரே நேரத்திலே தேர்தல்களை நடத்துவது என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஏனெனில் அனைத்துத் தேர்தல்களும் ஒரே சீர்த்தன்மை உள்ளதாக இருக்க வேண்டும் என்கின்ற விடயம் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. அதற்கேற்ற வகையிலான திருத்தம் வேண்டும் என்பது எல்லோரும் உணர வேண்டிய விடயம். ஒரே நேரத்தில் தேர்தல்களை நடத்துவதற்காகத் தான் காலத்தை நீட்டுவதாக அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அது ஜனநாயகப் பார்வையில் பார்க்கும் போது மக்களால் வழங்கப்பட்ட ஆணைக்கு மேலதிகமாக ஒரு சபையால் செயற்பட முடியுமா என்கின்ற ஒரு நியாயமான கேள்வியை ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்தக் கால நீடிப்புத் தேவை என்ற விடயம் தொடர்பாக நியாயப்படுத்தல்கள் முன்வைக்கப்படுமாயின் அது தொடர்பாக நாங்கள் சிந்திக்க முடியும் - என்றார். (ஐ-47)



# தம்பியைப் பார்க்கச் சென்ற அண்ணன் விபத்தில் இறப்பு

கொழும்பு,செப்.7
விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள தம்பியைப் பார்வையிடச் சென்ற சகோதரன் விபத்தில் சிக்கி உயிரிழந்தார். இந்த விபத்து பொலனறுவை மின்னேரியா - 16 ஆம் கட்டைப் பகுதியில் நேற்று அதிகாலை நடந்தது.

பொலனறுவையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பேருந்தும், ஹபரண பகுதியிலிருந்து பொலனறுவை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர்மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளில் பயணித்தவரே விபத்தில் உயிரிழந்தார். மொரகஸ்வெவ - ஹபரண பிரதேசத்தைச் சேர்ந்த எச்.எம்.ஜே.டி. ஹேரத் (வயது - 39)என்பவரே உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

சடலம் பொலனறுவை ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை ஹபரண பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



# மகளிடம் தவறாக நடந்த தந்தைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

## தண்டனை வழங்கக் கோரி உறவினர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,செப்.7
சொந்த மகளைப் பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள தந்தைக்கு உரிய தண்டனை வழங்குமாறு கோரி உறவினர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நீர்கொழும்பு நீதிமன்றுக்கு முன்பாக அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

நீர்கொழும்புப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தாகொன்ன, ஒரேகெலேப் பகுதியைச் சேர்ந்த 13 வயதான சிறுமியைப் பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் சிறுமியின் தந்தை கைதுசெய்யப்பட்டார். அவரை நீதிமன்றில் முற்படுத்துவதற்காகப் பொலிஸார் நேற்று அழைத்து வந்தனர்.

அதேநேரம் அங்கு கூடிய சிறுமியின் உறவினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபரின் மனைவி வெளிநாட்டில் தொழில் புரிவதால், சிறுமி தந்தையின் பாதுகாப்பில் இருந்துள்ளார். சந்தேகநபர் பெண் ஒருவரின் உதவியுடன் தனது மகளைப் பாலியல் துர் நடத்தைக்கு உட்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ஐ)

# பிரசன்ன ரணவீர நிதி மோசடிப்பிரிவில்

கொழும்பு,செப்.7
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணவீர நிதி மோசடி விசாரணைப் பிரிவில் நேற்று முன்னிலையானார்.

களனிப் பிரதேச சபையின் தலைவராக இருந்த காலப்பகுதியில், நடைபெற்ற கொடுக்கல் வாங்கல் தொடர்பில் வாக்கு மூலம் அளிக்க அவர் நிதி மோசடிப் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

கிரிபத்கொட பகுதியில் அரசுக்குச் சொந்தமான 80 பேர்ச்சஸ் காணிகளை சட்ட ரீதியற்ற முறையில் ஆவணம் தயாரித்து விற்றதாகவும், அதில் 2 பேர்ச்சஸ் காணிகளை அவரது உறவினர் ஒருவர் கொள்வனவு செய்துள்ளதாகவும் பிரசன்ன ரணவீர மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (ஐ)

# பாடசாலைகள் மீள ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.7
உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக மூடப்பட்ட பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளில் மூன்றாம் தவணைக்காக கற்றல் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

மூன்றாம் தவணைக்கான கற்றல் நடவடிக்கைகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 8 ஆம் திகதி வரை நடைபெறும் என்று கல்வி அமைச்சு தெரிவித்தது.

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக ஐந்து பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும். இந்தப் பாடசாலைகளுக்கான மூன்றாம் தவணைக் கற்றல் நடவடிக்கைகள் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. (ஐ)

# ஏறாவூர் இரட்டைப் படுகொலை சந்தேகநபர்களுக்கு மறியல் நீடிப்பு

ஏறாவூரில் இடம்பெற்ற இரட்டைப் படுகொலையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் அறுவருக்கு மீண்டும் விளக்கமறியல்நீடிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் அறுவரும் ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரணை செய்த நீதிவான் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம், ஏறாவூர் முகாந்திரம் வீதி முதலாவது குறுக்கு ஒழுங்கையில் அமைந்துள்ள வீடொன்றில் 56 வயதுடைய தாயும், 32 வயதுடைய மகளும் படுகொலை செய்யப்பட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் ஆறு பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். சந்தேகநபர்கள் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சந்தேகநபர்கள் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு மீண்டும் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ஐ)



வரலாற்றுப் புகழ்பெற்ற சித்தாண்டி ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவின் தீர்த்தத் திருவிழா நேற்று சிறப்புற இடம்பெற்றது. அதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். (ஐ-47)

# முல்லை. மீனவர்களின் படகு மாத்தளன் கடலில் மூழ்கடிப்பு

## தென்னிலங்கை மீனவர்கள் நடுக்கடலில் அட்டகாசம் மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் கண்டனம்

யாழ்ப்பாணம் செப் 7
முல்லைத்தீவு. மாத்தளன் மீனவர்களுடைய படகு மாத்தளன் கடற்பரப்பில் சேதப்படுத்தப்பட்டு மூழ்கடிக்கப்பட்டது. தென்னிலங்கை மீனவர்களே படகை மோதி மூழ்கச் செய்தனர் என மாத்தளன் மீனவர்கள் குற்றம் சாட்டினர். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம் பெற்றது.



சம்பவத்தை வடக்கு மாணசபை உறுப்பினர் து.ரவிகரன் வன்மையாகக் கண்டிக்கிறார் எனத் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது முல்லைத்தீவு மாத்தளன் பகுதியில் கடற்றொழில் ஈடுபட்டிருந்த அப்பகுதி மீனவர்களின் படகினை தென்னிலங்கை மீனவர்கள் வேண்டுமென்றே விசமத்தனமாக மோதித் தள்ளியுள்ளனர். இதனால் படகு கடுமையாகச் சேதமடைந்து கடலில் மூழ்கியுள்ளது. அந்தப் படகில் பயணித்த இரண்டு மீனவர்களும் உயிருக்குப் போராடிய நிலையில் சக மீனவர்களின் உதவியுடன் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர். இவ்வாறான விஷமத்தனமான செயலால் மீனவர்களின் உயிரை பறிக்க நினைத்துள்ளனர். இந்தச் செயலை செய்த படகினை அப்பகுதியில் நின்ற ஏனைய மீனவர்கள் துரத்திச் சென்று அவர்கள் யார் என அடையாளம் கண்டுள்ளனர். அதன் பின்னர் இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸாரினதும் எனதும் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. சம்பவ இடத்துக்கு நேரடியாகச் சென்று அவர்களுடன் கலந்துரையாடினேன். அப்போது இவ்வாறான சம்பவம் கடந்த சில தினங்களுக்கு முன்னரும் இடம்பெற்றதாகவும். அதிலிருந்து தாம் மீண்ட நிலையில் நேற்று அதிகாலையும் தென்னிலங்கை மீனவர்கள் தங்களைமோதித்தள்ளி கடலில் மூழ்கடித்தனர் எனவும் மீனவர்கள் தெரிவித்திருந்தனர். "நாம் கடலில் இறந்திருந்தால் எமது குடும்பத்தின் நிலை என்ன? தொடர்ச்சியாக எமது படகுகளை சேதப்படுத்தினால் எமது வாழ்வாதாரம் முழுமையாகப் பாதிக்கப்படுகின்றது. எனவே கொழும்பு அரசு மற்றும் மாகாண சபை ஆகியன உடனடியாக நடவடிக்கை எடுத்து இந்தப் பிரச்சனைக்கு தீர்வினை வழங்க வேண்டும்" என மீனவர்கள் என்னிடம் கோரிக்கையை முன்வைத்துள்ளனர். நான் அவர்களின் கோரிக்கையை ஏற்று உடனடியாகவே வடக்கு மாகாண முதலமைச்ச ருக்கு தகவலை வழங்கினேன். மேலும் இச்சம்பவம் தொடர்பாக அறிக்கை ஒன்றையும் இன்றையதினம் சமர்ப்பிக்கவுள்ளேன் என்றார். (21-8)

# வடக்கு அரசுக்கு முழுச் சுதந்திரம்

*கூட்டு அரசால் வழங்கப்பட்டுள்ளதாம்*

கொழும்பு, செப். 7
"வடக்கு மாகாண சபையை கடந்த அரசு எதிரியாக நடத்தி வந்தாலும் கூட்டு அரசின் கீழ் அது மாற்றியமைக்கப்பட்டு அவர்கள் சுதந்திரமாக செயற்படுவதற்குரிய அனைத்து ஒத்துழைப்புகளும் வழங்கப்பட்டு வருகின்றன".
இவ்வாறு நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சரான மங்கள சமரவீர தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற உற்பத்தி வரி (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான கட்டளைகளையும், முத்திரை தீர்வை (சிறப்பு ஏற்பாடு
வடக்கு...
கள்) சட்டத்தின் கட்டளையையும் அங்கீகரிப்பதற்கான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்குக்கு கூடுதல் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்காகவே இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்டது. கடந்த காலங்களில் முழு அதிகாரமும் வழங்கப்படவில்லை. நீண்டகாலமாக வடக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடத்தப்படவில்லை.
2013ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்றது. மக்களுக்கு தமது பிரதிநிதிகளை தெரிவுசெய்யக்கூடியதாக இருந்தது. அப்போதைய கொழும்பு அரசானது வடக்கு மாகாண சபையை எதிரியாகவே நடத்தியது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் அந்த நிலைமையை மனோபாவத்தை மாற்றியமைத்தோம். முழு ஒத்துழைப்பும் வழங்கப்பட்டு வருகின்றது.
தெற்கிலுள்ள மக்கள் பிரதிநிதிகளுக்கு வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்படும் சலுகை 2016ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டது. வடக்கு மாகாணத்திலுள்ள மக்கள் பிரதிநிதிகளுக்கு வாகன அனுமதிப்பத்திர சலுகை வழங்கப்பட்டது. இதற்கு அமைச்சரவையும் அனுமதியளித்திருந்தது. சனநாயக நீரோட்டத்தில் சுதந்திரமாக செயற்படுவதற்கு சபை உறுப்பினர்களுக்கு அது வழிவகுக்கும்.
வடக்கில் மீளவும் பயங்கரவாதம் உருவாகாமல் இருக்க வேண்டுமாயின் அந்தப் பகுதியில் வறுமை ஒழிக்கப்பட வேண்டும். அபிவிருத்தி முன்னெடுக்கப்படவேண்டும் என்றார். (வ-5)

# கலப்பு முறையில் மாகாணத் தேர்தல்

*அமைச்சரவை நேற்று ஒப்புதல்*

கொழும்பு, செப். 7
மாகாண சபைகளுக்கான தேர்தல் கலப்பு முறையில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யும் அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை நேற்று அனுமதி வழங்கியுள்ளது. இதனடிப்படையில் மாகாண சபைகளுக்கு 60 சதவீதம் தொகுதிவாரியாகவும், 40 சதவீதம் விகிதாசார முறையிலும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது.
கூட்டு அரசின் வாராந்த அமைச்சரவைக் கூட்டம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் கூடியது. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா இதற்கான யோசனையை அமைச்சரவையில் ஒப்புதலைப் பெறுவதற்காக சமர்ப்பித்துள்ளார்.
புதிய முறைமைக்கான எல்லை மீள்நிர்ணய பணிகள் நிறைவடைந்த பின்னரே மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதென அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எல்லை மீள் நிர்ணயங்களை மேற்கொள்வதற்குத் தேர்தல்கள். ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் சகல அரசியல் கட்சிகளினதும் பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்றை நியமிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (வ-5)

# ஸ்கந்தவரோதயாவில் இன்று சிலை திறப்பு

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் வி.சிவசுப்ரமணி யத்தின் சிலை திறப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர்.
கல்லூரியின் பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் நிறுவப்பட்ட இந்த சிலையை வடக்கு ஆளுநர் ரெஜினோல்ட் குரே திரை நீக்கம் செய்து வைப்பார்.
நயப்புரையை நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த் தன் வழங்குவார். கல்லூரியின் முன்னாள் அதிபரும் தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலய தலைருமான ஆறு திருமுருகன் வாழ்த்துரை வழங்குவார்.
யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் 'இலங்கையின் உயர்கல்விமுறைமை' என்னும் தொனிப்பொருளில் உரையாற்றுவார். (ய-ரி)

# சீல்வைக்கப்பட்ட உணவகத்தை சீரமைக்க நீதிமன்று அனுமதி

சாவகச்சேரி, செப். 7
நீதிவான் மன்றின் கட்டளையில் தற்காலிகமாக மூடப்பட்ட கைதடிச் சந்தியிலுள்ள உணவகம் திருத்த வேலைக்காக நேற்று நீதிமன்ற அலுவலர்களால் திறக்கப்பட்டு உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டது.
யாழ்ப்பாண மாவட்ட உணவு மற்றும் மருந்துகள் பரிசோதகரால் கைதடியில் உள்ள உணவகத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போது சுகாதார சீர்கேடுகள் இருந்தமை கண்டறியப்பட்டன.
அதன் உரிமையாளருக்கு எதிராக 11 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு சாவகச்சேரி நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. விசாரணையின் பின்னர் அந்த உணவகம் தற்காலிகமாக மூடி குறைபாடுகளைச் சீர்செய்யுமாறு மன்று உத்தரவிட்டது.
உணவக சீரமைப்புத் தொடர்பாக உணவக உரிமையாளர் சட்டத்தரணி மூலமாகக் முன்வைத்த விண்ணப்பத்தைப் பரிசீலித்த நீதிவான், பிரதேசபொதுச் சுகாதாரப் பரிசோதகர் முன்னிலையில் திருத்தவேலைகள் மேற்கொள்ளுமாறு பணித்தது.
பின்னர் மாவட்ட உணவு மற்றும் மருந்துகள் பரிசோதகரை மன்றில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு மன்று உத்தரவிட்டது.
அந்தக் கடை திருத்த வேலைகளுக்காக நேற்று உரிமையாளரிடம் நீதிமன்றால் ஒப்படைக்கப்பட்டது. (4-9)

# ஜெகத்தை தூதுவராக ஏற்றதால் ஐ.நாவின் வலைக்குள் பிரேசில்

*விசாரணை கோரி ஜெனிவாவுக்குக் கடிதம்*

கொழும்பு, செப். 7
இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜயசூரியவின் நியமனத்தை ஏற்றுக் கொண்டமைக்காக பிரேசில் அரசு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் விசாரணை வலைக்குள் சிக்கியிருப்ப தாக அறியமுடிகின்றது.
முன்னாள் தளபதி ஜெகத் ஜயசூரியவை இலங்கைக்கான தூதுவராக நியமித்ததன் மூலம் போர்க்குற்றவாளி ஒருவருக்கு இராஜதந்திர சிறப்புரிமையை வழங்கி பிரேசில் அரசு தவறிழைத்திருப்பதாக தென்னாபிரிக்காவைத் தளமாகக் கொண்ட உண்மை மற்றும் நீதிக்கான பன்னாட்டு அமைப்பு ஜெனிவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு கடிதம் மூலம் அறிவித்திருக்கின்றது.
'இராஜதந்திர சிறப்புரிமைகள் இருந்த காரணத்தால் தளபதி ஜெகத் ஜயசூரியவைக் கைது செய்யுமளவுக்கு எங்களால் எதுவும் செய்ய முடியவில்லை. ஆனால், குற்றவாளி ஒருவருக்கு பாதுகாப்பை வழங்கும் வகையில் வசதிகளைச் செய்துகொடுத்த பிரேசில் அரசுக்கு எதிராக நாங்கள் செயற்பட்டுள்ளோம். ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கும் இதனைத் தெரியப்படுத்தியுள்ளோம். இதற்கு பிரேசில் அரசு பதில் சொல்லியாகவேண்டும்' என்று உண்மை மற்றும் நீதிக்கான பன்னாட்டு அமைப்பின் பேச்சாளர் தெரிவித்தார். (வ-5)

### நடுவர்சபை வழமை போல் இயங்கும்

கரவெட்டி நடுவர்சபை எதிர் வரும் 10 ஆம் திகதி முதல் வழமை போன்று வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் இயங்கும் என தவிசாளர் சி.நற்குணலிங்கம் அறிவித்தார். (35)

## வட்டுகோட்டையில் ஞாயிறன்று மாட்டுவண்டிச் சவாரி

யாழ்ப்பாணம், பெப். 7
வட்டுக்கோட்டை கொத்துத்துறை சவாரித் திடலில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மதியம் 1.30 மணி தொடக்கம் தங்கப் பதக்கத்துக்கான 4 ஆவது மாபெரும் சவாரிப்பந்தயம் இடம்பெறவுள்ளது.
ஏ.பி.சி.டீ என்று நான்கு பிரிவுகளாகப் போட்டிகள் இடம்பெறும் ஒவ்வொரு பிரிவுகளில் முதலிடம் பெறும் வெற்றியாளர்களுக்கும் முதற்பரிசாக தங்கப் பதக்கமும், ஏனைய வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.
இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் வருடாந்தம் நடத்தும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிகளின் வரிசையில் இந்தப் போட்டி இடம்பெறவுள்ளது. (4)

# மென்பான உற்பத்தியாளருக்கு ரூபா 30 ஆயிரம் தண்டம்

சாவகச்சேரி, செப். 7
உற்பத்தித் திகதி காலாவதித் திகதி மற்றும் தொகுதி இலக்கம் போன்றவை குறிக்கப்படாத மென்பானங்களை வியாபார நிலையங்களுக்கு வழங்கிய மென்பான (சோடா) உற்பத்தி நிறுவனத்துக்கு சாவகச்சேரி நீதிமன்று 30 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.
வரணிப் பிரதேசத்தில் உள்ள வணிக நிலையங்களுக்கு மென்பான உற்பத்தி நிறுவனமொன்றால் வழங்கப்பட்ட மென்பானப் போத்தல்களிலேயே உற்பத்தித் திகதி, காலாவதித் திகதி மற்றும் தொகுதி இலக்கம் என்பன காணப்படவில்லை. அவ்வாறிருந்தும் அவற்றைக் குறித்த நிறுவனத்தினர் வியாபார நிலையங்களுக்கு விற்பனைக்காக வழங்கியிருந்த வேளையில் பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகர் பரிசோதனை மேற்கொண்டு அதனைக் கண்டறிந்தார்.
இதனையடுத்து மென்பான உற்பத்தி நிலைய உரிமையாளருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் பொது சுகாதார பரிசோதகர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.
இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மூன்று குற்றங்களுக்கும் தலா 10 ஆயிரம்ரூபாவீதம் 30ஆயிரம் ரூபா தண்டம் விதித்து நீதிமன்று உத்தரவிட்டது. (4-9)

## உறக்கத்துக்குச் சென்ற முதியவர் சடலமாக மீட்பு

மதிய உணவு அருந்திவிட்டு உறக்கத்துக்குச் சென்ற முதியவர் சடலமாக மீட்கப்பட்டார்.
இந்தச் சம்பவம் சாவகச்சேரி வடக்கில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த செல்லத்துரை தங்கராசா (வயது - 62) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.
உடற்கூற்றுப் பரிசோதனையின்போது அவரது இதயத்துக்கு அருகில் ஏற்பட்ட கட்டியே இறப்புக்குக்காரணம்என்றுகூறப்பட்டது. சடலம் உறவினர்களிடம்ஒப்படைக்கப்பட்டது. (4-9)

## உலக முதியோர் வாரம் கைதடி இல்லத்தில்

கைதடிஅரசமுதியோர்இல்லத்தில் இம்முறை உலக முதியோர் வார நிகழ்வுநடத்தப்படவுள்ளது.
"இறை அன்பின் இருப்பிடம் மூத்தோர் பராமரிப்பின் பிறப்பிடம்" என்ற தலைப்பில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 7ஆம் திகதி வரை முதியோர் வாரத்தை வெகுசிறப்பாக கொண்டாடுவதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்சித்த மருத்துவபீடத்தால் சித்த மருத்துவக்கண்காட்சியும்நடத்தப்படவுள்ளது.
அதில் சமூக சேவையில் ஈடுபட்ட மூத்தோர்பாராட்டிக்கௌரவிக்கப்படவுள்ளனர்.
இதற்கான சமூக சேவையில் ஈடுபட்டோர் தமது முழுமையான விபரங்களை எதிர்வரும் 20ஆம் திகதிக்குமுன்பாகவிண்ணப்பிக்குமாறு இல்லஅத்தியட்சகர்கேட்டுள்ளார். (4-17)

## அண்ணமார் ஆலய திருக்குளிர்த்தி இன்று

யாழ்ப்பாணம், பெப். 7
தெல்லிப்பழை சித்தியம்புளியடிசித்தயம்பதி அண்ணமார் ஆலய ஆவணி திருக்குளிர்த்தி நிகழ்வு இன்று வியாழக்கிழமை அதிகாலை 5 மணிக்குசிறப்பு வழிபாடுகளுடன் ஆரம்பமாகவுள்ளது.
மதியம்12மணிக்குஅண்ணமார்பெருமான்எழுந்தருளிவெளிவீதிவலம்வரும்காட்சியும்தொடர்ந்து மகேஸ்வரபூசையும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. (4)

## பருத்தித்துறை நீதிமன்றிலுள்ள துவிச்சக்கர வண்டியைப் பெறவும்

பருத்தித்துறைநீதிவான்மன்றில்துவிச்சக்கரவண்டி ஒன்று பாரப்படுத்தப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரத்தை முன்வைத்துப் பெற்றுக்கொள்ளுமாறு நீதிமன்றப்பதிவாளர்கோரியுள்ளார். பருத்தித்துறை பொலிஸார் குறித்த துவிச்சக்கர வண்டியை மன்றில் பாரப்படுத்தியுள்ளனர். அதன் இலக்கம் தெளிவற்றுள்ளது.
உரிமையாளர்யாராவது இருப்பின் மன்றின் அலுவலகநேரத்தில்அதற்குரியமூலஆவணங்களைச் சமர்ப்பித்துப் துவிச்சக்கர வண்டியைப் பெற்றுக் கொள்ள முடியும். தவறின் 2 மாதங்களுக்குப் பின் அது அரசுடமை ஆக்கப்படும் என்று நீதிமன்றின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (4)

## பாலவிஹா சிறுவர் வகுப்பும் கந்தபுராணம் விளக்கவுரையும் வெள்ளிதோறும் இடம்பெறுகிறது

யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார்பிரம்மச்சாரிஜாக்ரதசைதன்யாவால்கந்தபுராணம் வாராந்த விளக்கவுரை, இலவசமாக, வெள்ளிக்கிழமைகளில், மாலை6.30மணிமுதல்7.30 மணிவரை, இல. 700, பருத்தித்துறைசாலையில் அமைந்துள்ள ஞானவேல் ஆச்சிரமத்தில் ஆரம்பமாகவுள்ளது.
இது தவிர, வெள்ளிக்கிழமைகளில், அதிகாலை 5 மணி முதல் 6 மணி வரை, நல்லூர் ஆலய முன்றலில் பஜனை நடைபெறும். மாலை 4 மணி முதல் 5.30 மணி வரை இளம் சிறார்களுக்கான (வயது 4,12) பாலவிஹார்வகுப்பும்இலவசமாகசின்மயா மிஷன் இல. 09, செட்டித்தெருஒழுங்கை, நல்லூர் எனும் விலாசத்தில் இடம் பெறும். ஆர்வலர்கள் அனைவரும்கலந்துபயன்பெறுமாறு அழைக்கப்

## வேவில் பிள்ளையாருக்கு நாளை கோபுர அடிக்கல்

யாழ்ப்பாணம், பெப். 7
வல்வெட்டி வேவில் பிள்ளையார் ஆலயத்துக்கு கோபுர அடிக்கல்நடும்நிகழ்வுநாளைவெள்ளிக்கிழமைகாலை 6.45 தொடக்கம் 7.15 மணி வரையுள்ள உள்ள சுப வேளையில் இடம்பெறவுள்ளது.
அடியார்கள் இராஜகோபுரதிருப்பணிக்குஉதவமுடியும் என்று ஆலய நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (4)

## உணவக உரிமையாளருக்கு நீதிமன்றம் எச்சரிக்கை

உணவு வகைகளின் பாதுகாப்புக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் பணியாளரை வைத்திருந்த உணவக உரிமையாளர் சாவகச்சேரி நீதிமன்றில் எச்சரிக்கை செய்யப்பட்டார். அவருக்கு 6 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
வரணிப் பிரதேசத்தில் உள்ள ஆலயமொன்றின் திருவிழாக் காலத்தில் அமைக்கப்பட்டிருந்த உணவகத்தில் உணவுப் பொருள்களுக்குத் தீங்கு ஏற்படும் வகையில் முகச்சவரம் செய்யாமலும் கையில் அழுக்கடைந்த நூல் கட்டியிருந்த நிலையிலும் உணவுப் பொருள்களுக்கு மாசு ஏற்படும் வகையில் கைகளில் காயத்துடனும் அந்த ஊழியர் காணப்பட்டார் என்று பிரதேச பொது சுகாதார பரிசோதகர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.
இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது உணவக உரிமையாளர் குற்றத்தை ஏற்றுக்கொண்டார். அதனையடுத்தே அவர் எச்சரிக்கப்பட்டு அவரிடம் தண்டம் அறவிடப்பட்டது. (4-6)

### மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 50 | 80 | 60 | 70 |
| கத்தரி | 120 | 120 | 140 | 140 | 100 |
| மரவள்ளி | 70 | 80 | 80 | 60 | 80 |
| பயிற்றை | 80 | 90 | 100 | 100 | 120 |
| பாகல் | 100 | 120 | 220 | 160 | 160 |
| க.கிழங்கு | 100 | 120 | 100 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 130 | 140 | 130 | 130 | 120 |
| சி.வெங்காயம் | 150 | 200 | 180 | 220 | 140 |
| பூசணி | 60 | 40 | 40 | 40 | 40 |
| தக்காளி | 160 | 140 | 160 | 80 | 140 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 70 | 80 |
| கீரை | 30 | 30 | 40 | 15 | 40 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 30 |
| ப.மிளகாய் | 180 | 200 | 300 | 300 | 180 |
| புடோல் | 60 | 80 | 80 | 80 | 60 |
| கோவா | 80 | 80 | 100 | 100 | 80 |
| வெண்டி | 60 | 50 | 50 | 80 | 40 |
| போஞ்சி | 120 | 140 | 200 | 160 | 160 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 120 | 100 |
| தேங்காய் | 60 | 70 | 70 | 80 | 80 |
| உ.கிழங்கு | 100 | 110 | 110 | 110 | 120 |
| தேசிக்காய் | 200 | 200 | 320 | 200 | 140 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 70 | 120 | 120 | 160 | 120 |
| கரட் | 80 | 140 | 160 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 50 | 60 | 70 | 30 | 80 |

### கடலுணவின் நேற்றைய விலை விவரம்



| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 1000 | 1000 |
| நண்டு | 350 | 400 | 600 | 200 |
| கணவாய் | 500 | 600 | 800 | 1000 |
| பாரை | 500 | 500 | 600 | 800 |
| சுறா | 500 | 700 | 800 | 900 |
| சீலா | 400 | 400 | 500 | 400 |
| விளை | 600 | 400 | 500 | 800 |
| முரல் | 400 | 350 | 400 | 500 |
| கும்பிளா | 300 | 300 | 400 | 400 |
| கிளாக்கன் | 800 | – | 500 | – |
| ஓரா | 350 | 300 | 400 | 300 |
| திரளி | 250 | 200 | 200 | 150 |
| நகரை | 250 | 150 | 400 | – |
| சூடை | 150 | 100 | 200 | 160 |
| ஒட்டி | 250 | 200 | 300 | 200 |
| திருக்கை | 350 | 200 | 500 | 200 |
| மதனம் | 250 | 150 | 250 | – |
| கொய் | 150 | 70 | 80 | 100 |
| பாலை | 150 | 200 | 500 | 200 |
| வாளை | 200 | 200 | 400 | – |

## தாக்குதல் நடத்தியவருக்கு விளக்கமறியல் உத்தரவு

வரணியில் காணியொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்த நால்வரை கைகளாலும் கற்களாலும் தாக்கிக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.
அவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.
காயமடைந்தநால்வரும்கொடிகாமம் பொலிஸ்நிலையத்தில்தனித்தனியாக முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.
குறித்த நபர் கைது செய்யப்பட்டார். அவருக்கு எதிராக 4 குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. வழக்கு நேற்றுத் தாக்கல்செய்யப்பட்டபோது அவரைஎதிர்வரும் 13 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (4-9)

## இது புதுசு



பெண்களுக்கான பாதணி வகைகள் பல நவீன வடிவில் சந்தைக்கு வந்துள்ளன. இவை 990ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

# கிராமிய வங்கியில் பெரும் நிதிமோசடி

## வைப்பிலிட்ட பணத்தை வழங்குமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம் செப் 7
மருதங்கேணி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கியில் மக்களால் வைப்பிலிடப்பட்ட கோடிக்கணக்கான நிதி மோசடி செய்யப்பட்டு வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்தப் பணத்தை எமக்கு மீளப் பெற்றுத்தர வேண்டும் என பாதிக்கப் பட்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதுதொடர்பில்அந்தமக்கள்தெரிவித்ததாவது;

மருதங்கேணி கிராமிய வங்கியில் வைப்பிலிட்டஎமதுபணத்துக்குஎன்ன நடந்தது என வங்கி முகாமையாளர் எமக்குக் கூறவேண்டும். ஆயிரக்கணக்கானநாம் கோடிக்கணக்கில்இந்த வங்கியில் பணத்தினை வைப்பிலிட்டுள்ளோம். ஆனால்மருதங்கேணிபல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கியில் வைப்பிலப்பட்டுள்ள மக்கள் பணத்தை கூட்டுறவுத்துறையினர் மோசடியாக வேறு தேவைகளுக்குப்பயன்படுத்திவிட்டனர்.

இதனால்எம்மைநடுத்தெருவில்விட்டு விட்டனர். கிராமிய வங்கியினரின் இந்தச் செயற்பாட்டுக்கு எதிராக உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும். நாம் வைப்பில் இட்ட பணத்தினை எமக்கு மீளப் பெற்றுத்தர வேண்டும. இல்லாது விட்டால் நாம் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிவரும்.

இதுபற்றி "மருதங்கேணிகிராமியவங்கியில் பொதுமக்கள் வைப்பில் இட்ட பணம்அனைத்தும்திருப்பிகொடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். அதன் முதற்கட்டமாக மக்களின் பணத்துக்கு என்ன நடந்தது எனவிசாரணைசெய்துஅதனைஅறிக்கையாக சமர்ப்பிக்குமாறு வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளரிடம் கோரியுள்ளேன்.

மேலும் முன்னைய காலத்தில் கூட்டுறவுச் சங்கங்களில் இடம்பெற்ற மோசடிகள் மற்றும் மந்த கதியிலான விசாரணைகள்போலஅல்லாதுஇந்தப்பிரச்சனைக்கு விரைவாகத் தீர்வு வழங்க அனைத்து ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கூட்டுறவு ஆணையாளரின் அறிக்கை கிடைத்ததும் அடுத்த கட்ட நடவடிக்கை விரைந்து எடுக்கப்படும்" என வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

"வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சர் இச்சம்பவம் தொடர்பில் என்னிடம் அறிக்கையை கோரியுள்ளார்.

2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் மருதங்கேணி கிராமிய வங்கியில் பணத்தினை வைப்பிலிட்ட மக்களே தமது பணத்தினைதருமாறுகோரியுள்ளதாக அறிகின்றேன். போர்க்காலத்தில்வைப்பிலப்பட்டபணம்என்பதால்அந்தகாலத்தில்அப்பணத்துக்குஎன்னநடந்ததுஎன விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் குறித்த கிராமவங்கியில் பணத்தினைவைப்பிலிட்டவர்களுக்கு படிப்படியாகபணத்தினைவழங்கிவருகின்றனர்.

இது தொடர்பான முழுமையான விசாரணைகள்இடம்பெற்றபின்னர்முழுமையாக அறிக்கை அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்படும்" என வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் தெரிவித்தார். (ய-8)

## கடமைநிறைவேற்று அதிபர்களுக்கும் நிரந்தர நியமனம்

### மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் வேண்டுகோள்



யாழ்ப்பாணம். செப். 7
வடக்கு மாகாணத்தில் உள்ளகடமைநிறைவேற்று அதிபர்கள்அனைவரையும் நிரந்தரமாக உள்வாங்க வேண்டும். மிகைஅதிபர்களாக கடமையாற்றும் அதிபர்களுக்கு அதிபர் தரம் III இல்வழங்கப்படும்சலுகைகள் வழங்கப்படவேண்டும். இதனை வலியுறுத்தி வடக்குமாகாணசபையின் இன்றைய அமர்வில்பிரேரணை நிறைவேற்றப்படவுள்ளது.

இந்தப் பிரேரணையை வடக்கு மாகாணசபை உறுப்பினர்எம்.கே.சிவாஜிலிங்கம் முன்மொழியவுள்ளார்.

அவர்தனதுபிரேரணையில் தெரிவித்திருப்பதாவது:

இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணங்களிலும் கடமைநிறைவேற்றுஅதிபர்கள் கடமையாற்றி வருகின்றனர்.

இந்த நிலையில் வடக்கு மாகாணத்தில் கடந்தவருடம் டிசம்பர் மாதம் 31ஆம் திகதிவரைகடமையாற்றிய கடமைநிறைவேற்றுஅதிபர்களை தரம் III அதிபர் தரத்தில் நிரந்தரமாக உள்வாங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கொழும்பு கல்வி அமைச்சரைஇந்தச்சபைகோருகின்றது.


மேலும்இதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு வடக்குமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளை யாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சரையும் இந்தச்சபைகோருகின்றது.

மிகை அதிபர்களாக வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும்அனைவருக்கும்அதிபர் தரம் III இல் உள்ள ஏனையவர்களுக்குவழங்கப்படும் சிறப்புரிமைகளை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதற்கு உரிய அனுமதியை கொழும்புகல்வி அமைச்சரிடம் இருந்து பெற்று உரிய தீர்வைவழங்குமாறுசம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் இந்தச்சபை கோருகின்றது என குறிப்பி டப்பட்டுள்ளது. (ய-8)

## மூளாய் குடியேற்றத்திட்ட மக்களுக்கு அமைச்சர் சஜித் பிரமேதாச உதவுவார்

### சரவணபவன் எம்.பி நம்பிக்கை



யாழ்ப்பாணம், செப். 7
பொன்னாலை. மூளாய்குடியேற்றத்திட்ட மக்களுக்கு தேசிய வீடமைப்பு அதிகார அபிவிருத்தி சபையினால் வழங்கப்பட்ட ரூபா 5 இலட்சம்பெறுமதியான வீட்டுத்தி ட்டத்தை முழுமையாகக் கட்டி முடிப்பதற்கு அந்த மக்கள் மிகவும் கஸ்ரப்படுகின்றனர்.

"இது தொடர்பில் அமைச்சர் சஜித்பிரேமதாசவுடன்பேசியுள்ளேன். மக்களுக்கு உதவுவதாகஅவர்எனக்குஉறுதியளித்தார்" என நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் தெரிவித்தார்.

சுழிபுரம் கிழக்கு பகுதியில் அண்மையில் இடம்பெற்ற சாலைச்சீரமைப்பு தொடர்பான கலந்துரையாடலின் போது உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்ததாவது:

"பொன்னாலைச் சந்தியில் அமைக்கப்படும் வீட்டுத்திட்டத்துக்கு அரசு 5 லட்சம் ரூபா நிதியையே ஒதுக்கியுள்ளது. 5 லட்சத்தில் என்ன செய்யமுடியும். எனவே கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் அந்த மக்கள் என்னிடம் வந்தார்கள். என்ன செய்யலாம் என்று என்னிடம் கேட்டார்கள். அமைச்சர் சஜித் பிரேமதாசதான் அந்த வீட்டுத்திட்டத்தைத் தொடக்கி வைத்தார். எனவே நான் இது தொடர்பில் நாடாளுமன்றில் அவரிடம் சென்று பேசினேன். இதற்கு அவர் சொன்ன பதில் "அந்த வீடுகள் சரியான முறையில் கட்டப்படும் அதற்குநான் உத்தரவாதம் தருகிறேன்" என்றார். நான்அந்தமக்களுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் அதிகமாககொடுங்கள்என்று கேட்கலாம் என்றே பேசினேன். ஆனால் அவர் வீட்டைமுழுமையானகட்டுவதற்குஉத்தரவாதம்அளித்தார்.

எனவே அவரால் தொடங்கப்பட்ட வீட்டுத்திட்டம் எந்தளவுக்கு கட்டப்படுகிறது என்பதைப் பார்ப்போம். ஏனெனில் மக்கள் தங்களால் ஏலுமானவற்றையே செய்து கொண்டு போகின்றார்கள் முடிக்கக் கூடிய நிலமை இல்லை. சஜித்பிரேமதாச எனக்கு சொன்ன பதிலில் இருந்துஅவர்மக்களுக்கு உதவிசெய்வார் என நம்புகின்றேன்.

அதே போன்று இங்கு முன்னர் நடந்த வீட்டுத்திட்ட கட்டுமானப் பணிகளும்அரைகுறையில்நிற்கின்றன. அதுதொடர்பாக பிரதேச செயலகத்தில் ஏதாவது தரவுகள் இருக்கின்றதோ தெரியவில்லை. இருந்தால் அதைக் கேட்டுப் பெற்று அதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் எடுக்க முடியும்.

இது போன்று இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தங்களுடைய கிராமங்களுக்குத் தேவையானவற்றைஉரிய முறையில் எழுத்து மூலமாக ஒப்படைத்தால் அந்த அபிவிருத்தித்திட்டங்களையும் நான் முன்னெடுக்கின்றேன்" என்றார். (21)

## விவசாயிகளின் தேவைகள் தொடர்பில் ஒருமாத கால செயற்றிட்டம்

யாழ்ப்பாணம். செப். 7
வடக்கு மாகாணத்தில் உள்ளவிவசாயிகளின்உடனடித் தேவைகளை நிறைவேற்றுவதற்கானஒருமாத கால செயற்திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுபற்றிஅமைச்சுமேலும் தெரிவித்ததாவது; வடக்கு மாகாணத்தில் உள்ள விவசாயிகள்பல்வேறுபிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இவர்களின் பிரச்சனைகள் நீண்ட காலத்தின் பின் தீர்வு கிடைக்ககூடியதாவும், உடனடியாகநிறைவேற்றக்கூடியதாகவும் உள்ளது. எனவே விவசாயிகளின் உடனடித் தேவைகளை இனம்கண்டுஅதனை எம்மிடம் உள்ள நிதியின் அளவுக்கேற்பஅவர்களுக்கான உதவிகளை, தீர்வுகளை வழங்கவுள்ளது. இதற்காக ஒருமாதகாலசெயற்பாடாக வடக்கு மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள விவசாயிகளின் தேவைகளை அறிந்து கொள்ளும் செயற்பாடு மாவட்ட மட்டத்தில் நடத்தப்படவுள்ளது. இதன் போதுவிவசாயிகளின்உடனடித் தேவைகள் இனம் கண்டு அதனை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது . பிரதேச மட்டத்திலும் இந்தச் செயற்பாடுகள்நடைபெறும் என்றது. (21-ரி)

## கணித வினாடி வினாப் போட்டியில் சம்பியனானது கிளிநொச்சி அணி

யாழ்ப்பாணம். செப். 7
வடக்குமாகாணக்கல்வித்திணைக்களத்தால் நடத்தப்பட்ட கனிஸ்ட பிரிவுக்கான மாகாண மட்ட கணித வினாடி வினாப் போட்டியில் கிளிநொச்சி வலய அணி முதலாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளது. நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இந்தப் போட்டி நடைபெற்றது.

போட்டியில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பன்னிரெண்டு கல்விவலய அணிகள் பங்கு கொண்டன.

இப்போட்டியில் இறுதிப் போட்டிக்குத் தெரிவான யாழ்ப்பாண வலய அணியினை வீழ்த்தி கிளிநொச்சி வலய அணி சம்பியனானது. தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள வடக்கு மாகாண அணிக்கு, கிளிநொச்சி மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த தரம் 6 மாணவன் தெ. திருக்குமரன் தெரிவாகியுள்ளார். இம்மாணவன் அண்மையில் நடைபெற்ற தேசியமட்ட கணித ஒலிம்பியாட் போட்டியில் தெரிவுசெய்யப்பட்டு சிங்கப்பூரில் நடைபெறவுள்ள சர்வதேசமட்டப் கணித ஒலிம்பியாட்போட்டியில்பங்குபற்றவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (ய)

### மகாவலி எல் வலயத்துக்கு தமிழர்களின் காணி பறிப்பு;

# ஆராய்ந்து முடிவு செய்ய அநுர திசாநாயக்க முல்லைத்தீவுக்கு வருகிறார்

முல்லைத்தீவு. செப்.6

மகாவலி எல் வயலத்திட்டத்துக்குள் அபகரிக்கப்பட்ட முல்லைத்தீவு கொக்கிளாய் மக்களுடைய காணிகளை ஆராய்வதற்கு மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் அநுர திசாநாயக்க முல்லைத்தீவுக்கு வரவுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் 12 ஆம் திகதி அவர் வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் தெற்கு மற்றும் கொக்குத்தொடுவாய் மத்தி ஆகிய கிராம அலுவலர் பிரிவிலுள்ள மக்களுக்குச் சொந்தமாக எரிஞ்சகாடு, குஞ்சுக்கால் வெளி, வெள்ளைக் கல்லடி போன்ற மானாவரி வயல் வெளிகளும், அடையகறுத்தான், தொண்டகண்டகுளம், பூமடுகண்டல், உந்தராயன்குளம், ஆமையான்குளம், கூமாவடிகண்டல் வெளி போன்ற நீர்ப்பாசன வயல் வெளிகளும் 1952 மற்றும் 1980ஆம் ஆண்டு காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தால் குறித்த மக்களுக்கு வழங்கப்பட்டன. 1984ஆம் ஆண்டு ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் அனைத்து மக்களும் அங்கிருந்து இடம்பெயர்ந்திருந்தனர். அவர்களுடைய ஆவணங்களும் தொலைந்தன. இந்த நிலையில் 1988 ஏப்ரல் 15 மற்றும் 2007 மார்ச் 09 ஆம் திகதிய வர்த்தமானிப் அறிவித்தலில் குறித்த பிரதேசம் 'மகாவலி " எல்" வலயம் என வெளியிடப்பட்டது. இதனால் அந்த காணிகளுக்குச் சொந்தமான மக்கள் பாதிக்கப்பட்டனர். கொக்கிளாய் பிரதேசத்தில் மீள் குடியமர்ந்த 164 குடும்பங்களின் 614 ஏக்கர் மானாவரி வயல் காணிகள், மற்றும் 835 ஏக்கர் வயல்நிலங்கள் "எல்" வலயங்களாக்கப்பட்டன. இந்த விடயம் நாடாளுமன்றுக்குக் கொண்டு செல்லப்பட்டது. மானாவரிக் காணிகளாக இருந்த 614 ஏக்கர் காணிகளுக்கும் உரிய மக்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்க மகாவலி இராஜாங்க அமைச்சர் சம்மதித்தார். வயல்காணிகளான 835 ஏக்கர் காணிகள் தொடர்பில் உரையாடி இறுதித் தீர்வு எட்டுவதாகவும் தெரிவித்திருந்தார். இன்றையதினம் அவர் முல்லைத்தீவுக்கு வந்து மாவட்டச் செயலாளர், பாதிக்கப்பட்ட மக்கள், பிரதேச செயலாளர் உள்ளிட்டவர்களைச் சந்தித்து கலந்துரையாடுவதாகவும் தெரிவித்திருந்தார். எனினும் மாவட்ட செயலாளர் பணி நிமித்தம் வெளிநாடு சென்றுள்ளதால் மேற்படி கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது.

தற்பொழுது 614 ஏக்கர் மானாவாரி வயல் காணிகளுக்கச் சொந்தமான 164 குடும்பங்களுக்கு 2013/01 சுற்றறிக்கைக்கு அமைய் தொலைந்த உத்தரவுப்பத்திரங்களுக்குப் பதிலாக புதிய உத்தரவுப்பத்திரங்கள் வழங்கப்படாதுள்ளன. ஆயன்குளம், முந்திரிகைக்குளம், மறிச்சுக்கட்டுக்குளம் போன்ற குளங்களின் கீழுள்ள 225 தமிழ் மக்களுக்குச் சொந்தமான 835 ஏக்கர் நீர்ப்பாசன வயல்காணிகள் இந்தப்பிரதேசங்களில் குடியமர்த்தப்பட்ட சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இந்தக் காணிகளுக்குச் சொந்தமான தமிழ்மக்கள் தமது வாழ்வாதாரத்துக்கான காணிகளை இழந்த நிலையில் மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றார்கள். எனவே 2013/01 சுற்றறிக்கைக்கு அமைய அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படாத 164 குடும்பங்களின் 614 ஏக்கர் மானாவாரி வயல்காணிகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவேண்டும். தற்போது சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள நீர்ப்பாசன வயல்காணிகள் மீளவும் தமிழ் மக்களுக்கு வழங்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டும் என நாடாளுமன்றத்தினூடாக நாடாளுமன்ற உறுப்பினர் இ. சாள்ஸ் நிர்மலநாதன் கோரிக்கை விடுத்திருந்தார். இதற்கமையவே மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் முல்லைத்தீவுக்கு வரவுள்ளார். எல் வலயத்துக்குள் அபகரிக்கப்பட்ட காணிகளையும் அவர் பார்வையிடுவார் என தெரிவிக்கப்பட்டது. (21-101)

---

# முஸ்லிம்களை தீவிரவாதிகளாக முத்திரை குத்தும் கலாசாரம் திட்டமிட்டு நடந்து வருகிறது

### சட்டத்தரணி மௌசூர் மௌலானா

யாழ்ப்பாணம், செப்.7

வடக்கு, கிழக்கில் முஸ்லிம்களை தீவிரவாதிகளாக முத்திரை குத்தும் கலாசாரம் பிராந்திய பன்னாட்டு நிகழ்ச்சி நிரலுடன் திட்டமிட்ட முறையில் இடம்பெறுகின்றது என சட்டத்தரணியும் சித்திலெப்பை ஆய்வுமையத்தின் தலைவருமான மௌசூர் மௌலானா தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் உத்தேச அரசமைப்பு முயற்சி குறித்த கருத்துப் பகிர்வு மற்றும் பிரகடன வெளியீடு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு 'வடக்கு, கிழக்கு இணைப்பும் முஸ்லிம்களும்' என்ற தலைப்பில் கருத்துரை வழங்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கில் முஸ்லிம்களை தீவிரவாதிகளாக முத்திரை குத்தும் கலாசாரம் பிராந்திய பன்னாட்டுநிகழ்சி நிரலுடன் இணைந்து இடமபெறுகின்றது. இதனால் ஒட்டுமொத்த தமிழ் பேசும் இனத்தவருடைய இருப்பும் கேள்விக்குட்படுத்தப்படும். இது திட்டமிட்ட முறையில் இந்த தேசத்தில் இடம்பெறுகிறது. இது பல்வேறு பன்னாட்டு அரசியல் மட்டத்துடன் தொடர்புபட்டுள்ளது. எனவே தமிழ் முஸ்லிம் தரப்பு இதில் மிகவும் நிதானமானவும் கவனமாகவும் இருக்க வேண்டும். இலங்கையில் தற்போதுபன்னாட்டு அரசியல் சர்வதேசத்தின் தலையீடுகள் அதாவது இந்தியா் அமெரிக்கா சீனா போன்ற நாடுகள் இங்கு விளையாடுகின்றது.

இந்த சித்து விளையாட்டுகள் மூலம் தமிழ் முஸ்லிம் உறவை பல துருவங்களாக்கி தொடர்ந்தும் விரிசல் நிலையில் வைத்திருக்க ஆசைப்படுகிறார்கள். வடக்கு கிழக்கில் தமிழர்களும் முஸ்லிம்களும் நிலத்தொடர்பற்ற விதத்தில் இணைந்து வாழ்கிறோம். முஸ்லிம்களை பன்னாட்டு ரீதியில் பயங்கரவாதிகளாக சித்திரிக்க வேண்டிய சர்வதேச பொறிமுறை பிராந்திய ரீதியில் இருக்கிறது.

சேதாரம் இல்லாத விட்டுக்கொடுப்பு என்ற ஒரு வார்த்தையை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அண்மையில் தெரிவித்திருந்தார். அவருக்கு சேதாரம் பற்றியும் புரியவில்லை செய்கூலி பற்றியும் புரியவில்லை.

செய்கூலி பற்றி உணர்ந்தவருக்கு தான் சேதாரம் பற்றிய வலி தெரியும். துரதிஸ்டவசமாக முஸ்லிம்களின் பிரதான அரசியல் கட்சியிடம் கருத்தியலும் இல்லை. வெறுமனே வாய்ச்சவால்களும் தேர்தலுக்கான உணர்ச்சி பூர்வமான அரசியல் கலாசாரமும் தான் இருக்கிறது என்றார். (ய-8-35)

---

## இருவர் காயம்

ஆலயத்துக்குச் சென்று இரவு வேளை வீடு திரும்பிய இருவர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் அவர்கள் காயமடைந்து புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது. இதில் புதுக்குடியிருப்பு வேணாவில் பகுதியைச்சேர்ந்த அருச்சுனன்.லோகதாசன்(வயது28) பஞ்சமுத்து தவராசா (வயது-32) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவராவர். உலகளந்தப் பிள்ளையார் ஆலய உற்சவத்தில் கலந்துகொண்டு விட்டு இரவு 11.30 மணியளவில் வீடு திரும்பிய வேளையே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆவா குழு என்று தங்களை அடையாளப்படுத்திய குழுவினரே கொட்டன்கள், இனும்புக் கம்பிகளால் தங்களைக் கடுமையாகத் தாக்கிவிட்டு தப்பிச் சென்று விட்டனர் என காயமடைந்தவர்கள் தெரிவித்தனர்.(21-108)

---

### பஸ் தரிப்பிடங்கள் அமைப்பதில் சிக்கல்

# நிதியை மாற்றுத் திட்டங்களுக்குப் பயன்படுத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப்.07

வடக்கு மாகாணத்தில் பேருந்து தரிப்பிடங்கள் சிலவற்றை அமைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதால் அந்த நிதியை மாற்றுத் திட்டங்களுக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று மாகாண போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் போக்குவரத்துத் துறையினை விரிவுபடுத்த நடப்பு வருடத்தில் 21 மில்லியன் ரூபா கிடைத்தது. அவற்றில் 5.பேருந்து நிலையங்களை புனரமைக்கும் பணிகளுக்கு 9 மில்லியன் ரூபாவும், புதிதாக 25 பேருந்து தரிப்பிடங்களை அமைப்பதற்கு தலா 5 இலட்சம் ரூபா வீதமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணிகளை வீதி அபிவிருத்தி திணைக்களத்துடன் இணைந்து அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 8 பேருந்து தரிப்பிடங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 5 பேருந்து தரிப்பிடங்களும், முல்லைத் தீவு மாவட்டத்தில் 6பேருந்து தரிப்பிடங்களும், வவுனியா மாவட்டத்தில் 5பேருந்து தரிப்பிடங்களும், மன்னார் மாவட்டத்தில் 7 பேருந்து தரிப்பிடங்களும் அமைக்கப்பதற்குதீர்மானிக்கப் பட்டது.

எனினும் சில மாவட்டங்களில் பேருந்து தரிப்பிடங்களை அமைப்பதற்கு மக்களின் ஒத்துழைப்பு போதாமல் உள்ளது. மக்கள் அதிகமாக பயன்படுத்தும் இடங்களில் பேருந்து தரிப்பிடங்கள் அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

எனினும், மக்கள் தமது காணி எல்லைகளுக்கு அருகில் பேருந்து தரிப்பிடங்களை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இந்தநிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 1பேருந்து தரிப்பிடமும், யாழ்ப்பாண மாவட்டத்தில் 5 பேருந்து தரிப்பிடங்களும் அமைக்கும் பணிகள் கைவிடப்பட்டுள்ளன.

எனினும், இதற்காக ஒதுக்கப்பட்ட நிதியை பேருந்து நிலையங்கள் புனரமைக்கும் பணிகளுக்குபயன்படுத்ததீர்மானிக்கப் பட்டுள்ளது.

இதன்படி யாழ்ப்பாண மாவட்டத்தில் நெல்லியடி பேருந்து நிலையம் 1 மில்லியன் செலவிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் முழங்காவில் பேருந்து நிலையம் 1 மில்லியன் செலவிலும், பளை பேருந்து நிலையம் 1.5 மில்லியன் செலவிலும், மன்னார் மாவட்டத்தில் முருங்கன் பேருந்துநிலையம்1மில்லியன் செலவிலும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் 4.5 மில்லியன் செலவில் கட்டுமான வேலைகள் நடைபெற்று வருகின்றன. இவ்வாறான பணிகளுக்கு இந்த நிதியை பயன்படுத்துவது சிறப்பாக அமையும்.

அத்துடன் அமைச்சுக்கு கொடுக்கப்பட்ட நிதி மீளவும் திரும்பிச் செல்லாமல் இருப்பதற்காக இந்த நிதி ஏனைய போக்குவரத்து சார்ந்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தவுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-ரி)

---

# இந்திய மற்றும் வெளியூர் வர்த்தகர்களை வடக்கு மாகாணத்தில் தடைசெய்யவேண்டும்

### மாகாணசபை உறுப்பினர் ஜெயசேகரம்

யாழ்ப்பாணம், செப்.7

வெளிமாவட்டத்தில் இருந்து முறையான அனுமதிபெறாத அங்காடிவியாபாரிகளையும், இந்தியவியாபாரிகளையும் வடக்கு மாகாணத்தில் தடைசெய்ய வேண்டும் என வலியுறுத்தி மாகாணசபையின் புதிய உறுப்பினர் ஜெயசேகரம் தனது முதலாவது பிரேரணையை முன்மொழியவுள்ளார். வடக்கு மாகாணசபையின் 105 ஆவது அமர்வு இன்றையதினம்அவைத்தலைவர்சி.வி.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

குறித்த அமர்வில் பிரேரணையை முன்மொழியவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவர் தனது பிரேரணையில் தெரிவித்திருப்பதாவது:

வடக்குமாகாணத்தில்மாநகரசபை, நகரசபைகள்மற்றும் பிரதேசசபைகளின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் நிரந்தர வர்த்தகர்களுக்கு இடையூறாக அவர்களது கடைகளுக்கு அருகாமையிலும், சந்திகளிலும், வீதி ஓரங்களிலும் வெளிமாவட்டத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள் தங்கள் வர்த்தக நடவடிக்கைகளை நடத்துகிறார்கள்.

இதனால் சகல வரிகளையும் செலுத்தி சட்டரீதியாக வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள நிரந்தர வர்த்தகர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாக்கி வருகின்றனர்.

எமது வர்த்தகர்களையும் எமது பொருளாதாரத்தையும் பாதுகாக்க வெளிமாவட்ட அங்காடி வர்த்தர்களையும், இந்திய வர்த்தகர்களையும் வடக்கு மாகாணத்தில் முற்று முழுதாக தடைசெய்ய வேண்டும்.

எனவே, இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு உள்ளூராட்சிஅமைச்சர்என்றவகையில்முதலமைச்சரையும் வடக்குமாகாண வர்த்தகமும்வாணிபமும்அமைச்சரையும் இந்தச் சபை கோருகின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-8)

# கூட்டு அரசின் ஆயுள் நிறைவு அமைச்சர்களும் பதவி இழப்பு

## 19ஆவது திருத்தத்தை கையிலெடுத்து ஜே.வி.பி. தலைவர் அநுர விளக்கமளிப்பு

கொழும்பு, செப். 7

கூட்டு அரசமைப்பதற்காக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் ஆயுள் காலம் முடிவடைந்துள்ளதால் அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் அமைச்சரவையின் எண்ணிக்கையை 30 ஆகக் குறைக்குமாறு மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்க சபையில் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்தின் (46) ஆவது சரத்தின்பிரகாரம் கூட்டு அரசு அமையும் பட்சத்தில் அமைச்சர்களின் எண்ணிக்கையை 30 இல் இருந்து 48 ஆகவும், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கையை 40 இல் இருந்து 45 ஆகவும் உயர்த்த முடியும்.

கூட்டு அரசை அமைப்பதற்குரிய யோசனை 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் 3 ஆம் திகதி தலைமை அமைச்சரால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டது. இரண்டுஆண்டுகளுக்கே செல்லுபடியாகும் எனக் கூறப்பட்டது. அதன் பின்னர் அரசியல் மேடைகளிலும் இரண்டு வருடங்களே அறிவிக்கப்பட்டது.

இந்த மாதம் 3 ஆம் திகதியுடன் இரண்டு வருடங்கள் முடிவடைந்து விட்டன. 19 ஆவதுதிருத்தச்சட்டத்தின் பிரகாரம் அதிகரிக்கப்பட்ட அமைச்சுகள் மற்றும், பிரதி, இராஜாங்க அமைச்சுகளின் எண்ணிக்கையை அரசு குறைக்கவேண்டும்.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுகளின் எண்ணிக்கையை 30ஆகவும், பிரதி, இராஜாங்க அமைச்சுகளின் எண்ணிக்கையை 40 ஆகவும் மட்டுப்படுத்த வேண்டும் - என்றார்.

இதற்குப் பதிலளித்த சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல, இது பற்றி அரசு விரிவானதொரு விளக்கத்தை வழங்கும் என்றதுடன் தேவையேற்படின் ஆயுளை நீடிப்பதற்குரிய பிரேரணையை சமர்ப்பிக்க முடியும் எனவும் கூறினார்.

அநுரகுமாரதிசாநாயக்கவின் கருத்துக்கள் சரியானவை என்று சுட்டிக்காட்டிப் பேசிய மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன, அதிகரிக்கப்பட்ட அமைச்சுகள் தற்போது அமைச்சுகளே அல்ல என்றும் சுட்டிக்காட்டினார். (5)

விளையாட்டுப் பயிலுனர் நேர்முகத் தேர்வு

## கடிதம் பிந்திக் கிடைத்தவர்களுக்கு நாளையே இறுதிச் சந்தர்ப்பம்



கொழும்பு, செப். 7

விளையாட்டுப் பயிலுனர் நேர்முகப் பரீட்சைக்கு உரிய திகதிக்குப் பின்னர் நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் கிடைத்தவர்கள், நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொழும்பில் நடைபெறும் நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ள முடியும் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கல்வி அமைச்சால் பாடசாலைகளுக்கு நியமிக்கப்படவுள்ள 3 ஆயிரத்து 850 விளையாட்டுப் பயிலுனர்களுக்கு நேர்முகப் பரீட்சை கல்வி அமைச்சில் நடைபெற்று வருகின்றது. இதற்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சை தினத்துக்குப் பின்னர் கடிதங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக எங்களுக்கு முறைபாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளது. இவர்களுக்கு கடிதத்தில் குறிப்பிட்டிருந்த ஆவணங்களுடன் சமூகம் வழங்க முடியாமல் போயும் உள்ளது. இவ்வாறு பாதிப்புக்கு உள்ளானவர்கள் நாளை காலை 9 மணிக்கு நடைபெரும் நேர்முகப் பரீட்சையில் கலந்துக் கொள்ள முடியும்.

மலையகம் உட்பட வடக்கு மற்றும் கிழக்கு பின்தங்கிய பகுதி விண்ணப்பதாரிகளுக்குக் கடிதங்கள் உரிய நேரத்தில் கிடைக்கவில்லை. தபால் விநியோகத்தில் ஏற்பட்ட தாமதம் காரணமாகும். இவர்களுக்கும் உரிய சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என்பதற்காக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை விண்ணப்பதாரிகள் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளவும். மீண்டும் ஒரு தினம் வழங்கபடமாட்டாது - என்றார். (5)

# படையினரைப் பாதுகாப்போம்

## அமைச்சர் மகிந்த அமரவீரவும் தெரிவிப்பு

கொழும்பு, செப். 7

நிபந்தனைகள் எதுவுமின்றி படையினரை அரசு பாதுகாக்கும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை சூரியவெள பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வின் பின்னர் பத்திரிகையாளர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்த போது அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சரத் பொன்சேகாவையும் நான் தேசத்துரோகியாகப் பார்க்கவில்லை. போரில் பெரியளவு சேவையாற்றியிருந்தார், காயமடைந்திருந்தார். அதேபோன்று ஜெகத் ஜயசூரியவையும் நான் அவ்வாறு பார்க்கவில்லை. ஏனைய அனைத்து படையினரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளனர்.

அரச தலைவரும் இலங்கை அரசும் இந்த அனைத்து படைவீரர்களுக்காகவும் நிபந்தனையின்றி குரல் கொடுக்கும், அவர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கும். சரத் பொன்சேகா வெளியிட்டு வரும் கருத்துக்கள் தொடர்பில் விரைவில் அவருடன் பேச்சு நடத்தப்படும் - என்றார். (5)


## மரண அறிவித்தல்

### திருமதி யோகராணி மரியதாஸ்



மிருசுவிலை பிறப்பிடமாகவும் கிளாலி, மிருசுவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி யோகராணி மரியதாஸ் 05.09.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான - பிலுப்பையா - இக்னேஸ்கியாப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற மரியதாஸ் அவர்களின் அன்பு மனைவியும், எட்மன் (UK), திரேஸ்ராணி (UK), ராஜி, றஞ்சினி, நேசன், தாசன் (பிரான்ஸ்), றஜனி (ஜேர்மனி), செபஸ்ரினா ஆகியோரின் அன்புத் தாயும், வாசுகி (லண்டன்), அன்ரன் (லண்டன் ) லோறன்ஸ், அகஸ்ரின், தாரணி, சங்கீதா (பிரான்ஸ்), பாலேஸ் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான நவமணி, கிறேஸ், சவுந்தரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மேரிறோஸ் (பூமணி) இன் மைத்துனியும், றொசானி, றொசாந், அபிஷா, மெல்வின், கிறிஸ்ரோ றெக்சி, றெக்சன், அடோனியா, பிறையன், யோஸ்னா, ஜொய்சன், அனோஷ், சஜீவன், அதிஷயன், ஐஸ்ஷரியன், மெரிஷா, ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

**கண்டி றோட்,**
**மிருசுவில்.**

**தகவல்**
**பிள்ளைகள்**

**077 714 3969**

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

### திருமதி ஆச்சிமுத்து கந்தையா



சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் வடக்கு சந்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆச்சிமுத்து கந்தையா நேற்று (06.09.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் கந்தையா (சோமு) வின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து சீதேவி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம், குமாரசாமி, இராசமணி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற லோகேஸ்வரி மற்றும் லோகேஸ்வரன், பத்மாவதி, ஜெகதீஸ்வரன், ரதிகாந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் குசலகுமாரி, மயில்வாகனம், ஜெயகௌரி, ஜெயராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா (சின்னவேலு), மகாலிங்கம்(மகான்) ஆகியோரின் மைத்துனியும் கிரிசங்கர், கார்த்திகா, கிரிசாந்த், கிரிதசன், ஜெயரூபன், லதாங்கி, ஜெயமயூரன், ஜெயலவீசன், துவாரகா, மதனிகா, கௌசிகா, விதுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2017) வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் வடக்கு வண்ணாத்திபாலம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சந்திரபுரம்,மட்டுவில் வடக்கு,**
**சாவகச்சேரி**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 888 1197**

## மரண அறிவித்தல்

### திருமதி கமலேஸ்வரி (ராதிகா) லோகானந்தன்



புங்குடுதீவு, கேரதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலேஸ்வரி (ராதிகா) லோகானந்தன் 04.09.2017 திங்கட்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் இராசரெத்தினம் - கமலாம்பிகை தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற கிருபானந்தன் மற்றும் இராஜேஸ்வரி (கனடா) தம்பதிகளின் அன்பு மருமகளும், லோகானந்தத்தின் அன்பு மனைவியும், வினேஷ் (மாணவன் - செட்டித்தெரு மெதடிஸ்த மிஷன் கலவன் பாடசாலை), விஷாலி ஆகியோரின் அருமைத் தாயாரும், கமலதாசன், விமல்ராஜ் ஆகியோரின் அன்புச் சகோதரியும்,துஷாந்தன் (கனடா), சுஹாசினி (சுவிஸ்), பிரதீபன், யாழினி (கனடா), சுகந்தினி, கஜேந்தினி ஆகியோரின் மைத்துனியும், திஷகுமார், ஹம்சிதா, பவித்ரா, யசோதரன் ஆகியோரின் சகலியும், நவீன், நிலா, தயாளன், டிஷான், மதுஷாந், சஸ்மிதா, கவிஷன், பேபிசாளினி, சுகானா ஆகியோரின் பாசமிகு அத்தையும், அநிகாவின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2017) வியாழக்கிழமை புங்குடுதீவில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**7ஆம் வட்டாரம், கேரதீவு,**
**புங்குடுதீவு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**கணவர் 076 845 3878,**
**துஷாந்தன் (மைத்துனர்) -1416 904 3719**

## இதய அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை

**தயானி சசிகரன்** அவர்களின் மாமியார்

**சுமதினி மகேந்திரநாதன்**

அவர்கள் 31.08.2017 இறைபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**பாடசாலை சமூகம்**

**யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை**

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை சக ஆசிரியை

**திருமதி சர்வலோகேஸ்வரி சிவானந்தம்**

அவர்களின் அன்புச் சகோதரி

**திருமதி வடிவாம்பிகை குணரட்ணம்**

13.08.2017 அன்று இறைபதமடைந்தார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பாடசாலை சமூகம்**

**யா/வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை.**

## அலோசியஸுக்கு அழைப்பாணை

பிணை முறிகள் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் விசாரணை செய்யும் அரச தலைவர் ஆணைக்குழு முன்னிலையில் வாக்குமூலம் வழங்குவதற்கு முன்னிலையாகுமாறு அர்ஜுன் அலோசியஸுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. அவருக்கு அதனை அறிவிக்கமுடியாமல் இருப்பதாக அதிகாரிகள் ஆணைக்குழுவுக்கு நேற்றுத் தெரிவித்துள்ளனர். இந்த அறிவித்தலை வழங்குமாறு அவரின் சட்டத்தரணிகளுக்கு ஆணைக்குழு அறிவித்துள்ளது. (5)

# முதலாம் ஆண்டு நினைவுதினம்



**திருமதி**

## சிவறஞ்சினி தயாளன்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01.03.1958 | 19.08.2016 |

எங்கள் குடும்ப குலவிளக்கு அணைந்து
ஆண்டொன்று ஓடி மறைந்தாலும் - உங்கள்
நினைவு எம்மனதை விட்டகலாது
ஆத்மா சாந்திபெற இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்


ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு.
(குளப்பிட்டி)

அன்புக் **கணவர்,**
**மாமி மற்றும்**
**குடும்பத்தினர்கள்.**

# மரண அறிவித்தல்

## வில்பிறட் யேசுதாசன் சூசைரட்ணம்

(ஓய்வு நிலை விரிவுரையாளர், தலைவர் வணிக முகாமைத்துவ பீடம் - வவுனியா வளாகம், யாழ் பல்கலைக்கழகம் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி , கிளிநொச்சி மாவட்ட வணிக கைத்தொழில் வேளாண் ஒன்றியம் அகில இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் வடக்கு கிழக்கு இணைப்பாளர்)



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் இறம்பைக்குளம் வவுனியா, வெள்ளவத்தை, கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட வில்பிறட் யேசுதாசன் சூசைரட்ணம் 03.09.2017 இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வில்பிறட் அஞ்சலீனாப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்ற வஸ்தியாம்பிள்ளை மற்றும் மேரிப்பிள்ளையின் அன்பு மருமகனும் கிறேசின் அன்புக் கணவரும் யூட்டொறிஸ், பற்றிக் ஜெராட்(விரிவுரையாளர், வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி), லூக்றீஷியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாஸ்கரன் (ஆசிரியர் வவுனியா இறம்பைக்குளம் மகளீர் மகாவித்தியாலயம்), நிர்மலா, ஜெசீந்திரன்(கணக்காளர், லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கோடினி, கிரிசாட், ஷபோன், அற்றீனா, தியோட்றா ஆகியோரின் பாசமிகு பேரனும் அருட்சகோதரர் மைக்கல் (அன்புப் பணிச்சகோதரர் சபை, மட்டக்களப்பு), சூசைநாதர் (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் நிறுத்தல், அளவை திணைக்களம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பயஸ், சிறில், ரதி, றீற்றா, பேணாட் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.09.2017) வியாழக்கிழமை அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு வவுனியா, இறம்பைக்குளம் தூய அந்தோனியார் ஆலயத்தில் மு.ப 11.00 மணிக்கு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியின் பின் இறம்பைக்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 11.05.1940 | 03.09.2017 |

இல - 57, சங்கரப்பிள்ளை வீதி,
இறம்பைக்குளம், வவுனியா.

தகவல்
குடும்பத்தினர்.

**0775204404/ 071 845 4038 / 077 138 4248/ 076 640 2154**

# பரீட்சைகள் திணைக்களத்தின் அவசர முடிவுகளால் பாடசாலை நிர்வாகத்துக்கு பெரும் நெருக்கடி

## இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 7

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் எடுக்கும் அவசர முடிவுகளால் மாணவர்களுக்கும் பாடசாலை நிர்வாகங்களுக்கும் பெரும் சிரமங்கள் ஏற்படுவதாக இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

அந்தச் சங்கத்தின் பொதுச் செயலர் மகிந்த ஜயசிங்க தெரிவித்திருப்பதாவது:

கண்டி விகாரமஹாதேவிக் கல்லூரி உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணிக்காக 18ஆம் திகதி வரை மூடப்படுமென அறிவிக்கப்பட்டது. பின்னர் அந்த முடிவு மாற்றப்பட்டு அந்தப் பணி டீ.எஸ். சேனநாயக்க கல்லூரிக்கு மாற்றப்பட்டது. இந்த மாற்றங்கள் குறித்து இரு கல்லூரி அதிபர்களுக்கும் எழுத்துமூல அறிவித்தல் கொடுக்கப்பட்டது. ஓரிரு தினங்களின்பின் பழையபடி விகாரமஹாதேவி கல்லூரியே இதற்கு ஒதுக்கப்படுமென தொலைபேசி மூலம் அறிவிக்கப்பட்டது. பரீட்சைகள் திணைக்களத்தின் இவ்வாறான அவசர முடிவுகளால் பாடசாலை நிர்வாகங்கள் பலத்த சிரமங்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. திணைக்களத்தின் இத்தகைய அறிவிப்புகளால் இரு கல்லூரிகளின் மாணவர்களும், ஆசிரியர்களும் மூன்றாம் தவணைக்கு கல்லூரிகளுக்கு வரவேண்டிய சரியான தினத்தைத் தெரிந்துகொள்ளத் தடுமாறுகிறார்கள் - என்றார். (5)

**பணியாளர் தேவை**

தன் காரியங்களைச் செய்யக்கூடிய வயதான அம்மாவிற்கு வீட்டிலேயே தங்கியிருந்து சமையல் மற்றும் பணிகளைச் செய்யக்கூடிய 45 வயதிற்கு மேற்பட்ட நல்ல பண்பான பெண்மணி தேவைப்படுகிறார்.
திருப்திகரமான சம்பளம் வழங்கப்படும்.

**077 413 7763**
நல்லூர்
(CS 7450/(14))

**காணி விற்பனைக்குண்டு**

புற்றளைப் பிள்ளையார் கோயில் ஆலயச் சூழலில் புற்றளை மகாவித்தியா லயத்துக்கு அருகில் மூன்று பக்கம் மதில் கட்டப்பட்ட மூன்று பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**077 744 8075**

**வேலையாள்கள் தேவை**

யாழ். நகரில் இயங்கும் பிரபல உணவகத் திற்கு கீழ்வரும் வேலையாள்கள் தேவை.
(ஆண்கள் மட்டும்)

01. காசாளர்
02. உணவு பரிமாறுபவர்கள்
03. பார்சல் கட்டுபவர்
04. சமையல் உதவியாளர்
05. ரொட்டி/றைஸ்/கொத்து போடுபவர்கள்

**தொடர்புகளுக்கு - 077 907 9888**

## வலிகாமம் வடக்குபிரதேசசபை - மல்லாகம் உப அலுவலகம்

**விண்ணப்பதாரர் :- கதிரவேலுசிறிகரன்**

வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 12,வல்லைறோட். ஆதன இலக்கம் 77/3 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் திருமதி.S.இரத்தினசிங்கம் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

இவ் ஆதனத்தை கட்டாரில் வசிக்கும் தளையசிங்கம் தவராஜ் அவரின் அற்றோனித்தத்துவக்காரரான தளையசிங்கம் ஜெயராஜ் ஊடாக பிரசித்த நொத்தாரிஸ் மு.சபாநாதன் முகதாவில் நிறைவேறிய 5165 / 16.09.2000 இலக்க அறுதி உறுதி மூலம் வழங்கியுள்ளார். இவ் உறு தியின் போது எழுதிய அற்றோனித்தத்துவம் தொலைந்து விட்டதென விண்ணப்பதாரரால் கூறப்படுகின்றது. பின்னர் பிரசித்த நொத்தாரிஸ் கு.விசுவலிங்கம் முகதாவில் நிறைவேறிய வெளிப்படு-த்தல் உறுதி இலக்கம் 7280/ 10.02.2017 மூலம் ஆதனத்தின் விஸ்தீரணத்தை உறுதிப்படுத்தியதுடன் தற்போது அளந்ததன் படி ஆதனத்தின் அளவு கூடுதலாக உள்ளது. இலக்கம் 7280/ 10.02.2017 உறுதியில் கதிரவேலு சிறிதரன் எனதவறாக எழுதப்பட்ட பெயரை பிரசித்த நொத்தாரிஸ் கு.விசுவலிங்கம் முகதாவில் நிறை வேறிய வெளிப்படுத்தல் உறுதி இலக்கம் 7310 / 01.03.2017 மூலம் கதிரவேலு சிறிகரன் எனதிருத்தி எழுதப்பட்டது.

**ஆதன விவரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம்வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் கோவிற்பற்று தொந்தனை இறை பரப்பு 03 குழி 16.45 தற்போது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் அ.லோகநாதன் அவர்களி னால் வரையப்பட்ட 394 / 06.02.2017 இலக்க நிலஅளவைப்படத்தின் படிதுண்டு 01 எனக் காட்டப்பட்ட நிலப்பரப்பு 04 குழி 9.85.

கிழக்கு- பத்துஅடிஅகலப்பாதையும் கணேஸ்வரனின் ஆதனமும்
வடக்கு- கிணறு தூர்வைநிலம் வழி வாய்க்காலும் இராசரத்தினத்-தின் ஆதனமும்
மேற்கு- புகையிரத பாதையை அண்மித்த நிலம்
தெற்கு- சீனியர் குணசிங்கத்தின் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை கதிரவேலு சிறிகரன் என்னும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப் பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்குபிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் வடக்குபிரதேசசபை,**
**காங்கேசன்துறை. (மல்லாகம்)**
**07.09.2017.**

## விலைக்கேள்வி கோரல்

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி.**

## வழங்கல் சேவைகள்

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவரினால் பாதுகாப்புச் சேவைக்கு குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன

| # | கேள்வி இலக்கம் | சேவை விவரம் | எண் | பிணை பணம் |
|---|---|---|---|---|
| 1 | NP/04/45/02/Sec/2017 | பாதுகாப்புச் சேவை (இரவு,பகல் - 05, இரவு மட்டும் 05) | 10 | 60,000.00 |

01. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

02. விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கண்டி வீதி கிளிநொச்சி (T.No: 021-228 5932 , FAX -021-228 5931).என்னும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்ப மொன்றை சமர்பித்து மீளளிக்கப்படாத வைப்புத்தொகையான ரூ.500.00 இனை காசாக செலுத்தி அலுவலக நாள்களில் காலை 9.00 தொடக்கம் பி.ப.15.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். விலைக் கேள்வி ஆவணங்கள் 07.09.2017 தொடக்கம் 27.09.2017 வரை வழங்கப்படும்.

03. விலைக்கேள்விகள் 28.09.2017 ஆம் திகதியன்று மு.ப.10.00 இக்கு முன்பதாக கிடைக்க கூடியவாறு **"தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, கண்டி வீதி கிளிநொச்சி"** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது இவ் அலுவலகத்தில் நிதிக்கிளையில் காணப்படுகின்ற பெறுகைப் பெட்டியிலோ இடப்பட வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும் விலைக்கேள்விகள் மூடியவுடன் சமுகமளித்திருக்கும் விலைகேள்வியாளர்களின் பிரதி நிதிகளது முன்னிலையில் உடனடியாகவே திறக்கப்படும்.

04. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் மேலதிக விவரங்களை நேரடியாக மேலே பந்தி 02 குறிப்பிடப்பட்ட முகவரியில் அலுவலக நாள்களில் காலை 9.00 – பி.ப.15.00 வரை பெற்றுக் கொள்ளலாம்.

05 மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்**
**பிராந்திய பெறுகைக் குழு**
**பிராந்திய சுகாதார சேவைகள்**
**பணிமனை,**
**கிளிநொச்சி.**
**06.09.2017**

## விலைக்கேள்வி கோரல்

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.**

## வழங்கல் சேவைகள்

***யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பிராந்திய* பெறுகைக் குழுவின் தலைவரினால் கீழ்வரும் சேவைகளுக்கு குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.**

| # | கேள்வி இலக்கம் | சேவை விவரம் | எண் | பிணைபணம் |
|---|---|---|---|---|
| 1 | NP/04/41/02/01/-Sec /2017 | பாதுகாப்புச் சேவை | 56 | 50,000.00 |
| 2 | NP/04/41/02/02/-cle /2017 | துப்பரவுச் சேவை | 42 | 30,000.00 |

01. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

02. விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகா தார சேவைகள் பணிப்பாளர். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம் (\T.No:\021-2222278, FAX - 021- 2229971). என்னும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்பித்து ஒவ்வொன்றுக்கும் தனித் தனியாக மீளளிக்கப்படாத வைப்புத் தொகையான ரூ.1,000.00 இனை காசாக செலுத்தி அலுவலக நாள்களில் மு.ப.9.00 தொடக்கம் பி.ப.15.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். விலைக்கேள்வி ஆவணங்கள் 08.09.2017 தொடக்கம் 28.09.2017 வரைவழங்கப்படும்.

03. விலைக்கேள்விகள் 29.09.2017 ஆம் திகதியன்று மு.ப.10.00 இக்கு முன்பதாக கிடைக்க கூடியவாறு **"தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்"** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது இவ் அலுவலகத்தில் நிதிக்கிளையில் காணப்படுகின்ற பெறுகைப் பெட்டியிலோ இடப்பட வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள் விகள் நிராகரிக்கப்படும். விலைக்கேள்விகள் மூடியவுடன் சமுகமளித்திருக்கும் விலைகேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் உடனடியாகவே திறக் கப்படும்.

04. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் மேலதிக விவரங்களை நேரடி யாக மேலே பந்தி 02 குறிப்பிடப்பட்ட முகவரியில் அலுவலக நாள்களில் மு.ப.9.00 – பி.ப.15.00 வரை பெற்றுக்கொள்ளலாம்.

05. மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**வைத்தியகலாநிதி க.நந்தகுமாரன்**
**தலைவர்,**
**பிராந்தியபெறுகைக் குழு**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை,**
**யாழ்ப்பாணம்.**
07.09.2017

## SLAS பயிற்சி வகுப்பு

SLAS (17.09.2017 இல் ஆரம்பிக்கவுள்ள) எதிர்பார்க்கை வினாக்கள் உள்ளிட்ட பயிற்சி வகுப்பும் புத்தக விற்பனையும் பின்வரும் ஒழுங்கில் நடைபெறும்.

| திகதி | | நேரம் | இடம் |
|---|---|---|---|
| 09.09.2017 | சனி | மு.ப 8.00 - பி.ப 5.00 | புதிய உயர் கல்லூரி ஆரியகுளம், யாழ்ப்பாணம் |
| 10.09.2017 | ஞாயிறு | மு.ப 8.00 - பி.ப 5.00 | சைவப்பிரகாச மகளிர் கல்லூரி வவுனியா |

(இலவச அச்சடித்த குறிப்புக்கள் வழங்கப்படும்)

| புத்தகத்தின் பெயர் | குறித்த விலை | விற்பனை விலை |
|---|---|---|
| பொது அறிவு | 900/= | 500/= |
| முகாமைத்துவ உளச்சார்பு | 350/= | 250/= |
| கட்டுரையும் கருத்தரங்கும் | 270/= | 200/= |

சிரேஷ்ட இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளாலும், பல்கலைக்கழக விரிவுரையாளர்களாலும் நடத்தப்படும்.

**கட்டணம் ஒரு நாளைக்கு 400/=**

**தொடர்பு: க.தெய்வேந்திரம் (SLAS)**
**077 781 1212/ 077 990 9265/ 077 083 0388**

### போர் முடிந்து 8 ஆண்டுகளின் பின்

# கொத்துக்குண்டு தடை உடன்பாட்டில் கைச்சாத்திட கொழும்பு இணக்கம்

கொழும்பு, செப். 7

கொத்தணிக் குண்டுகளைத் தடை செய்யும் பன்னாட்டுப் பிரகடனத்தில் இலங்கை இணைந்து கொள்ளும் என்று, ஜெனிவாவுக்கான இலங்கைத் தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் கடந்த திங்கட் கிழமை நடந்த கொத்தணிக் குண்டுகளைத் தடை செய்யும் பன்னாட்டுப் பிரகடனத்துக்கான அரச தரப்பு பிரதிநிதிகள் குழுக்களின் ஏழாவது மாநாட்டிலேயே தூதுவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

2011ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை, கொத்தணிக்குண்டுகளைத் தடை செய்யும் பிரகடன மாநாட்டில் கலந்து கொண்டு வருகிறது.

விரைவில் இந்தப் பிரகடனத்தில் கையெழுத்திடுவதாக இலங்கை உறுதியளித்திருப்பதைக், கொத்தணிக் குண்டுகளைத் தடை செய்வதற்கும், கண்ணிவெடிகளைத் தடை செய்வதற்கும் ஆதரவாகப் பரப்புரைகளை மேற்கொள்ளும் நாடுகளும் அமைப்புகளும் வரவேற்றுள்ளன.

இலங்கைக் கொத்தணிக் குண்டுகளை உற்பத்தி செய்வதோ ஏற்றுமதி செய்வதோ இல்லை என்ற போதிலும், இறுதிக்கட்டப் போரில் கொத்தணிக் குண்டுகளைப் பயன்படுத்தியதாகக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

## ஜெகத்தை மாட்டிவிட்ட இரு பெண்கள்

முன்னாள் இராணுவ தளபதி ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராகப் போர்க் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டதன் பின்னணியில், இரண்டு பெண்கள் உள்ளிட்ட நான்கு இலங்கையர்கள் உள்ளதாகப் பாதுகாப்புப் பிரிவை மேற்கோள்காட்டிச் சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. இவர்களில் ஒருவர் நீதிமன்றத்தினால் தீவிரவாத செயற்பாடு தொடர்பில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவராவார் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஜெகத் ஜயசூரியவுக்கு எதிரான குற்றச்சாட்டு ஐக்கிய நாடுகளின் முன்னாள் அதிகாரி யஸ்மின் சூக்காவின் சார்பில் பிரேசில் உள்ளிட்ட நாடுகளில் தாக்கல் செய்யப்பட்டது. இதற்கான நிதியுதவியை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியுள்ளதாகத் தெரியவந்துள்ளது என்றும் சிங்கள ஊடகம் அந்தச் செய்தியில் மேலும் கூறியுள்ளது. (5)

### பொலிஸார் மீது குற்றச்சாட்டு

# மருத்துவச் சிகிச்சைக்குச் சேர்த்த தர்மப் பணத்தை பிடுங்கியெடுப்பு

வாகன விபத்தில் சிக்கியதால் முறிந்துபோன பாதத்தைக் குணப்படுத்திக் கொள்வதற்காக அநுராதபுரம் புண்ணிய பூமியில் கடந்த பூரணை தினத்தன்று சிறிது சிறிதாக 720 ரூபா பணத்தைச் சேகரித்திருந்த 60 வயது மூதாட்டியிடமிருந்து பொலிஸார் பறித்தெடுத்துள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தத் துயரச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

அநுராதபுரத்தைச் சேர்ந்த கருணாவதி எனும் மூதாட்டி கணவருடன் தனியாக வாழ்ந்துவருகிறார். அவரது கணவர் விபத்தில் சிக்கி எழுந்து நடமாடமுடியாத நிலையில் உள்ளார். இந்த நிலையிலேயே மூதாட்டியும் வாகன விபத்தில் சிக்கியதால் அவரது வலது பாதத்தில் முறிவொன்று ஏற்பட்டது. அதைக் குணப்படுத்துவதற்கு 12 ஆயிரம் ரூபா வரை செலவாகுமென மருத்துவர்கள் கூறியிருந்தனர். தனக்கும் தனது கணவனுக்கும் உதவிசெய்ய எவரும் இல்லாததால் அவர் அநுராதபுரம் புனித பூமிக்கு வருபவர்களிடமிருந்து சிறிது சிறிதாகப் பணம் சேர்த்து வந்தார்.

கடந்த பூரணை தினத்தன்று அவர் 720 ரூபா பணத்தை சேகரித்துக் கொண்ட சமயம் அங்கு கடமையிலிருந்த பொலிஸ்காரர், புண்ணிய பூமியில் தர்மம் எடுக்கமுடியாதெனக் கூறி அவரைக் கைது செய்யப்போவதாக மிரட்டியிருக்கிறார். மூதாட்டி கெஞ்சி மன்றாடியும் சற்றும் இரக்கம் காட்டாத பொலிஸார், பணத்தைப் பிடுங்கிக்கொண்டு அந்தப் பெண்ணை அங்கிருந்து விரட்டியடித்திருக்கிறார்கள்

தாங்கள் நன்றாக இருந்த காலத்தில் தங்களது கிராமத்திலிருந்த ஏழை எளியவர்களுக்கு முடிந்தவரை உதவி செய்ததாகவும், இன்று தனது பாதத்தை சுகமாக்கிக்கொள்ளத் தாங்கு கட்டைகளுடன் தர்மமெடுத்து சேகரித்த பணத்தைத்தனதுமகனின் வயதுக்குசமானபொலிஸ்காரர் பறித்தெடுத்ததை தன்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை எனவும் கருணாவதி கண்ணீர் விட்டு அழுகின்றார். (5)

# லொத்தர் சபையின் தலைவர் பதவி நீக்கம்

கொழும்பு, செப். 7

அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர் ரொமேஸ் ஜயவர்தன பதவியிலிருந்து உடனடியாக நீக்கப்பட்டிருப்பதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த தேசிய லொத்தர் சபையும், அபிவிருத்தி லொத்தர் சபையும் மீண்டும் நிதியமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டதும் அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவரையும் பணிப்பாளர் சபையையும் பதவி விலகுமாறு நிதியமைச்சர் மங்கள சமரவீர உத்தரவிட்டிருந்தார்.

ரொமேஸ் ஜயவர்தன பதவி விலக மறுத்ததையடுத்து நிதியமைச்சர் சிறப்பு வர்த்தமானி அறிவித்தலொன்றின் மூலம் அவரைப் பதவி நீக்கம் செய்திருப்பதாக நிதியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புதிய பணிப்பாளர் சபை இன்னும் ஓரிரு தினங்களில் அமைச்சரால் நியமிக்கப்படுமெனவும்தேசிய லொத்தர் சபைக்கும் இன்னும்தலைவரொருவர் நியமிக்கப்படவில்லை எனவும்அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

லொத்தர் சீட்டு விற்பனை முகவர்கள்நிதிஅமைச்சுக்கு எதிராகப் போராட்டம் நடத்தத் திட்டமிட்டிருந்த நிலையில் இந்தப் பதவி நீக்கம் இடம்பெற்றுள்ளது. (5)

# பேர்ப்பச்சுவல் நிறுவனத்தின் சார்பில் தொடர்ந்து முன்னிலையாவதா விலகுவதா?

### இன்று முடிவை அறிவிப்பார் அதன் சட்டத்தரணி

கொழும்பு, செப். 7

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பில் பேர்ப்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின்சார்பில்ஆணைக் குழுவில் தொடர்ந்தும் முன்னிலையாவதா? அல்லது விலகிக்கொள்வதா? என்பதைப் பற்றிய முடிவை இன்று அறிவிப்பதாக அரச தலைவர் சட்டத்தரணி நிஹால் பர்னாந்து ஆணைக்குழுவின் முன்னிலையில் தெரிவித்துள்ளார்.

பேர்ப்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் பிரதம விற்பனை அதிகாரியான நுவன் சல்காது ஆணைக் குழுவில் முன்னிலையாகியிருந்தபோது அவர் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்த கணினி சாட்சியங்கள் அனைத்தும்போலியானவை என்பது நிரூபிக்கப்பட்டது.

போலி சாட்சியங்களின் மூலம் ஆணைக்குழுவையும், தன்னையும் ஏமாற்ற முயல்பவர்கள் சார்பில், தான் தொடர்ந்து முன்னிலையாவது பற்றி முடிவெடுக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆணைக்குழுவுக்குச்சமர்ப்பிக்கப்பட்ட கணினிப் பதிவுகள் போலியானவை எனவும், நுவன் சல்காதுவின் வேண்டுகோளின்படிமூலத் தரவுகள் மாற்றப்பட்டதாகவும் பேர்ப்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் தொலைத் தொடர்பு பிரிவின் நிறைவேற்று அதிகாரி சச்சின் மடுசங்க தேவதந்திரி தனது சாட்சியத்தில் தெளிவுபடுத்தியதையடுத்தே அரச தலைவர் சட்டத்தரணி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (5)

# யானைகள் ஏற்றுமதி யோசனைக்கு பலதரப்பும் எதிர்ப்புத் தெரிவிப்பு

கொழும்பு, செப். 7

இலங்கையில் இருக்கின்ற யானைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் அவற்றை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யலாம் என்று நாடாளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் ஊடகப் பிரதி அமைச்சர் கருணாரத்ன பரணவிதான தெரிவித்துள்ள கருத்துக்கு எதிர்ப்பு எழுந்துள்ளது.

ரத்தினபுரி, பலாங்கொட பகுதியில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் பரணவிதான இலங்கையில் அதிகபட்சமாக 4 ஆயிரம் யானைகள் மட்டுமே இருக்கலாம் என்று கூறினார். தற்போது இலங்கையில் 6 ஆயிரம் யானைகள் காணப்படுவது மிகப் பெரிய அதிகரிப்பு என்று குறிப்பிட்டார். இதனால்தான் யானைகளின் மூலம் பொது மக்களுக்கு ஏற்படும் ஆபத்துக்கள் அதிகரித்துள்ளது. எனவே, யானைகளை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யும் திட்டத்தை நடைமுறைபடுத்தலாம். இவ்வாறான திட்டங்களுக்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை என்று கூறினார்.

அமைச்சரின் இந்தக் கருத்துக்களுக்கு இலங்கை யானை உரிமையாளர்கள் சங்கத்தின் செயலர் தம்சிரி கருணாரத்ன எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். இலங்கையில் யானைகளின் எண்ணிக்கை பெருமளவு குறைந்து வருவதாகத் தெரிவித்துள்ளார். மனிதர்களின் நடவடிக்கை காரணமாக நாள் தோறும் பெரும் எண்ணிக்கையான யானைகள் இறந்து வருவதாகக் குற்றம்சாட்டிய அவர், தற்போது பெரஹரா போன்ற பௌத்த வழிபாட்டு நிகழ்வுகளுக்குப் பயன்படுத்தக்கூடிய 115 யானைகள் மட்டுமே இருப்பதாகத் தெரிவித்தார். யானைகளை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யும் திட்டத்தைத் தாங்கள் எதிர்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

> எமது நாட்டின் யானைகளை விற்பனை செய்யவோ, வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கவோ அனுமதிக்கப்போவதில்லை. சட்ட விரோதமாகக் காடுகளை அழிப்பது மற்றும் மனிதர்களின் பல மோசமான நடவடிக்கைகளால், யானைகள் இறந்து வருகின்றன.

அமைச்சர் பரணவிதானவின் கருத்துக்களுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள வன விலங்குகள் பாதுகாப்பு அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா, எமது நாட்டின் யானைகளை விற்பனை செய்யவோ, வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கவோ அனுமதிக்கப்போவதில்லை. சட்ட விரோதமாகக் காடுகளை அழிப்பது மற்றும் மனிதர்களின் பல மோசமான நடவடிக்கைகளால், யானைகள் இறந்து வருகின்றன. இந்த நிலையில் யானைகளை விற்பனை செய்ய முடியாது. அவற்றைப் பாதுகாக்கச் சிறப்புத் திட்டங்களை முன்னெடுத்துள்ளேன் - என்றார். (5)

# சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனிமைப்படுத்தப்பட்டுள்ளது



கொழும்பு, செப். 7

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 66ஆவது ஆண்டு நிறைவின்போது கெம்பல் மைதானத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்ததாக தென் மாகாண சபை உறுப்பினர் பத்தேகம சமித தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சி எப்போதும் நாட்டுப் பற்றுக் கொள்கையொன்றையே நடைமுறைப்படுத்தியது. ஆனால், இன்று எரிபொருள் நிரப்பு நிலையத்தைக் கூட வெளிநாட்டுக்கு விற்பனை செய்து வயிறு வளர்க்கும் இந்தக் கட்சியின் அமைச்சர்களுக்கு அமைச்சரவையில் பேச வார்த்தையின்றி வாய்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இந்தக் கட்சியின் உயிரோட்டம் இல்லாமல் போயுள்ளது - என்றார். (5)

# நெத்தலிக் கருவாட்டின் கட்டுப்பாட்டு விலை நீக்கம்

கொழும்பு, செப். 7

இறக்குமதிசெய்யப்படும் நெத்தலியின் உச்சபட்ச விலை நீக்கப்பட்டிருப்பதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதம் 27ஆம் திகதி தொடக்கம் தாய்லாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் நெத்தலியின் உச்சபட்ச சில்லறை விலை கிலோவொன்றுக்கு 490 ரூபாவாகவும், டுபாயிலிருந்து இறக்குமதி செய்யப்படும் நெத்தலியின் உச்சபட்ச சில்லறை விலை 405 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

அந்த நாட்டுச் சந்தையில் நெத்தலியின் விலை உயர்ந்திருப்பதால் கடந்த ஓகஸ்ட் மாதம் 30ஆம் திகதிமுதல் உள்நாட்டுச் சந்தையில் உச்சபட்ச சில்லறை விலைக் கட்டுப்பாடு நீக்கப்பட்டிருப்பதாகவும் அந்தச் சபை தெரிவித்துள்ளது. (5)

# ஆட்சியைப் பிடிக்க முன்னர் பதவியை தக்க வையுங்கள்

### ஊவா மாகாண எதிர்க்கட்சித் தலைவருக்கு முதலமைச்சர் 'அட்வைஸ்'

கொழும்பு, செப். 7
இரண்டு வாரங்களில் ஆட்சியைக் கைப்பற்றுவோம் என்று கூறிக் கொள்ளும் எதிர்க்கட்சித் தலைவர், முதலில் தனது எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பாதுகாத்துக் கொள்ளட்டும். இவ்வாறு ஊவா மாகாணசபையின் முதலமைச்சர் சாமரசம்பத் தெரிவித்தார்.

முதலமைச்சர் அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஊவா மாகாணசபையின் ஆட்சியை இரண்டு வாரங்களில் கைப்பற்றுவோம் என்று அந்த மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்திருந்தார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி செய்து வந்தாலும், அவர்கள் இரண்டு அணியாகப் பிளவடைந்துள்ளமையினால், ஐக்கிய தேசியக் கட்சி இரு வாரங்களில் ஆட்சி அமைக்கும் என்று அவர் கூறியிருந்தார்.

இந்தக் கருத்துக்குப் பதிலடி கொடுத்துள்ள முதலமைச்சர் சாமரசம்பத் மேலும் தெரிவித்ததாவது:

ஊவா மாகாண சபை எதிர்க் கட்சித் தலைவர் ஆர்.எம்.ரட்னாயக்க நிறைவேறாத கனவொன்றினைக் கண்டு கொண்டிருக்கின்றார். அது பகல் கனவாகவே அமையும். அவருக்கு ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது. அந்தப் பிரச்சினையை நிவர்த்தி செய்து அவரது மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சிக்கவேண்டும்.

20ஆவது திருத்தச் சட்டவரைவு ஊவா மாகாண சபையின் அனுமதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டபோது, அந்தத் திருத்தச் சட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சி சார்பான மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் ர.மு.ரட்னாயக்க எதிர்த்து வாக்களித்தார். அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போதிலும் அவரது கட்சி அங்கத்தவர்களை ஒரு நிலைப்பாட்டிற்கு கொண்டு வரமுடியாத நிலையிலேயே அவர் இருந்து வருகின்றார்.

இந்த நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி குறித்துப் பேசுவதற்கு எத்தகைய அருகதையும் அவருக்குக் கிடையாது. எமது முன்னணியினர் பல்வேறுவகையில் பிரிந்திருந்தாலும் பிரச்சினை என்று ஒன்று ஏற்படும்போது நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பீடம் மாகாண எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு சபையின் உறுப்பினர் ஜயந்தகன்னங்கராவை நியமிக்க நடவடிக்கை எடுத்து வருவதைக் கூட உணராமல் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் முதலமைச்சர் பதவிக்கு ஆசைப்பட்டுக் கொண்டு செயற்படுகின்றார் - என்றார். (5)

# இராஜதந்திர நெருக்கடியை சமாளிக்க தூதுவர்களைச் சந்திக்கிறார் மாரப்பன

கொழும்பு, செப். 7
போர் வடுக்களை ஆற்றுவதற்கான நீதிப்பொறிமுறைப் தொடர்பில் பன்னாட்டுச் சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளைமீறும் வகையில் அரசுக்குள் கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருவதால் அயலுறவுத் துறை அமைச்சு குழப்படைந்துள்ளது டன், கடும் இராஜதந்திர நெருக்கடியையும் எதிர்கொண்டுள்ளது. ஜெனிவாத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் கருத்தொருமைப்பாட்டை ஏற்படுத்திக் காத்திரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாததால் இலங்கையின் அயலுறவுத்துறைக் கொள்கை மீதும் விமர்சனக்கணைகள் தொடுக்கப்பட்டுள்ளன. இராஜதந்திர நெருக்கடியைச் சமாளிப்பதற்காகவும், பன்னாட்டுச் சமூகத்தின் உதவியை தக்கவைத்துக் கொள்வதற்காகவும் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள், இராஜதந்திரிகள், தூதுவர்கள் உட்பட வெளிநாட்டு சமூகத்தினரைச் சந்தித்து நடப்பு விவகாரங்கள் பற்றி அயலுறவுத்துறை அமைச்சரும் அதன் உயர்நிலை அதிகாரிகளும் விரைவில் தெளிவுபடுத்தவுள்ளனர். இதற்குரிய ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன என்று அயலுறவுத் துறை அமைச்சின் உயர் அதிகாரி 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

பன்னாட்டுச் சமூகம் அதிருப்தியடைந்திருந்த நிலையில் படையினருக்கு எதிரான போர்க்குற்ற விசாரணையை அடியோடு நிராகரிக்கும் வகையில் முப்படைகளினதும் பிரதானி என்ற வகையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவிப்பு விடுத்துள்ளதால் அது மேலும் அதிர்ச்சியைத் தோற்றுவித்துள்ளது. இதனால் ஏற்படும் நெருக்கடிக்களைத் தவிர்ப்பதற்காகவே அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன தெளிவுபடுத்தல் பணியை முன்னெடுக்கவுள்ளார். (5)




## ஆழ்கடல் ரோந்துக் கப்பலை இலங்கைக்கு வழங்கியது இந்தியா

கொழும்பு, செப். 7
இந்தியக் கடலோரப் பொலிஸார் வருண என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பலைக் கடலோரப் பொலிஸாரிடம் நேற்றுமுன்தினம் அதிகாரபூர்வமாகக் கையளித்தது.

கொச்சியில் உள்ள கடற்படைத் தளத்தில் நடந்த நிகழ்வில், இந்தியக் கடலோரப் பொலிஸ் பணிப்பாளர் ராஜேந்திர சிங், இந்தக் கப்பலை இலங்கைக் கடலோரப் பொலிஸ் படையின் பணிப்பாளர் றியர் அட்மிரல் சமந்த விமலதுங்கவிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் இலங்கைக், கடற்படையின் தலைமை அதிகாரி றியர் அட்மிரல் ரணசிங்கவும் கலந்து கொண்டார்.

பயிற்சி மற்றும் கண்காணிப்புப் பயன்பாட்டுக்காக இந்தக் கப்பலை இலங்கைக்கு வழங்கியுள்ளதாக இந்திய கடலோரப் பொலிஸ் படையின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்படைக்கு இந்தியக் கடலோரப் பொலிஸ் பயன்பாட்டில் இருந்த வரஹா என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பல் 2006ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமும், விக்ரஹா என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பல் 2008ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதமும் இந்தியாவினால் வழங்கப்பட்டது. (5)

### சந்தேகநபரைக் கைது செய்ய

## பிடியாணையுடன் சென்ற பொலிஸார் மீது சூடு

கொழும்பு, செப். 7
நீதிமன்றினால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட வரைக் கைது செய்யச் சென்ற பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. பதிலுக்குப் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட நபர், காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். அவர் கைது செய்யப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பதுளை மாவட்டத்தின் கந்தகெட்டிய பொலிஸ் பிரிவில் கடந்த திங்கட்கிழமை மாலை நடைபெற்றுள்ளது.

எரிபொருள் நிலையக் கொள்ளை, வீடுடைப்பு, வழிப்பறி, நிதிமோசடி போன்ற பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்ட சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளார். இவரைக் கைது செய்வதற்கு நீதிமன்றினால் பிடிவிறாந்து பிறப்பிக்கப் பட்டிருந்தது.

அவரைக் கைது செய்வதற்குப் பொலிஸார் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. இந்த நிலையில் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட நபர் தங்கியிருந்த இடம் தொடர்பில் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

பொலிஸார் அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்தனர். தேடுதலை ஆரம்பித்தனர். திடீரென பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. (5)

## நாடாளுமன்ற உணவகத்தில் சிற்றுண்டிகளின் விலைகள் உயர்வு

கொழும்பு, செப். 7
நாடாளுமன்ற சிற்றுண்டிச்சாலையில் நேற்று முன்தினம் முதல் உணவு விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் இந்தப் புதிய விலைகள் நடைமுறையாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இதுவரை 150 ரூபாவுக்கு வழங்கப்பட்டுவந்த ஒரு வேளை உணவு 200 ரூபாவாகவும், நாடாளுமன்ற ஊழியர்களுக்கு 120 ரூபாவுக்கு வழங்கப்பட்ட உணவு 250 ரூபாவுக்கும் எதிர்காலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

தேநீருக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் அறவிடப்பட்டு வந்த 25 ரூபா இனிமேல் 50 ரூபாவாகவும், ஊடகவியலாளர்களிடம் அறவிடப்பட்டு வந்த 15 ரூபா இனிமேல் 20 ரூபாவாகவும் உயர்த்தப்பட்டுள்ளன. ஒன்பது வருடங்களுக்குப் பிறகு உணவு விலைகள் மீளாய்வு செய்யப்பட்டிருப்பதாக நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (5)

## நூலிழையில் உயிர் தப்பினார் சப்ரகமுவ முதலமைச்சர்

கொழும்பு, செப். 7
சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் பயணித்த ஜீப் வாகனம் அவிசாவளை - கேகாலை வீதியில் பிட்டகல்தெனிய பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு விபத்துக்குள்ளானதில் வாகனச் சாரதி பலத்த காயங்களுக்குள்ளாகி கேகாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். முதலமைச்சருக்குத் தெய்வாதீனமாக எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. அந்தப் பாதையில் பயணித்த வேறொரு வாகனத்துடன் இவரது ஜீப் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டதாகவும் பிந்தெனிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். (5)

## மகனின் திருட்டுக்கு துணைபோன தாய்

### பொலிஸார் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 7
லிந்துல மொறாய நகர வர்த்தக நிலையங்களில் 4 லட்சம் ரூபாய் பணத்தைத் திருடிய குற்றச்சாட்டில் 12 வயது மதிக்கத்தக்க சிறுவனையும், அவனது தாயாரையும் லிந்துலை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சிறுவனிடமும் தாயிடமும் ஆரம்ப கட்ட விசாரணைகளை பொலிஸார் நடத்தினர்.

12 வயதுச் சிறுவன் வேலை செய்யும் வர்த்தக நிலையத்தில் பணம் திருடியமை உண்மை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. திருடிய பணத்தைச் சிறுவன் தாயிடம் கொடுத்துள்ளான். தாய் பணத்தொகையில் ஒரு பகுதியை வங்கியில் வைப்பு செய்துள்ளதாகவும் எஞ்சிய பணத்தொகையைத் தம்மிடம் வைத்திருந்துள்ளார்.

கைது செய்யப்பட்ட தாயையும் மகனையும் விளக்கமறியலில் வைத்துள்ள பொலிஸார் 14 வயதுக்குக் குறைந்த சிறுவனை வேலைக்கு அமர்த்திய குற்றச்சாட்டில் வர்த்தக நிலைய உரிமையாளருக்கெதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தனர். (5)

# ஜெகத் மீது குவியும் குற்றச்சாட்டுக்கள்

### சரத் பொன்சேகாவே இவற்றை முன்வைக்கிறார்

கொழும்பு, செப். 7
வெலிக்கடைச் சிறைச்சாலை மற்றும் ரத்துபஸ்வல துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் இராணுவச் சிப்பாய்களைத் துப்பாக்கிச் சூடு நடத்துமாறு கட்டளையிட்டும் முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜயசூரியவே என்று பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கிலும் தெற்கிலும் இடம்பெற்ற பல குற்றச் செயல்களுக்கு ஜெகத் ஜயசூரியவே காரணம். இது தொடர்பாகவே சாட்சியளிக்க நான் தயார் என்று கூறினேன்.

இதேவேளை, வெலிக்கடை சிறைச்சாலை அசம்பாவிதத்தில் உயிரிழந்தவர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. இழப்பீடு வழங்குவதாயின் அங்கு குற்றம் நடந்துள்ளது என்பதை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. அந்தக் குற்றத்தை இழைத்தவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் - என்றார். (5)

# சுமார் 30,000 மாணவர்கள் அனித்தாவுக்காக களத்தில்



சென்னை, செப். 6
தமிழக மாணவி அனித்தாவின் மறைவுக்கு நீதி கேட்டு தமிழக மாணவர்கள் தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.
சுமார் 30 ஆயிரம் மாணவர்கள் அனித்தாவின் மறைவுக்கு நீதி கேட்டு நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
இந்திய மைய அரசு அறிமுகப்படுத்திய நீட் தேர்வுப் பரீட்சையால், மருத்துவராக வேண்டும் என்ற தனது கனவு பொய்த்துப்போன விரக்தியில் தமிழக மாணவி அனித்தா கடந்த வெள்ளிக் கிழமை தவறான முடிவெடுத்து தனது உயிரை மாய்த்துக் கொண்டார். அனித்தாவின் இறப்புக்கு இந்திய மைய அரசு கொண்டுவந்த நீட் தேர்வே காரணம்.
அதை உடனடியாக விலக்கிக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்து தமிழகத்தில் தொடர்ந்து போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.
நெல்லை, பூம்புகார், சிதம்பரம், சென்னை, காரைக்கால், சிவகங்கை, பெரம்பலூர் ஆகிய இடங்களில் சுமார் 30 ஆயிரம் மாணவர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.
சென்னையில் நடைபெற்ற போராட்டத்துக்கு இயக்குநர் கௌதமன் நேரில் சென்று தனது ஆதரவைத் தெரிவித்தார். (ம)

## சோமாலியாவில் தாக்குதல்; 26 சிப்பாய்கள் பரிதாபச் சாவு

மொகதிசு, செப்.7
சோமாலியாவில் இராணுவ தளம் மீது அல் சபாப் ஆயுததாரிகள் நேற்று நடத்திய தாக்குதலில் 26 சிப்பாய்கள் உயிரிழந்தனர்.
சோமாலியாவில் அல் சபாப் ஆயுததாரிகள் செயல்பட்டு வருகின்றனர். அங்கு பல கிராமங்களில் இவர்கள் மத அடிப்படையிலான சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளனர். இந்த அமைப்பை அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட பல நாடுகள் தடை செய்துள்ளன.
சோமாலியாவின் தென் பகுதியில் உள்ள துறைமுக நகரான கிஸ்மாயு நகருக்கு அருகே அமைந்துள்ள ஜுபலாண்ட் இராணுவத் தளத்தின்மீது நேற்றுமுன்தினம் காலை நடத்தப்பட்ட தாக்குதலில் 26 சிப்பாய்கள் உயிரிழந்தனர்.
இந்தத் தாக்குதலுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று சோமாலிய இராணுவம் அறிவித்தது.
தேடுதல் பணிகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (ம)



### மியன்மாரில் இருந்து தப்பித்து

# 36,000 ரொஹிங்யர்கள் நேற்றுமுன்தினம் ஓட்டம்








நய்பியடா, செப். 7
மியன்மார் இராணுவத்தின் தாக்குதல்களை அடுத்து சுமார் 36 ஆயிரம் ரொஹிங்யர்கள் நேற்றுமுன்தினம் மட்டும் மியன்மாரில் இருந்து தப்பித்துச் சென்றுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.
மியன்மார் ஒரு பௌத்த நாடு. அந்த நாட்டின் ரக்கினோ மாநிலத்தில் சிறுபான்மையினராக ரொஹிங்யர்கள் வாழ்கின்றனர். அவர்களை மியன்மார் அரசு இனச் சுத்திகரிப்பு செய்கிறது என்று குற்றம் சுமத்தப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபையும் இதை உறுதிசெய்துள்ளது. ரொஹிங்ய மக்களுக்கு ஆதரவாக ஒரு ஆயுதக் குழு செயற்பட்டு வருகிறது. அந்தக் குழு கடந்த மாதம் 25ஆம் திகதி மியன்மார் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தியது.
இதையடுத்தே ரொஹிங்ய மக்கள் மீதான தாக்குதலை கடும்முனைப்பில் மேற்கொண்டு வருகிறது மியன்மார்.
இராணுவத்தின் தாக்குதலில் இருந்து தப்பிப்பதற்காக பல்லாயிரக்கணக்கான மக்கள் அன்றாடம் அகதிகளாக அயல்நாடான பங்களாதேஷுக்குத் தப்பித்துச் செல்கின்றார்கள். நேற்று முன்தினம் மட்டும் 36 ஆயிரம் ரொஹிங்யர்கள் பங்களாதேஷுக்குச் சென்றுள்ளனர் என்று சொல்லப்படுகிறது. கடந்த இரண்டு வாரங்க ளில் மியன்மாரில் இருந்து பங்களாதேஷுக்குத் தப்பித்துச் சென்றுள்ள அகதிகளின் எண்ணிக்கை சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் என்று கணக்கிடப் பட்டுள்ளது.

**ஆயிரம் ரொஹிங்யர்கள் இராணுவத்தால் கொலை**

மியன்மார் இராணுவம் மேற்கொண்டுவரும் சித்திரவதைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் மியன்மாருக்கான மனித உரிமைகள் கண்காணிப்பாளர் லீ தனது கவலையைத் தெரிவித்தார். "கடந்த 2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் மியன்மாரில் கலவரம் ஏற்பட்ட போது, சுமார் 70 ஆயிரம் முதல் 75 ஆயிரம் வரையிலான ரொஹிங்யர்கள் அகதிகளாக பங்களாதேஷுக்குச் சென்றனர். ஆனால் தற்போதைய சூழ்நிலை மிக மோசமாக உள்ளது. இதுவரை 150 ரொஹிங்யர்களே கொல்லப்பட்டனர் என்று சொல்லப்படுகிறது. ஆனால் சுமார் ஆயிரம் பேரோ அல்லது அதற்கும் மேலோ உயிரிழந்திருக்கலாம்" என் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# கென்யாவில் அடுத்த மாதம் மறுதேர்தல்

நைடொபி, செப். 7
கென்ய அதிபர் பதவிக்கான மறுதேர்தல் அடுத்த மாதம் 17ஆம் திகதி நடத்தப்படும் என அந்த நாட்டின் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. ஆபிரிக்க நாடான கென்யாவில் உகுரு கென்யட்டா அதிபராக பதவி வகித்தார். அவரது பதவிக்காலம் முடிவடைந்ததையொட்டி அங்கு அதிபர் தேர்தல் நடத்தப்பட்டது. அதில் அதிபர் கென்யட்டா மீண்டும் போட்டியிட்டார். அவரை எதிர்த்து எதிர்க்கட்சி சார்பில் ரெய்லா ஒடிங்கா களமிறங்கினார். அதிபர் கென்யட்டா வெற்றி பெற்றதாக மீண்டும் அறிவிக்கப்பட்டது. இதை எதிர்க்கட்சி வேட்பாளர் ஒடிங்கா ஏற்கவில்லை. தேர்தலில் முறைகேடு நடந்ததாகக் கூறினார். அதைத் தொடர்ந்து கென்யா தலைநகர் நைரோபி, கிசுமு, கிபேரா உள்ளிட்ட பல நகரங்களில் கலவரம் மூண்டது. தேர்தல் முடிவுகளை எதிர்த்து ஒடிங்கா கடந்த மாதம் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். தேர்தலில் அதிபர் வென்றதாக வெளியான முடிவுகள் பொய் எனவும் தேர்தலில் மோசடி நடந்திருப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டியிருந்தார்.
இதைத்தொடர்ந்து, ஒடிங்கா தொடர்ந்த வழக்குத் தொடர்பாக தீர்ப்பளித்த அந்நாட்டு உச்ச நீதிமன்றம், கென்யட்டா வெற்றி பெற்றது செல்லாது. 60 நாட்களுக்குள் அதிபர் தேர்தல் நடத்த வேண்டும் என தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட்டது. இதைத் தொடர்ந்து, அடுத்த மாதம் 17ஆம் திகதி அதிபர் தேர்தல் மீண்டும் நடைபெறவுள்ளது. (ம)



கென்யட்டா — ஒடிங்கா



## அமெரிக்காவை நோக்கி நகர்கிறது 'இர்மா' புயல்

வொஷிங்டன், செப். 7
வடக்கு அட்லாண்டிக் கடலில் புதிதாக உருவாகியுள்ள 'இர்மா' புய லால் அமெரிக்காவின் சில பகுதிகள் தாக்கப்படச் சாத்தியமு ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் ஏர் பட்ட ஹார்வே புயல் காரணமாக அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தின் பல்வேறு பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. பலர் உயிரிழந்துள்ள நிலையில் கோடிக் கணக்கான மதிப்பில் பொருட்சேதங்கள் ஏற்பட்டுள்ளன. வெள்ளத்தின் பாதிப்புகள் இன்னும் விலகவில்லை. இவ்வாறிருக்க தற்போது வடக்கு அட்லாண்டிக் பெருங்கடலில் புதிதாக புயல் ஒன்று உருவாகியுள்ளதாக அமெரிக்க வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. 'இர்மா' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த புயல் அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தைத் தாக்குவதற்கு சாத்தியமுள்ளது என்று கருதப்படுகிறது. (ம)



மற்றொரு ஏவுகணையை ஏவுவதற்கு

# தயாராகிறது வடகொரியா தென்கொரியா எச்சரிக்கை



சியோல், செப். 7
வடகொரியா மற்றுமொரு ஏவுகணைச் சோதனையை நடத்தவுள்ளது என்று அயல்நாடான தென்கொரியா தெரிவித்துள்ளது.

பன்னாட்டு சட்டதிட்டங்களை மீறி வடகொரியா அண்மையில் ஏவுகணைச் சோதனையொன்றை நடத்தியது. இந்த ஏவுகணை ஜப்பானுக்கு மேலாகப் பறந்தது. ஒரு நாட்டின் வான்பரப்புக்கு மேலாக மற்றொரு நாடு ஏவுகணைச் சோதனைகளை அதன் அனுமதி இல்லாமல் செய்ய முடியாது. எனவே இது பன்னாட்டுச் சட்டத்தை மீறிய செயல் என்று தெரிவித்து கடும் கொதிப்படைந்தது ஐக்கிய நாடுகள் சபை.

வடகொரியாவின் தொடர் ஏவுகணைச் சோதனைகள் காரணமாக உலக நாடுகள் அந்த நாட்டுக்கு எதிராகப் பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. குறிப்பாக அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் ஆகியன கூட்டாக இணைந்து வடகொரியாவுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகள் உள்ளிட்ட பல நடவடிக்கைகளை எடுத்துள்ளன. ஐக்கிய நாடுகள் சபை அண்மையிலும் வடகொரியாவுக்கு எதிராக மற்றொரு பொருளாதாரத் தடைத் தீர்மானத்தை நிறைவேற்றியது. இதன்படி வடகொரியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் நிலக்கரி, இரும்பு, கடலுணவு ஆகியன முடக்கப்பட்டுள்ளன.

இந்தப் பொருளாதாரத் தடை வடகொரியாவை மேலும் கட்டுப்படுத்தும் என்று கருதப்பட்டது. ஆனால் எதையும் கண்டுகொள்ளாமல் வழக்கம் போல தனது திட்டங்களை அரங்கேற்றிக் கொண்டுதான் உள்ளது வடகொரியா.

இந்த நிலையில் அந்த நாடு மற்றொரு ஏவுகணைச் சோதனையை நடத்தவுள்ளது என்று அது அணுவாயுதச் சோதனையாகவேனும் இருக்கலாம் என்றும் வடகொரியாவில் அயல்நாடும் பகை நாடுமான தென்கொரியா தெரிவித்தது. (ம)

## மோடி - ஜின் பிங் முக்கியச் சந்திப்பு



இந்தியத் தலைமை அமைச்சர் மோடி, சீன அதிபர் ஜி ஜின்பிங் இருவருக்கும் இடையில் நேற்று முன்தினம் சந்திப்பொன்று நடைபெற்றது.

இரு நாடுகளின் எல்லையில் தொடர்ந்து பதற்றம் நிலவிவரும் நிலையில் இந்தச் சந்திப்பு மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்று கருதப்படுகிறது.

இந்தியா - பூட்டான் - சீனா ஆகிய நாடுகளின் எல்லைகள் சந்திக்கும் இடம் சிக்கிம். இந்தப் பகுதியில் உள்ள டோக்லாம் என்ற இடம் தமக்குத்தான் சொந்தம் என்று மூன்று நாடுகளும் வலியுறுத்துகின்றன. கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் இந்தப் பகுதியில் சாலை அமைக்கும் திட்டத்தை முன்னெடுத்தது சீனா. இந்தியா எதிர்ப்புத் தெரிவித்தது. இந்தியாவின் எதிர்ப்பைக் கண்டு கொள்ளாத சீனா, இந்திய இராணுவத்தின் இரண்டு பதுங்கு குழிகளை அகற்றிவிட்டு சாலை அமைக்கும் திட்டத்தை முன்னெடுத்தது. இதையடுத்து ஏராளமான சிப்பாய்களை அங்கு குவித்தது இந்தியா. இதையடுத்து சீனாவும் ஏராளமான சிப்பாய்களை அங்கு நிறுத்தியது. அண்மையிலேயே குறித்த பகுதியில் முகாமிட்டிருந்த தமது சிப்பாய்களை திரும்பப்பெற இருதரப்பும் சம்மதம் தெரிவித்து திரும்பப் பெற்றன.

எனவே இந்தப் பதற்றமான பின்னணியில் இருநாடுகளின் தலைவர்களும் சந்திப்பார்களா என்பது தொடர்பில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. டோக்லாம் விவகாரம் தொடர்பி லும் ஆராயப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. (ம)



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# 20ஆவது திருத்தம் எழுப்பும் ஐயம்!

எதிர்ப்புகளைத்தொடர்ந்துஅரசமைப்பின்20ஆவதுதிருத்தத்தைமாற்றியமைப்பதற்குஅரசுஇணங்கிவிட்டது.ஒரே தினத்தில் அனைத்து மாகாண சபைகளுக்கும் தேர்தலை நடத்துவது,தேர்தல்திகதியைதேர்தல்ஆணையகமேதீர்மானிப்பது, மாகாணசபையை அதன் ஆயுட் காலத்திற்கு முன்னர்கலைக்க வேண்டிய நிலைஏற்பட்டால்அதன்எஞ்சியகாலத்திற்குமட்டுமாகஓர்இடைக்காலத்தேர்தலைநடத்துவதுஎன்பவற்றுடன் சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்ட ஒரு வருடத்திற்குள் அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தலை நடத்துவது ஆகியதிருத்தங்களைச்செய்வதற்குஅரசுஇணங்கியிருக்கிறது.

இந்த மாற்றங்களுடன் விரைவில் சட்டத் திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திருத்தம்நிறைவேறிவிட்டால்ஒருவருடகாலத்திற்கு எந்தவொரு மாகாண சபைக்கும் தேர்தல் நடக்காது.

மாகாணசபைகளுக்கு ஒருவருட காலத்திற்குத் தேர்தல் நடக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கான இந்தச் சட்டத் திருத்தத்தின் மீது அரசு காட்டும் அக்கறையே மற்றொரு கேள்வியை எழச் செய்கிறது.

புதிய அரசமைப்பு உருவாக்கம் அடுத்த ஒரு வருட காலத்திற்குள் நிறைவேறாதா என்பதே அந்தக் கேள்வி.

புதிய அரசமைப்பு 2016ஆம் ஆண்டுக்குள் நிறை வேற்றப்படும் என்கிற எதிர்பார்ப்பு இருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அதனை வெளிப்படையாகவே சொல்லிவந்தார். அதன் பின்னர் இந்த வருட இறுதிக்குள் அது நிறைவேற்றப்படும் என்று சொல்லப்பட்டது. அதுவும் நடக்கக்கூடிய சாத்தியக்கூறு இல்லை.

புதிய அரசமைப்புத் தொடர்பான வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கை இந்த மாதம் 21ஆம் திகதி அனேகமாகநாடாளுமன்றத்தில்முன்வைக்கப்படலாம்என்றுதெரிகிறது. அதன் மீதான விவாதம் ஒக்ரோபர் மாதத்தில் நடக்கலாம். அந்த விவாதத்தின் அடிப்படையில் திருத்தங்களும், வெட்டிக் குறைப்புகளுமாக இறுதி அறிக்கையைத் த்யார் செய்வதற்கே சில பல மாதங்கள் தேவைப்படும். எனவே இந்த ஆண்டு இறுதிக்குள்புதிய அரசமைப்பு மக்களின்கருத்தறிவுக்காக விடப்படும் சாத்தியங்கள் மிகக்குறைவே.

அதேநேரத்தில்இந்தமாதம்அல்லதுஅடுத்தமாதம்20ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டால் அடுத்து வருடம் ஓகஸ்ட் அல்லதுசெப்பெரம்பர்மாதத்திலேயேமாகாணசபைக்கான தேர்தல் நடக்கும்.

புதியஅரசமைப்புஉருவாக்கப்பணிகள்தற்போதையவேகத்தில் நகர்ந்தால் அடுத்த ஜனவரியில் இறுதி அறிக்கை தயாராகக்கூடும்என்றுஎதிர்பார்க்கலாம்.அதன்பின்னர்அதுபற்றிய தெளிவை மக்கள் பெறுவதற்கு ஒரு 6 மாத கால அவகாசம் கொடுத்துகருத்துக்கணிப்பைநடத்துவது என்றாலும் 2018 ஜுலைமாதத்தில்அதுநிறைவடையலாம்.அப்படி நடந்தால் அந்தப் புதிய அரசமைப்பு ஊடகவே மாகாண சபைத் தேர்தல்களை ஒழுங்குபடுத்த முடியும்.

அது வரைக்கும், பதவிக்காலம் முடிவடைந்தமாகாணசபைகளுக்கான தேர்தலை ஒத்தி வைப்பதற்கான அரசமைப்புத் திருத்தத்தை மட்டுமே நிறைவேற்றினால் போதுமானது. அப்படியிருக்கும்போது ஒரு வருட காலத்திற்கு மாகாண சபைத் தேர்தல்களை ஒத்திவைக்கும் திருத்தத்தில் அந்தத் தேர்தல் நடத்தப்படும் முறைமை குறித்தும் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக்கூறப்படுவது, புதிய அரசமைப்பு அடுத்தவருடமும்கூடநிறைவேற்றப்படாதுஎன்பதைஅரசு உணர்ந்திருப்பதால்தானோஎன்கிறஐயத்தைஎழுப்புகிறது.

அரசும்அதனுடன்சேர்ந்துபுதியஅரசமைப்புக்காகஉழைத்து வரும்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும்தான்இந்தஐயத்தைத் தெளிவுபடுத்த வேண்டும்.

இன்னும் எவ்வளவு காலத்திற்குத்தான் தமிழ் மக்கள் தீர்வு தீர்வு என்று காத்துக்கிடக்கவேண்டும் என்பதை அவர்கள் சொல்லவிட்டால் கொஞ்சம் நன்றாக இருக்கும்.



# வாய்ப்பேச்சால் பயனேதுமில்லை; நியாயமான செயற்பாடே தேவை

சிங்கள மூலம்: கீர்த்தி ரூபசிங்க
தமிழில்: வீஎஸ் ரீ

சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இருகட்சிகளும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட பாதையில் பயணிக்கும் இரு கட்சிகளே எனச் சிலர் கருதி வருகின்றனர். அதேபோன்று இந்தக் கட்சிகளின்தலைவர்கள்தாம்சார்ந்த கட்சிகளுக்கு உயிரைக் கொடுத்துழைக்கும் விசுவாசிகளாக இருக்கின்றனர் எனப் பலர் கருதி வருகின்றனர். ஆனால் நாட்டின் அரசியல் வரலாற்றை நோக்கும் போது இவை மிகைப்படுத்தப்பட்ட நம்பிக்கை என்பதை உணர இயலும்.

ஐ.தே.கட்சியிலிருந்து டி.ஏ.ராஜபக்சவுடன் வெளியேறிய எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயகா சுதந்திரக் கட்சியை நிறுவினார். அதிலிருந்துதான் இலங்கை அரசியலில் கட்சி விலகல் சம்பிரதாயம் ஆரம்பமாகியது. அந்த விதம் கட்சியை விட்டு வெளியேறிய அவ்விருவருக்கும் ஐ.தே.கட்சி "குறிசுட்டு" அடையாளப்படுத்திக் கொண்டது.

1972 ஆம் ஆண்டளவில் ஐ.தே. கட்சி, உட்கட்சி அதிகாரப் போட்டியால் தோல்வியுற்ற நிலையிலேயே இருந்து வந்தது. டட்லி சேனநாயகாவும் ஜே.ஆரும் தத்தமது அதிகாரத்தைப் பலப்படுத்தும் போட்டியைக் கடைசியில் நீதிமன்றம் மூலம் தீர்த்துக் கொண்டனர். அந்த வேளையில் ஜேர். ஆர். சுதந்திரக் கட்சியில் இணையவுள்ளார் என்றும் கதையொன்று உலவி வந்தது. அந்த அளவுக்கு அவ்விருவரிடையேயும் கடும் கருத்து மோதல்கள் தலைதூக்கியிருந்தன. கடைசியில் தாமும் "ஒறியினல் யூ.என்.பிக்காரர்" தான் என்ற விதத்தில்ஜே.ஆரும்தம்மைமுன்னிலைப்படுத்திவந்தார்.

ஆர்.பிரேமாதாசவை தனியன் யானை எனக் குறிப்பிட்டே ஐ.தே. கட்சி ஆதரவாளர்கள் அடையாளப்படுத்தி வந்தனர். ஐ.தே.கட்சியின் முன்னிலைத் தலைவர்களது பட்டியலில் பிரேமதாசவுக்குமுக்கிய இடம்அளிக்கப்பட்டு இருந்தது. ஆனால் 1972 ஆம் ஆண்டில் குடிமக்கள் முன்னணி என்ற அமைப்பை உருவாக்கி பிரேமதாச தமது அரசியல் பயணத்தை முன்னெடுத் தார். வீடமைப்புத்துறை அமைச்சர் என்றவகையில் பச்சை நிறத்தில்வெளிர் மஞ்சள் நிறத்தையும் இணைத்து தமது குடிமக்கள் முன்னணி அமைப்பை நிறுவி ஐ. தே. கட்சிக்குள் தாம் தமக்கெனத் தனிப்பயணத்தை முன்னெடுத்தார்.

> உலகுக்கே உதாரணம் காட்டும் வகையில் நாட்டைக் கட்டியெழுப்ப பிரதான கட்சிகள் இரண்டும் ஒன்றிணைந்து மேற்கொள்ளும் அரசியல் பயணம் பெறுமதியானது. துரதிஷ்டவசமாக எம்மில் பலர் இதற்கு எதிராகச் செயற்படுகின்றனர். ஆனால் சிரமமான செயற்பாடு அது.

### ஜே.ஆரை மிரட்டாமல் மிரட்டிய பிரேமதாசவின் உத்தி

அடுத்து வரவிருந்த அரச தலைவர் பதவிக்கான தேர்தலில் வேட்பாளர் நியமனம் தமக்குக் கிட்டாது போகுமானால், அடுத்ததாகத் தாம் முன்னெடுக்கும் நடவடிக்கை குறித்த சமிக்ஞையைபிரேமதாச வெளிப்படுத்திய பாணி அது. லலித் அதுலத் முதலியும் காமினி திசநாயகவும் ஜே.ஆருக்குத் தண்ணி காட்டிவிட்டு முன்னேறி வந்த வேளை, பிரேமதாசவும் நாட்டின் ஏழை எளிய மக்களது அபிமானத்தலைவரானார்.

ஐ.தே.கட்சி சார்பான அரசுத்தலைவர் தேர்தல் வேட்பாளராக பிரேமதாசவை அறிமுகப்படுத்தியதோடு, பிரேமதாச, ஏழைகளின் மனதைக் கவர்ந்த தலைவரென ஜே.ஆர்.பகிரங்கமாகப் புகழாரமும் சூட்டத் தவறவில்லை. அந்தவிதம் அவர் தம்மைக் கட்சியின் வேட்பாளராக நியமிக்காது விட்டால், அதற்காக மாற்று வழியை முன்னேற்பாடாக பிரேமதாச மேற்கொண்டு வைத்திருந்தார். காமினி திசநாயகவும் லலித் அதுலத் முதலியும் ஐ.தே. கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டபோது அவ்விருவரும் சுதந்திரக் கட்சியில் இணையப் போவதாகவே பலரும் நம்பினர். ஆனால் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி என்றபெயரில் கட்சியொன்றை நிறுவிச் செயற்பட்டதன் மூலம் குறிப்பிட்ட ஒரு காலத்துக்காவது அவர்கள் ஐ.தே. கட்சியினின்றும் விலகியிருந்தனர்.

### தந்தையாரின் பிறந்த வீட்டுக்குச் செல்வதாகக் காரணம் காட்டினார் அனுரா

சுதந்திரக் கட்சியின் முடிக்குரிய இளவரசராயிருந்தஅனுராபண்டாரநாயகவின் உடம்பில் ஓடுவது நீல நிறக் குருதியேஎன்ற கதையும்சிங்களமக்கள் மத்தியில் உலவி வந்ததுண்டு. ஆனால் இடையில் எனது தந்தையா

ரின் பிறந்த வீட்டுக்குச் செல்கின்றேன் எனக் கடிதம் அனுப்பிவிட்டு சுதந்திரக் கட்சியைவிலகி ஐ.தே.கட்சியில்அனுரா இணைந்து கொண்டார்.

சந்திரிகா சுதந்திரக்கட்சி என்ற மரத்தின் நடு வைரம் போன்று செயற்பட்டவர். அவரும் கூட வேறு கட்சி யொன்றை உருவாக்கியவரே. 2005 ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் மகிந்தவுக்கு ஆதரவளிக்காது ரணிலுக்கு மறைமுக மாக ஆதரவளித்தாக சந்திரிகா குறித்து விமர்சிக்கப்பட்டதுண்டு. 2015 ஆம் ஆண்டின் தேர்தலின் வெளிப்படையா கவே அவர் சுதந்திரக் கட்சிக்கு எதிராக ஐ.தே.கட்சிக்கு ஆதரவளித்தார்

1982 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி அரச தலைவர் தேர்தல் வேளையில்அனுராபண்டாரநாயக்கா, மைத்திரிபால சேனநாயக்கா தரப்பினர் கள் சுதந்திரக்கட்சி வேட்பாளர் ஹெக்டர் கொப்பேகடுவைத் தோற்கடிக்கும் நோக்குடன் ஐ.தே. கட்சி வேட்பாளர் ஜே.ஆருக்கே ஆரதவாகச் செயற்பட்ட னர். இதன் காரணமாக சுதந்திரக் கட் சிக்கு நாட்டு மக்கள் மத்தியல் இருந்து வந்த மதிப்பு வீழ்ச்சி கண்டது. பசில் ராஜ பக்ச, மைத்திரிபால சேனநாயக, பி. பி.ஜி.கலுகல்ல, எஸ்.டி.ஆர்.ஜயரத்ன போன்ற அவ்வேளைய சுதந்திரக் கட்சி அரசியல் பிரமுகர்கள் ஐ.தே.கட்சியின் வேட்பாளர் ஜே.ஆருக்கு ஆதரவாகப் பகிரங்கமாகவே பரப்புரை செய்தனர். அன்று சுதந்திரக் கட்சி சார்பாக அரச தலைவர் வேட்பாளரைத் தோற்கடித்து சுதந்திரக் கட்சியைக் காப்பாற்றுமாறு பரப்புரை செய்த பசில் ராஜபக்ச தரப்பி னர். இன்று சுதந்திரக் கட்சியின் முன்ன ணித் தலைவர்களாகத் தம்மை நிலை நிறுத்த முயல்கின்றனர்.

**முதன்மைக் கட்சிகள் இரண்டின் மத்தியில் வேற்றுமையிலும் ஒற்றுமை**

அந்த வகையில் சுதந்திரக்கட்சி மற்றும் ஐ.தே. கட்சி ஆகியவை வேறுபாடுகள் கொண்ட இரு கட்சிகள் எனக் கூறினா லும் இவ்விருதரப்பினர்கள் மத்தியிலும் நெருங்கிய இணக்கம் நிலவுகிறது. ஆரம்பத்தில் டி.எஸ்.சேனநாயக்காவிடம் ஐ.தே.கட்சியின் தலைமைப்பொறுப்பை மகன் ட்டலி சேனநாயக்காவிடம் கைய ளிக்காது எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டார நாயக்காவிடம் கையளித்திருந்தால் இன்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி யென்று ஒன்று இருந்திருக்க மாட்டாது. ஏனெனில் ஐ.தே.கட்சி உருவாக்கப் பட்ட வேளை ஜே. ஆரை விட பண்டார நாயக்காவுக்கே முக்கியத்துவம் வழங் கப்பட்டிருந்தது. பண்டாரநாயக்கா கட்சி யின் உப தலைவராகப் பதவி வகிக்க, ஜே.ஆர். வெறும் உப பொருளாளரா கவே பதவி வகித்தார். அந்த வகையில் ஐ.தே.கட்சியின் ஆரம்பகாலத்தில் பண் டாரநாயக்கா அந்தக் கட்சியின் முக்கிய தலைவராக விளங்கியிருந்தார்.

அந்த வகையில் நோக்கும்போது மேற் குறிப்பிட்ட இவ்விருகட்சிகளுக்கிடையே காணக்கூடிய இணைப்புப் போன்றே, காணஇயலாத இணைப்புக்களும் பல வுள்ளன. காரணத்துடனேயோ, காரண மின்றியோ தற்போது மக்கள் பல்வேறு தரப்புக்களாகப் பிளவுபட்டுள்ளனர்.

**ஆண்ட தரப்புக்கள் மத்தியிலான பிணக்கே நாட்டைக் குட்டிச்சுவராக்கியது**

அறுபது ஆண்டுகள் காலத்துக்கு மேலாக இந்தப் பிளவு, நாட்டைப் பின் னோக்கி இட்டுச் சென்றுள்ளது. நல்லி ணக்க அரசு 'அச்சாறு' போலாகியுள்ள மைக்குக் காரணம், பல பிரிவுகளாகப் பிளவுபட்டுப் போயுள்ளமை கண்டு திருப்தியுறும் மனிதர்களே.

ஒன்றிணைந்து பய ணிப்பதென்பது





இதுவரை எமக்கு முன்பின் தெரியாத தொன்று. சர்வஜன வாக்குரிமைப் பலத்தை ஈட்டிய ஆசியாவின் முதலா வது நாட்டவர்கள் இலங்கையர்கள் ஆனபோதிலும், தற்போதும் கூட, மனிதவாழ்க்கை 'பிரிவினை' என்றஅத் தியாயத்துள் சிறைப்பட்டுள்ளது. இந்த அரசை நாளை கவிழ்த்துவிடுவோம். அடுத்த மாதத்துள் கவிழ்த்து விடுவோம் என்று மார்தட்டும் நபர்கள்தான், இந்த நல்லிணக்க முயற்சியை நாசமாக்குப வர்கள்.

நல்லிணக்கத்தின் பெறுமதியை உண ராதவர்களே, என்ன செய்தாவது இந்த அரசைக் கவிழ்க்காததேன் என அங்க லாய்க்கிறார்கள். அதுசரி, இந்தக் கூட்டு அரசைக் கவிழ்த்துவிடக் கங்கணம் கட்டி நிற்கும் இந்தத் தரப்பினரது எதிர் பார்ப்புத்தானென்ன?

உண்மையில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கிலேயே இவர்கள் இத்தனை தூரம் தலையால் கிடங்கு கிண்ட முயல்கின்றனர்.


**அரசில் இணைந்து செயற்படும் சுதந்திரக் கட்சி அமைச்சர்களது மன ஆதங்கம்**

"முன்னர் அமைச்சர்களாகப் பதவி வகித்தநாம், தற்போது இந்தஐ.தே.கட்சி காரர்களின் கீழ் பிரதி அமைச்சர்களாக இருக்க நேர்ந்துள்ளது. இதை எம்மால் பொறுத்துக் கொள்ள இயலாது. எமது ஆளை தலைமை அமைச்சராக்கியே ஆக வேண்டும்" என அரசில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சிப் பிரதி அமைச்ச ரொருவர், கூட்டு எதிரணித் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரொருவரிடம் தமது மனக்குறையைக் கொட்டித் தீர்த் துள்ளார். அதற்கு அந்த நாடாளுமன்ற உறுப்பினரோ "அரசில் அங்கம் வகிக் கும் சுதந்திரக் கட்சித் தரப்பினர் துணிச்ச லோடு அரசிலிருந்து வெளியேறி எமது பக்கம் வந்தால் நாளையே 'ஆட்சி அதி காரம் எமது கையில்' என்று பதிலளித் தாராம்.

உலகுக்கே உதாரணம் காட்டும் வகை யில் நாட்டைக் கட்டியெழுப்ப முதன் மைக்கட்சிகள் இரண்டும் ஒன்றிணைந்து மேற்கொள்ளும் அரசியல் பயணம் பெறுமதியானது. துரதிஷ்டவசமாக எம் மில் பலர் இதற்கு எதிராகச் செயற்படு கின்றனர். ஆனால் சிரமமான செயற் பாடு அது. சுதந்திரக் கட்சியிலிருந்து விலகிச் செல்ல முயல்வோரை டிசெம்பர் மாதம் வரை பொறுமை காக்குமாறு அரச தலைவர் கோருகிறார். தலைமை அமைச்சரோ "2020 ஆம் ஆண்டு வரை இந்த அரசை நிர்வகிக்கத் தமக் குப் பலமுள்ளதெனவும், புரட்சியொன் றின் மூலமே வேண்டுமா னால் அரசைக் கவிழ்க்க முடியும் எனவும் கூளுரைக் கிறார். சமாதானமும் சுபீட்ச மும் நிலவும் நாடொன்றில் வாழ்வதற்கான நிலையை உருவாக்குவதா? இல் லையா? என்பது குறித்து நாட்டு மக்களே முடிவு செய் தாக வேண்டும். அதை விடுத்து எந்தக் கதையைக் கூறுவதாலும் பயனேதும் கிடையாது.'

> நல்லிணக்கத்தின் பெறுமதியை உணராதவர்களே என்ன செய்தாவது இந்த அரசைக் கவிழ்க்காததேன் என அங்கலாய்க்கிறார்கள். அதுசரி இந்த கூட்டு அரசைக் கவிழ்த்துவிடக் கங்கணம் கட்டி நிற்கும் இந்தத் தரப்பினரது எதிர்பார்ப்புத் தானென்ன? உண்மை யில் ஆட்சி அதிகாரத் தைக் கைப்பற்றும் நோக்கிலேயே இவர்கள் இத்தனை தூரம் தலையால் கிடங்கு கிண்ட முயல்கின்றனர்.





## ஆசிரியருக்கான கடிதம்

### செயல் வீரர்கள் தேர்ந்தெடுக்கப்படல் அவசியம்

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர் தல்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் இடம்பெறுமென ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது. எமது நாட் டின் ஜனநாயக ரீதியான அமைப்புக்க ளில் உள்ளூராட்சிச் சபைகள் மிகவும் பழைமையானவை. சுமார் 30 ஆண்டு களுக்கு முன்னர் கிராமசபை, பட்டின சபை, நகர சபை, மாநகர சபையென நான்கு வகையான பிரிவுகளைக் கொண்டதாக உள்ளூராட்சிச் சபைகள் வகுக்கப்பட்டிருந்தன. பின்னர் கிராம சபைகளையும், பட்டின சபையும் இணைந்து பிரதேச சபையாகத் தோற் றம் பெற்றது. நகர சபையும், மாநகர சபையும் மாற்றம் எதுவுமின்றி இயங்கி வருகின்றன.

மக்களுடன் நேரடியான தொடர்புகளை உள்ளூராட்சி சபைகளே கொண்டுள் ளன. மக்களின் அத்தியாவசியமான தேவைகளும் உள்ளூராட்சிச் சபைக ளின் மூலமாகவே நிறைவேற்றி வைக் கப்படுகின்றன. வீதிகளை அமைத் தல் மற்றும் செப்பனிடல், கழிவகற்றல், குடிதண்ணீர் விநியோகம், சந்தை களைப் பராமரித்தல், கழிவு நீர் வடிந் தோடுவதற்கான ஏற்பாடுகளை மேற் கொள்ளல், சைக்கிள் வண்டிகளுக் கான உரிமத் தகடுகளை வழங்குதல், வியாபார நிலையங்கள் மற்றும் தொழிற்சாலைகள் இயங்குவதற் கான அனுமதியை வழங்குதல் ஆகி யவை உள்ளூராட்சிச் சபைகளின் முக்கிய பணிகளாகும்.

தேர்தல்கள் மூலமாகத் தெரிந்தெடுக் கப்படுகின்ற உள்ளூராட்சிச் சபைக ளுக்கான உறுப்பினர்கள் நேர்மையா கவும் திறமையாகவும் செயற்படும் போதுதான் உள்ளூராட்சி மன்றங்க ளால் சிறப்பாகச் செயற்பட முடியும். ஆனால் உள்ளூராட்சி மன்றங்களின் கடந்த கால வரலாறு வெறுப்பைத் தரு வனவாகவே அமைந்துள்ளது. மக்க ளின் பிரச்சினைகள் உரிய வகையில் கவனிக்கப்படவில்லை. மக்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் தமக்குள் மோதிக் கொண்டனரே தவிர, மக்க ளின் சிரமங்கள் குறித்து அக்கறை காட்டியதில்லை. இதனால் இவர்கள் மீது மக்கள் வெறுப்பின் உச்சத்துக்கே சென்றுவிட்டனர்.

இம்முறையாவது தகுதியுள்ளவர்கள் வேட்பாளர்களாக நியமிக்கப்பட வேண்டும். அவர்கள் மக்களுடன் பழகி அவர்களின் குறைகளைத் தீர்க்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். பணவசதி காரணமான செல்வாக்கு உள்ளவர்கள் தெரிவு செய்யப்படு கின்றதவறான நடைமுறைகளைந்தெறி யப்படல் வேண்டும்.

மா.பொன்ராசா,
உடுவில்.

# ஆண்டு ரீதியான பணவீக்கம் ஓகஸ்டில் 6 வீதமாக அதிகரிப்பு

| ஆண்டு | மாதம் | விலைச்சுட்டெண் | அனைத்துப் பொருள்கள் | | | உணவுப் பொருள் | | | உணவல்லாப் பொருள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மாதம் மீதான மாத மாற்றம் (%) | பணவீக்கம் (%) ஆண்டு ரீதியான மாற்றம் | பணவீக்கம் (%) அசையும் சராசரி (12 மாதங்கள்) | மாதம் மீதான மாத மாற்றம் (%) | பணவீக்கம்(%) ஆண்டு ரீதியான மாற்றம் | பணவீக்கம்(%) அசையும் சராசரி (12 மாதங்கள்) | மாதம் மீதான மாத மாற்றம் (%) | பணவீக்கம்(%) ஆண்டு ரீதியான மாற்றம் | பணவீக்கம்(%) அசையும் சராசரி (12 மாதங்கள்) |
| 2016 | ஜூன் | 113.2 | 1.5 | 5.5 | 3.0 | 5.0 | 9.8 | 4.2 | 0.1 | 3.8 | 2.5 |
| | ஜூலை | 113.9 | 0.6 | 5.8 | 3.4 | 2.3 | 11.7 | 5.0 | -0.1 | 3.5 | 2.8 |
| | ஓகஸ்ட் | 112.1 | -1.6 | 4.4 | 3.7 | -4.5 | 8.3 | 5.5 | -0.4 | 2.8 | 3.0 |
| | செப்ரெம்பர் | 111.8 | -0.3 | 4.2 | 3.9 | -1.6 | 7.5 | 5.9 | 0.4 | 2.9 | 3.2 |
| | ஒக்ரோபர் | 112.1 | 0.3 | 4.1 | 4.0 | 0.6 | 6.9 | 6.2 | 0.1 | 2.9 | 3.2 |
| | நவம்பர் | 113.6 | 1.3 | 4.0 | 4.0 | 0.6 | 4.3 | 6.1 | 1.6 | 3.9 | 3.2 |
| | டிசெம்பர் | 114.7 | 1.0 | 4.5 | 4.0 | 0.8 | 4.1 | 6.1 | 1.0 | 4.5 | 3.1 |
| 2017 | ஜனவரி | 116.1 | 1.2 | 5.5 | 4.3 | 1.6 | 4.5 | 6.4 | 1.1 | 6.0 | 3.5 |
| | பெப்ரவரி | 116.7 | 0.5 | 6.8 | 4.6 | 1.2 | 7.7 | 6.9 | 0.2 | 6.4 | 3.8 |
| | மார்ச் | 116.5 | -0.2 | 7.3 | 5.0 | -0.7 | 9.2 | 7.4 | 0.1 | 6.5 | 4.1 |
| | ஏப்ரல் | 117.1 | 0.5 | 6.9 | 5.3 | 1.7 | 8.6 | 7.5 | 0.1 | 6.3 | 4.5 |
| | மே | 118.2 | 0.9 | 6.0 | 5.4 | 2.3 | 9.3 | 7.6 | 0.3 | 4.6 | 4.5 |
| | ஜூன் | 120.1 | 1.6 | 6.1 | 5.5 | 4.8 | 9.1 | 7.6 | 0.3 | 4.8 | 4.6 |
| | ஜூலை | 119.4 | -0.6 | 4.8 | 5.4 | -1.7 | 4.8 | 7.0 | -0.2 | 4.7 | 4.7 |
| | ஓகஸ்ட் | 118.8 | -0.5 | 6.0 | 5.5 | -2.5 | 6.9 | 6.9 | 0.5 | 5.7 | 4.9 |

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் அலகு மேற்கொண்ட மதிப்பீடுகளின் படி கடந்த ஓகஸ்ட் மாதத்தில் ஆண்டு ரீதியான பணவீக்கப் பெறுமானம் 6 வீதமாக அமைந்துள்ளது. அதேபோன்று கடந்த ஜூலை மாதத்தில் ஆண்டு ரீதியான பணவீக்கப் பெறுமானம் 4.8 வீதமாகக் காணப்படுகிறது.

உணவுப் பிரிவுக்கான ஆண்டு ரீதியான பணவீக்க கணிப்பீடுகளை நோக்குமிடத்து கடந்த ஜூலை மாதத்தில் காணப்பட்ட பணவீக்க பெறுமதி 4.8 வீதத்திலிருந்து அதிகரித்து கடந்த ஒகஸ்ட் மாதத்தில் 6.9 வீதமாகப் பதிவாகியுள்ளது.

உணவல்லாப் பிரிவுக்கான ஆண்டு ரீதியான பணவீக்க கணிப்பீடுகளை நோக்குமிடத்து இதே காலப்பகுதிக்கான பணிவீக்கமானது 4.7 வீதத்தில் இருந்து அதிகரித்து ஓகஸ்ட் மாதத்தில் 5.7 வீதமாகப் பதிவிடப்பட்டுள்ளது.

மேலும் ஓகஸ்ட் மாதத்தில் உணவுப் பொருள்கள் மூலமான ஆண்டு ரீதியான பணவீக்க மாறுதல்களுக்கான பங்களிப்பு 2.07 வீதமாகவும் உணவல்லாப் பொருள்களின் பங்களிப்பு 3.96 வீதமாகவும் காணப்படுகிறது. இந்த மாற்றங்களின் முதன்மைக் காரணிகளான கல்வி 0.90 வீதம், சுகாதாரம் 0.55 வீதம், போக்குவரத்து 0.46 வீதம், இதர பொருள்கள் மற்றும் சேவை 0.44 வீதம், தொடர்பாடல் 0.43 வீதம், மதுபானங்கள் மற்றும் புகையிலை விற்பனை 0.36 வீதம், உணவகங்கள் மற்றும் ஹோட்டல் துறை 0.34 வீதம், உடுபுடவை மற்றும் காலணிவகைகள் 0.11 வீதம் மற்றும் பொழுதுபோக்கு கலாசாரம் 0.03 வீதம் என்ற விதமாக அதிகரித்தும் அதேவேளை வீடமைப்பு மற்றும் நீர், மின்சாரம், எரிவாயு மற்றும் பிற எரிபொருள்கள் 0.02 வீதமாக குறைவடைந்தும் தங்களது பெறுமான மாற்றங்களைப் பதிவு செய்துள்ளன. (ஓ)

# செலுத்தப்படாத வரிப்பணத்தில் 45 வீதத்தை தள்ளுபடி

## மோட்டார் போக்குவரத்து திணைக்களம் நடவடிக்கை

சொகுசு வாகனங்களுக்கு இதுவரைகாலமும் செலுத்தப்படாத வரிப்பணத்தில் இருந்து 45 வீதத்தை இல்லாமல் செய்வதற்கு மோட்டார் போக்குவரத்து திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது குறித்து கருத்துரைத்துள்ள மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் ஜகத் சந்திரசிறி.

"சொகுசு வாகனங்களுக்கான வரிப்பணத்தை நீண்ட காலமாக வாகன உரிமையாளர்கள் செலுத்தவில்லை. வாகன உரிமையாளர்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய வரிப்பணத்தில் 50 வீதம் குத்தகையாக செலுத்த வேண்டியுள்ளது. அந்த வரிப்பணத்தில் 5 வீதத்தை மாத்திரம் அறவிடுகிறோம்"- என்றார்.

இந்தச் சலுகை கடந்த முதலாம் திகதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. (ஓ)




# மொத்த உள்நாட்டு உற்பத்தி நிதிப் பற்றாக்குறையை சமநிலைப்படுத்த நடவடிக்கை

## அமைச்சர் மங்கள சமரவீர கருத்து

"நடப்பாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் நிதிப் பற்றாக்குறையை சமநிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்டுள்ள நிதிப் பற்றாக்குறையை 3.5 வீதம் குறைக்க தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பான கலந்துரையாடல்கள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் மாலை தீவுகளுக்கான உலக வங்கி பணிப்பாளர் திருமதி சிரிதிஹோவை ஆகியோரிடையே அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து கருத்துரைத்துள்ள அவர்,

"உலகவங்கியின் இயக்குநர் சிரிதிஹோவை நாட்டின் தற்போதைய மற்றும் முன்மொழியப்பட்ட திட்டங்களுக்கு உதவி புரிந்துள்ளார். உலக வங்கியிடம் இருந்து நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவு ஆகியவற்றை பெறுவது குறித்து இரு திட்டங்களை அவர் முன்மொழிந்துள்ளார். தவிர சமூகப் பாதுகாப்பு



வலையமைப்புத் திட்டமானது உலக வங்கியிடம் இருந்து வழங்கப்பட்டு வருகிறது. இதற்கு முன்பாக கடந்த 2014 ஆம் ஆண்டு தொடக்கம் நடப்பாண் டின் தற்போது வரையான காலப்பகுதிவரை இலங்கைக்கு 660 மில்லியன் ரூபா தொகை மதிப்பீடு உடைய நிதி உதவியை சர்வதேச அபிவிருத்தி வங்கி வழங்கியுள்ளது" - என்றார். (ஓ)

# சனச அபிவிருத்தி வங்கியின் 'ரெலி கலக்ஷன்' செயற்றிட்டம் ஆரம்பம்

## வாடிக்கையாளர்களுக்கு பின்னூட்டம் வழங்க நடவடிக்கை

SDB bank
Leads the Nation

சனச அபிவிருத்தி வங்கியில் இருந்து கடன் வசதியைப் பெற்ற வாடிக்கையாளர்களிடம் இருந்து கடன் தொகையை மீள அறவிடும் விருத்தி செய்யப்பட்ட 'ரெலி கலக் ஷன்' என அழைக்கப்படும் புதிய செயற்றிட்டம் ஒன்றை வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த முறை மூலம் வாடிக்கையாளர்கள் தாம் செலுத்த வேண்டிய தொகை பற்றிய பின்னூட்டலை பெற்றுக் கொள்ள முடியும். குறித்த திகதியில் கடனை மீளச் செலுத்தத் தவறிய அனைத்து வாடிக்கையாளர்களையும் அடையாளம் கண்டு கொள்வதும், பின்னூட்டல் செய்வதும் இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகக் காணப்படுகிறது.

கடன் தொகையின் மீள் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய திகதியிலிருந்து மேலும் நான்கு நாள்கள் சலுகைக் காலமாக (Grace Period) வழங்கப்படும். பின்னூட்டல் முறை மூலம் ஐந்தாவது நாள் தொடக்கம் வாடிக்கையாளர் செலுத்த வேண்டிய கடன் தொகை தொடர்பாக தொலைபேசி மூலம் ஞாபகமூட்டல் செய்யப்படும். இதற்கு மேலதிகமாக கடனை மீளச் செலுத்தாதமைக்கான காரணங்கள் பற்றியும் அவர்களிடம் கேட்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கடன் தொகையை அல்லது மாதாந்தக் கொடுப்பனவுகளைச் செலுத்த முடியாது வாடிக்கையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவர்கள் தெரிவிக்கும் காரணங்கள் பற்றியும் கவனம் செலுத்தி வரும் வங்கி அவற்றுக்குப் பொருத்தமான தீர்வுகளையும் வழங்கி வருகிறது.

இந்தப் புதிய செயற்றிட்டம் குறித்து கருத்துத் தெரிவித்துள்ள சனச அபிவிருத்தி வங்கியின் கடன் மீள் அறவிடல் முகாமையாளர்; எஸ்.எச்.எஸ்.ஐ.உதயங்கன,

"கொடுப்பனவுகளை மேற்கொள்ளத் தவறும் வாடிக்கையாளர்களுக்கு, இந்தச்சேவை மூலம், முறையான அறிவுறுத்தல்கள் பெற்றுக் கொடுக்கப்படும். உரிய நேரத்தில் தகவல்களைப் பெற்றுக் கொடுத்து கடன் தொகையை முறையாகச் செலுத்த தேவையான பின்னணியை ஏற்படுத்திக் கொடுப்பதே எமது நோக்கமாகும்" - என்றார்.

நாடு முழுமையுமாக 91 கிளைகளைக் கொண்ட சனச அபிவிருத்தி வங்கி ஆரம்பிக்கப்பட்டு 20 வருடங்கள் பூர்த்தியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ)







# கடற்பாசி வளர்ப்பு

## வாழ்வாதாரம் பேணும் ஆதாரம்

எட்வின்

யாழ்ப்பாணத்தில் ஆரம்ப காலங்களில் அவ்வளவு பரீட்சையமில்லாத ஒரு தொழிலாக கடல் பாசி வளர்ப்பு இருந்தது. ஆனாலும் தற்போது பாசி வளர்ப்புப் பற்றிய விழிப்புணர்வு முதலீட்டாளர்களிடமும், சுய தொழில் முனைவோரிடமும் காணப்படுகிறது. கடற்பாசி வளர்ப்பின் மூலம் வாழ்வாதார, பொருளாதார முன்னேற்றங்களை சமனிலையோடு பேணிக் கொள்ள முடியும். இது வரவேற்கத்தக்க முன்னேற்றம். அதற்கான பின்னூட்டங்கள் அனுகூலம் தருகின்றன.

**தொழில் ஆளுமைப் படிமங்கள்**

நீர் தேக்கமுறுகின்ற நிலம் சார்ந்து படர்ந்து காலைப் பற்றி வழுக்குகின்ற பாசி என இதனை அலட்சியம் செய்து கொள்ளல் ஆகாது. வாழ்வியல் முன்னேற்ற இலட்சியத்துக்கு உகந்தது என்பதை உணர்ந்தும் புரிந்தும் கொள்ள வேண்டும். வாழ்வாதாரத்தின் எண்ண வடிவமாக்கிக் கொள்ள வேண்டும். எல்லாத் தொழில் ஆளுமைப் படிமங்கள் போலவும் இங்கு நன்மை தீமை, நெளிவு சுளிவு, பணி ஆர்வம், பணிக் கூர்மை என்ற எல்லாமே தேவையாக உள்ளன. இந்த விடயங்களையே தனது தொழில் பாங்காக ஏற்றுக்கொண்டுள்ளார் வல்வெட்டித்துறையை சேர்ந்த நாகராஜா.

**உழைப்பு**

"இந்தக் கடற்பாசி குறுகிய காலத்தில் பலன் தரக்கூடியது. கிட்டதட்ட 45 நாள்கள் போதுமானது. அதாவது புரொயிலர் கோழியின் வளர்ப்புக்கு ஒப்பானது இந்தப் பாசி வளர்ப்பு. கடல் தொழில் செய்து கொண்டே பாசி வளர்ப்பை மேற்கொள்வதால் வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியும்" என்ற வார்த்தைகள் கொண்டே அவருடைய முயற்சிகள் பூத்திருந்தன. அவருடனான உரையாடல் அற்புதமாக அமைந்திருந்தது. பாசியைப் போல மென்மையாகவும், அர்த்தங்களின் தன்மையாகவும் இதம் தந்தன. பாசி, உரையாடல் நாழிகையிடை தலைகோதி வாழ்வாதாரத்தின் பசியைத் தந்தது. அவர் மொழிந்த உரையாடல் செழுமையைப் பற்றி நீங்களும் உணருங்கள். முடிந்தால் முயல விளைந்து உழையுங்கள்.

**பெறுபேற்றின் விடை காணல்**

**கேள்வி:** கடல் பாசி வளர்ப்பினை எல்லாக் கடலிலும் செய்ய முடியுமா..?

**பதில்:** இல்லை. பாசி வளர்ப்பானது ஆழமான கடல் பகுதிகளில் குறிப்பாக பருத்தித்துறை கடல், வல்வெட்டித்துறை கடல் பிரதேசங்களில் வளர்க்க முடியாது. காரைநகர், தீவுப்பகுதி, பூநகரி, எழுவைதீவு பிரதேசம் சார்ந்த ஆழமற்ற கடல்களில் இவற்றை வளர்க்க முடியும். இங்கு எட்டு வகையான பாசிகள் ஒன்றாகச் சேர்த்து வளர்க்கப்படுகின்றன. இவை மூன்று முறைகளில் வளர்க்கப்படுகின்றன. அவற்றுள் முதன்மையான முறையாக இலங்கையில் மூங்கில்த்தொட்டி பாசி வளர்ப்பு முக்கியத்துவம் பெறுகிறது. அதனையே பெரும்பாலானோர்மேற் கொண்டு வருகின்றனர்.

**கே:** தொட்டி அமைக்கப்படும் முறை பற்றி கூறுங்கள்..?

**ப:** தொட்டி அமைப்பு எனும் போது அதற்கு முதன்மை மூலப்பொருள்களாக மூங்கில் கம்புகள் மற்றும் வலைகள் பயன்படுகின்றன. மூங்கில் தொட்டி அமைப்பு முறையில் மூங்கில் கம்புகளை வைத்து சுற்றி வர வலையினால் கட்ட வேண்டும். குறிப்பாக அறுகோண வடிவத்தில் இந்தத்தொட்டியை அமைத்து அதற்கு கீழாகவும் வலை கட்டப்பட்டும். இதன்மூலம் மீன்களிடம் இருந்து ஏற்படும் பாதிப்பைக் குறைக்கலாம். இந்த வளர்ப்பு முறையில் பாசி 4 அடி ஆழத்தில் வளர்க்கப்படும்.

**கே:** கடற்பாசி வளர்ப்பு முறை எவ்வாறு அமைவுபெறுகிறது...?

**ப:** 100 கிராமில் இருந்து 200 கிராம் வரையான பாசியைக் கையில் எடுத்து கட்டப்பட்ட மூங்கில் தொட்டி பாத்தியில் 12 சாணுக்கு ஒரு பதியம் என்ற விதமாக இடைவெளிகளை அமைத்து விதைக்க வேண்டும். இப்பாசியானது 45 நாள்களுக்கு பிறகு அறுவடை செய்யப்படுகிறது. சாதாரணமாக 45 நாள்களுக்கு பின்பு 5 மடங்கிலிருந்து 10 மடங்கு என்ற அளவிடையில் பாசியானது வளர்ச்சியடையும். இதே நல்ல கால நிலையின் அம்சங்கள் இருப்பின் 10 மடங்குகிலும் அதிகமான வளர்ச்சியை பாசி கொண்டிருக்கும்.

**கே:** கடற்பாசி அறுவடையின் பின்பான விற்பனை பற்றி கூறுங்கள்..?

**ப:** பாசியின் அறுவடைக்காலம் 45 நாள்கள். அதாவது ஒன்றரை மாத காலப்பகுதியின் பின்பே விற்பனைக்குரியதாகிறது. இவை கிடைக்கப்பெறும் நிறையின் அடிப்படையில் விற்பனை செய்யப்படுகின்றன. ஒரு கிலோ பாசி 10 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. நன்கு உலர்த்தப்பட்ட பாசி 50 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. இதன்படி ஒரு மூங்கில் தொட்டியிலிருந்து கிடைக்கப்பெறும் பாசி ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. மூங்கில் தொட்டிகளில் பாசி வளர்ப்பை மேற்கொள்வதன் மூலம் அதிக அறுவடையை குறுகிய காலத்தில் பெற முடிகிறது. அத்தோடு அதிக பட்சமான குறிப்பாக 8 இலட்சம் ரூபா வரையான வருமான ஈட்டத்தை பாசி வளர்ப்பின் மூலம் பெற்றுக்கொள்ள முடிகிறது.



**கே:** பாசிக்கான சந்தை வாய்ப்பு இலங்கையில் காணப்படுகிறதா..?

**ப:** ஆம், கடல் பாசி வளர்ப்புக்கு அதிக ஒத்துழைப்பு வழங்கும் நிறுவனமாக 'கெய்லீஸ்' (Hayleys) நிறுவனம் விளங்குகிறது. உற்பத்தியாளர்களிடம் இருந்து பாசியைப் பெற்று உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் விநியோகம் செய்துவருகிறது. இந்த நிறுவனமே தொழில் முனைவோருக்கான அனைத்து உதவிகளையும் செய்து வருகிறது.

**கே:** பாசியின் தேவை மற்றும் பயன்பாடு பற்றி குறிப்பிடுங்கள்...?

**ப:** இவை பல உற்பத்திகளுக்கு உப மூலப்பொருளாக பயனுறுதியைத் தருகின்றன. குறிப்பாக, மென்பானங்கள், ஜெலி, பற்பசை போன்ற தயாரிப்புகளில் சுவையூட்டும் மூலக்கூறுகளாக பயன்படுகின்றன. இந்த உற்பத்திச் செயன்முறையூடு ஆண்களை விடவும் பெண்களே அதிக பயன் அடைகின்றனர். அதிகளவான பெண்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்கின்றனர். ஆகவே பெண்கள் ஓய்வு நேரத்தில் பொழுது போக்குக்காகவும், வருமான ஈட்டம் கருதியும் இந்தத் தொழிலில் ஈடுபடலாம்.


**முயற்சி**

ஆக, அவருடைய முக மலர்வில் உழைப்பின் தேற்றமும், முயற்சியின் ஆன்மக் கூட்டங்களும் இயல்பாகவே செந்தளிக்கின்றன. அவரைச் சந்தித்த கணமே அயர்ச்சியின்றி வார்த்தைகளின் உற்சாகம் கொண்டு நேர்மறையான சிந்தனைகளை தூண்டி விட்டார். அற்புதமான பொழுது, ஆத்மார்த்தமான கணங்கள், எடுத்தியம்பும் கூற்றுகளில் காட்சிகளின் நிழலுருவ நிஜங்கள் உழைப்பாக விம்பம் கொண்டன. கேள்விகளிடையே பணியாளுகையாக நீண்டன. முயற்சி செய்யுங்கள் என்பதை வேண்டி நின்றன. கதையாடல் செய்கையை செயல் ஆளுமையாகப் பார்த்திடக் காத்திருந்தன. நாமும் கடற்பாசி வளர்ப்பை வாழ்வாதாரம் பேணும் ஆதாரமாகப் பற்றி இருப்போம்.

> “பல உற்பத்திகளுக்கு உப மூலப்பொருளாக பயனுறுதியைத் தருகின்றன. குறிப்பாக, மென்பானங்கள், ஜெலி, பற்பசை போன்ற தயாரிப்புகளில் சுவையூட்டும் மூலக்கூறுகளாக பயன்படுகின்றன. இந்த உற்பத்திச் செயன்முறையூடு ஆண்களை விடவும் பெண்களே அதிக பயன் அடைகின்றனர். அதிகளவான பெண்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்கின்றனர். ஆகவே பெண்கள் ஓய்வு நேரத்தில் பொழுது போக்குக்காகவும், வருமான ஈட்டம் கருதியும் இந்தத் தொழிலில் ஈடுபடலாம்.



Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# குருப்பெயர்ச்சி பலன்கள்



## கும்பம்

எதனையும் கண்டு அஞ்சாதவர்களே!
உங்கள் ராசிக்கு 2.9.2017 முதல் 2.10.2018 வரை குரு பகவான் 9ஆம் இடத்தில் அமர்ந்து பலன் தர இருக்கிறார். வாழ்க்கையின் நெளிவுசுளிவுகளைக் கற்றுக்கொள்வீர்கள். பேச்சில் கனிவு பிறக்கும். முடியாத காரியங்களையும் முடித்துக்காட்டுவீர்கள். எதிர்பார்த்த தொகை கைக்கு வரும். கணவன் மனைவிக்கு இடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். கோயில்களுக்குச் சென்று வருவீர்கள்.

**குரு பகவானின் பார்வை:**
குரு பகவான் தனது 5ஆம் பார்வையால் உங்கள் ராசியைப் பார்ப்பதால் தோற்றப் பொலிவு கூடும். ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள். சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். முக்கியப்பொறுப்புகள் ஒப்படைக்கப்படும். பங்குச் சந்தை மூலமாகப் பணம் வரும். குரு பகவான் 7ஆம் பார்வையால் உங்கள் ராசிக்கு 3ஆம் வீட்டைப் பார்ப்பதால் தைரியம் கூடும். சொத்துப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பீர்கள்.
குரு பகவான் தனது 9ஆம் பார்வையால் உங்களின் 5ஆம் வீட்டைப் பார்ப்பதால் சாதிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். மகனின் உயர்கல்வி, உத்தியோகம், திருமணம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் நல்லவிதத்தில் முடியும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும்.

**குரு பகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**
உங்கள் ராசிக்கு 3 மற்றும் 10ஆம் இடங்களுக்கு உரிய செவ்வாயின் சித்திரை நட்சத்திரம் 3, 4ஆம் பாதம் துலாம் ராசியில் குரு பகவான் பயணிப்பதால் சவால்களில் வெற்றி பெறுவீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். சொத்து கைக்கு வரும். 6.10.2017 முதல் 7.12.2017 வரை ராகு பகவானின் சுவாதி நட்சத்திரத்தில் குரு பகவான் செல்வதால் ஒருவித தயக்கம், படபடப்பு, எதிர்காலம் குறித்த பயம், தாழ்வு மனப்பான்மை வந்து செல்லும். பிறமொழி பேசுபவர்கள் உதவிகரமாக இருப்பார்கள். அயல்நாட்டில் இருப்பவர்களால் நன்மை உண்டாகும். உங்களின் ராசிக்கு 2 மற்றும் 11ஆம் வீடுகளுக்கு உரிய குரு பகவான் தன் சுய நட்சத்திரமான விசாகம் 1,2,3 ஆம் பாதம் துலாம் ராசியிலேயே 8.12.2017 முதல் 13.2.2018 வரை மற்றும் 4.7.2018 முதல் 2.10.2018 வரை பயணிப்பதால் வசதி வாய்ப்புகள் பெருகும். குடும்பத்தில் நல்ல நிகழ்ச்சிகள் நடக்கும். திருமணம் கூடி வரும்.

**குரு பகவானின் அதிசார வக்கிர சஞ்சாரம்:**
14.2.2018 முதல் 10.4.2018 வரை விசாகம் நட்சத்திரம் 4ஆம் பாதத்தில் அதிசார வக்கிரத்தில் உங்கள் ராசிக்கு 10 ஆம் வீட்டில் குரு பகவான் சென்று அமர்வதால் வேலைச் சுமை அதிகரிக்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் ஏற்படும். இடமாற்றங்கள் உண்டாகும். தர்ம சங்கடமான சூழ்நிலை ஏற்படும்.

**குரு பகவானின் வக்கிர சஞ்சாரம்:** 7.3.2018 முதல் 3.7.2018 வரை தன் சுய சாரமான விசாகம் நட்சத்திரம் துலாம் ராசியில் குரு பகவான் வக்கிர கதியில் செல்வதால் எதிர்பார்ப்புகள் சற்று தாமதமாகி முடியும். அடிக்கடி மனதில் குழப்பம் ஏற்படும்.
வியாபாரத்தில் இருந்த தேக்க நிலை மாறும். சிலர் சில்லறை வியாபாரத்தில் இருந்து மொத்த வியாபாரத்துக்கு மாறுவீர்கள். உத்தியோகத்தில் அலுவலகச் சூழ்நிலை நிம்மதி தரும். உங்களின் நிர்வாகத் திறமை பளிச்சிடும். மாணவர்களே! படிப்பில் முன்னேறுவீர்கள். பொது அறிவை வளர்த்துக்கொள்வீர்கள். கலைத்துறையினர்களே! வேற்றுமொழி வாய்ப்புகளால் புகழ் அடைவீர்கள். பொது நிகழ்ச்சிகளில் தலைமை தாங்கும் அளவுக்குப் பிரபலமாவீர்கள். மூத்த கலைஞர்களிடம் நுணுக்கங்களைக் கற்றுக்கொள்வீர்கள்.
இந்த குரு மாற்றம் மன நிம்மதியைத் தருவதுடன், எதிலும் வெற்றி பெறுவோம் என்கிற தன்னம்பிக்கையை அதிகப்படுத்துவதாக அமையும்.

## வரலாற்றில் இன்றைய தினம் 07.09.2017

1571- பிரிட்டன் முதலாம் எலிசபெத் மகாராணியை பதவிலிருந்து அகற்றி விட்டு ஸ்கொட்லாந்து அரசி மேரியை பிரிட்டனின் அரசியாக்குவதற்கு சதி செய்தமை தொடர்பாக நோர்போல்க்கின் நான்காவது டியூக் ஹவார்ட் கைது செய்யப்பட்டார்.
1929 - நீராவிக்கப்பல் ஒன்று பின்லாந்து நஸிஜார்வி ஏரியில் கவிழ்ந்து மூழ்கியதில் 136 பேர் உயிரிழந்தனர்.
1945 - 1941ஆம் ஆண்டு தொடக்கம் வேக் தீவில் நிலை கொண்டிருந்த ஜப்பானியப் படைகள், அமெரிக்கக் கடற்படையிடம் சரணடைந்தன.
1953 - சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சியின் முதலாவது செயலாளராக நிகிடா குருசேவ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
1965 - இந்தியா - பாகிஸ்தான் போரின் போது இந்திய எல்லையில் தனது படையை வலுப்படுத்தப் போவதாக சீனா அறிவித்தது.
1970 - ஜோர்தானின் அம்மானில் அரச படைகளுக்கும் ஆயுததாரிகளுக்கும் இடையே கடும் சண்டை நடைபெற்றது.
2016 - வடக்கில் 41ஆயிரத்து 746 வாக்காளர்கள், வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கம்.
2016 - இராணுவத்துக்கு அருகில் தமிழர் வாழலாம் என யாழ். தளபதி தெரிவிப்பு.

1923 - பன்னாட்டு குற்றவியல் பொலிஸ் அமைப்பான இன்டர்போல் உருவாக்கப்பட்டது.

## நாளை 08.09.2017

வெள்ளிக்கிழமை

ஆவணி - 23

திதி: துதியை மு.ப.11.42 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி பி.ப 02.14 வரை
சுபநேரம்: 06.04—07.34 வரை
ராகுகாலம்: 10.34—12.04 வரை

## பத்தி எழுத்து

# அனித்தாவுக்கான எமது பதிலென்ன?

மீண்டுமொருமுறை தமிழகம் தன் இயல்பு நிலையை இழந்துவிட்டது. பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள் என்று எங்குபார்த்தாலும் போராட்டங்கள் வெடித்தவண்ணம் உள்ளன. அனித்தா என்கிற ஒரு தமிழ் மாணவியின் உயிரிழப்பின் பின்னணியிலேயே இந்தப் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. இந்த விடயம் குறிப்பிட்ட அந்த மாணவிக்கு மட்டுமானது அல்ல. ஒட்டுமொத்த தமிழ் இனமும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டிய விடயம் இது.

மருத்துவப் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்கள் 12ஆம் தரத்தில் என்ன பெறுபேற்றை எடுத்திருந்தாலும் நீட் என்கிற தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்தால் மட்டுமே அடுத்த கட்டத்துக்குச் செல்ல முடியும் என்கிற திட்டத்தை இந்திய மைய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தப் பரீட்சையை எதிர்கொள்வதென்பது பொருளாதார ரீதியில் மிகவும் பிற்படுத்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு கெட்டகனவாகவே இருந்து வருகிறது. எனவே இதை விலக்க வேண்டும். கடந்த வருடத்தில் இருந்ததைப்போன்று 12ஆம் தரத்தின் பெறுபேறே மருத்துவப் பட்டப் படிப்பை மேற்கொள்வதற்கான கடைசிப் பரீட்சையாக இருக்க வேண்டும் என்று தமிழக மக்கள் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

கடந்த வருடம் 12ஆம் தரப் பரீட்சையில் ஆயிரத்து 200இற்கு ஆயிரத்து 176 புள்ளிகளைப் பெற்று தமிழகத்தில் முதலிடம் பிடித்தார் அனித்தா என்கிற மாணவி. அவர் நீட்டை எதிர்த்து வழக்கும் தொடர்ந்தார். ஆனால், நீதிமன்றினால் விலக்கு வழங்கப்படாததை அடுத்து அவர் கடந்த வெள்ளிக்கிழமை தனது உயிரை மாய்த்துக்கொண்டார். இதையடுத்து தமிழகம் எங்கும் தற்போது பரவலாகப் போராட்டங்கள் வெடித்த வண்ணமுள்ளன.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஜல்லிக்கட்டுக்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து தமிழகம் எங்கும் போராட்டம் நடத்தப்பட்டது. தமிழகத்துக்கு ஆதரவாக உலகெங்கும் போராட்டங்கள் நடத்தப்பட்டன. ஈழத்திலும் ஜல்லிக்கட்டு ஆதரவுக் குரல்கள் இருக்கவே செய்தன. தமிழக மாணவர்களின் கல்வியில் கை வைக்கப்பட்டதை எதிர்த்து உலகெங்கும் வாழும் தமிழர்கள் அதற்கு தமது உணர்வலைகளை வெளிப்படுத்தி வருகின்றனர். அமெரிக்கர்கள்கூட அனித்தாவுக்கு இரங்கல் கூட்டம் நடத்தியுள்ளனர். ஆனால் நாம் என்ன செய்தோம்?

எம்மிடத்தில் ஏகப்பட்ட பிரச்சினைகள் உள்ளன. இதை இல்லை என்று சொல்லுவதற்கில்லை. ஆனால் போகிற போக்கில் ஒரு எதிர்ப்பையாவது பதிவுசெய்துவிட்டுப் போனால் அது மிகச் சிறந்த முன்னுதாரணமாக அமையும்.


இப்படியும் சிலர்


மரத்தின் மகிமை

# ஹன்சிகாவின் கதாபாத்திரத்தில் கேத்ரின் தெரேசா



சினிமா

ஹன்சிகா நடித்த கதா பாத்திரத்தில், தற்போது பல படங்களில் தொடர்ச்சியாக நடித்து வரும் கேத்ரின் தெரேசா நடிக்க ஒப்பந்தமாகியிருகிறார்.

ஜெயம் ரவி, அரவிந்த் சாமி, ஹன்சிகா நடிப்பில் உருவான படம் 'போகன்'. லட்சுமணன் இயக்கிய இந்தப் படம் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. இதையடுத்து இந்தப் படத்தை தெலுங்கில் எடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தமிழில் இயக்கிய லட்சுமணனே தெலுங்கிலும் இயக்க இருக்கிறார். இதில் ஜெயம் ரவி நடித்த கதாபாத்திரத்தில் ரவி தேஜா நடிக்கவுள்ளார் என்று ஏற்கனவே உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில், ஹன்சிகா கதாபாத்திரத்திற்கு கேத்ரின் தெரேசா நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார்.

அரவிந்த் சாமி நடித்த கதாபாத்திரத்தில் எஸ்.ஜே.சூர்யாவிடம் பேச்சு நடந்து வருவதாகச் சொல்லப்படுகிறது. (ம)



twitter.com/ArchanaArchuu

குறை சொல்வதென முடிவெடுத்த பிறகு எல்லா நன்மையிலும் குறை கண்டுபிடிக்கலாம் ஆராய்வதென முடிவெடுத்த பிறகு எல்லா தீமைகளிலும் நன்மை கண்டறியலாம்...



twitter.com/Kannan_Twitz

நாம் கற்றுக்கொள்ளும் வரை, தெளிய வைத்து தெளிய வைத்து, அடித்துக் கற்பிப்பதனால் வாழ்க்கை கூட ஒரு ஆசிரியரே!

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் இருந்த குழப்பம் நீங்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சிக்காக கூடுதல் பணி மேற்கொள்வீர்கள். பெண்கள் வீட்டுக்குத் தேவையான பொருட்கள் வாங்குவர்.

**இடபம்:** மாறுபட்ட கருத்து கொண்டவரை சந்திக்க நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். வாகன போக்குவரத்தில் மிதவேகம் கடைப்பிடிக்கவும்.

**மிதுனம்:** பெற்றோரின் அறிவுரையை ஏற்பது நல்லது. பணியில் பொறுப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலத்தைப் பாதுகாப்பது நல்லது.

**கடகம்:** பெருந்தன்மை மிக்கவராக விளங்குவீர்கள். நற்செயலில் ஈடுபட்டு சமூகத்தில் வரவேற்புப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**சிங்கம்:** செயலில் திறமை வெளிப்படும். அலைச்சல் தந்த வேலை ஆதாயம் தருவதாக மாறும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும்.

**கன்னி:** மாறுபட்ட சூழ்நிலையைச் சந்திக்க நேரிடலாம். நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும்.

**துலாம்:** புதிய செயல் நிறைவேறத் தாமதம் ஆகலாம். சிறிய பணி கூட சுமையாக இருக்கலாம். தொழில், வியாபாரம் சிறக்க விடாமுயற்சி அவசியம். இலாபம் சுமாராக இருக்கும்.

**விருச்சிகம்:** செயல்களில் அதிக நேர்த்தி நிறைந்திருக்கும். அரசு தொடர்பான உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும்.

**தனுசு:** சிலர் சுயநலத்துடன் உங்களிடம் பழகலாம். விழிப்புடன் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் உழைப்பிற்கேற்ப ஆதாயம் கிடைக்கும்.

**மகரம்:** இஷ்ட தெய்வ அருளால் நன்மை உருவாகும். அன்றாட வாழ்வில் புத்துணர்வுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி வியப்பூட்டும் விதத்தில் இருக்கும்.

**கும்பம்:** முக்கிய செயலை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உள்ள சிரமத்தை உடனடியாக சரி செய்வது நல்லது. இலாபம் சுமாராக இருக்கும்.

**மீனம்:** புதிய முயற்சி முழு அளவில் வெற்றி அளிக்கும் . ஆதாயம் கூடும். குடும்பத் தேவைகளை தாராள செலவில் நிறைவேற்றுவீர்கள். நண்பரைச் சந்திக்கும் வாய்ப்பு உருவாகும்.



நடத்துநர்: படியில் நிக்காத உள்ளேதான் கடல் மாதிரி இடம் இருக்கே உள்ளே வா....

மாணவன் : எனக்கு நீச்சல் தெரியாது அதுதான் கரையிலேயே நிற்கிறேன்.

யாருக்கிட்ட....

அந்த பேஷண்ட் எதுக்காக ஆஸ்பத்திரி தாண்டி ஓடுறாரு...?

அவரு அபாய கட்டத்தைத் தாண்டிட்டாராம்..!

"வர வர தூக்கமே வர மாட்டேங்குது டாக்டர்!"
"தூங்கற இடத்தை மாத்திப் பாருங்க!"
"அய்யய்யோ! அதெல்லாம் ஆபீசில முடியாது டாக்டர்!"

நீ பக்கத்துல இருந்தா எனக்கு யானை பலம் கமலா..!
-
அப்போநான் குண்டுன்னு சொல்றீங்க....வீட்டுக்கு வாங்க வச்சிக்கிறேன்...!

"இனிமேல் நீங்க தினமும் ஒரு வேளைதான் சாப்பிடணும்..."
"ஏன் டாக்டர்..?"
"எனக்கு உங்ககிட்ட இருந்து நிறைய ஃபீஸ் வர வேண்டி இருக்கே..!"



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 5 | | 1 | | | |
| | 1 | 7 | | 6 | | 3 | 5 | |
| 6 | | | | | | | | 9 |
| | | 8 | 3 | | 6 | 2 | | |
| | | | 2 | | 5 | | | |
| | | 3 | 4 | | 9 | 6 | | |
| 3 | | | | | | | | 7 |
| | 4 | 5 | | 9 | | 8 | 2 | |
| | | | 1 | | 4 | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 4 | 6 | 9 | 8 | 2 | 1 | 5 |
| 9 | 6 | 1 | 3 | 2 | 5 | 8 | 7 | 4 |
| 2 | 8 | 5 | 7 | 1 | 4 | 9 | 6 | 3 |
| 6 | 5 | 3 | 9 | 4 | 1 | 7 | 8 | 2 |
| 8 | 4 | 9 | 2 | 3 | 7 | 6 | 5 | 1 |
| 7 | 1 | 2 | 8 | 5 | 6 | 3 | 4 | 9 |
| 5 | 3 | 6 | 4 | 8 | 9 | 1 | 2 | 7 |
| 1 | 2 | 7 | 5 | 6 | 3 | 4 | 9 | 8 |
| 4 | 9 | 8 | 1 | 7 | 2 | 5 | 3 | 6 |

நேற்றைய சுடோக்கின் விடை

## சுடோக்கு எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.



## மாணவர்களுக்குத் தேவையானவை

1. தன்னம்பிக்கை
2. ஊக்கம்
3. படிக்கின்ற சூழல்
4. தேவையான வசதிகள்
5. நல்ல ஆரோக்கியமான பழக்க வழக்கங்கள்
6. பொறுப்பு - கடமை உணர்ச்சி
7. தீய சகவாசத்தைத் தவிர்த்தல்
8. முயற்சி, பயிற்சி, தெளிவு, உற்சாகம்

**தேர்வு என்பது**

- தேர்வு என்பது சிலருக்குத் தவம்
- சிலருக்குப் பயம்
- சிலருக்குப் பதற்றம்
- சிலருக்குப் பொழுது போக்கு
- அவரவரின் திறமையையும் உழைப்பையும் தன்னம்பிக்கையையும் பொறுத்து தேர்வுகள் எளிமையாக கடிமையாக அமையக் கூடும்.

**மாணவர்கள் தவிர்க்க வேண்டியவை**

- தேர்வு பற்றிய பயம் / பதற்றம்
- இரவில் வெகு நேரம் கண் விழித்தல்
- தேர்வு ஆரம்ப நேரம் வரையும் படித்துக் கொண்டிருத்தல்.
- வினாத்தாள்களை முழுவதும் சரியாகப் படிக்காமல் வேகமாக பதில் எழுத முற்படுதல்
- தேவைக்கு அதிகமான அளவில் ஒவ்வொரு வினாவுக்கும் விடையளித்தல்
- ஒரு வினாவுக்கு விடை எழுதும் போது மறந்து விட்டால் மற்ற வினாக் களுக்குரிய விடைகளையும் மறந்து விடுதல்
- சிவப்பு மையால் அடிக் கோடிடுதல்
- நடந்து முடிந்த தேர்வைப் பற்றி மற்றவரிடத்தில் விவாதித்தல் அல்லது செய்த பிழைகள் பற்றியே சிந்தித்து கவலைப்படல்.

**தேர்வு நெருங்கும் போது**

உங்களால் .சாதிக்க முடியும் என்று மட்டும் திரும்பத் திரும்ப சொல்லிக் கொள்ளுங்கள். நிறைய மதிப்பெண்கள் வாங்கினால் உங்களுக்குக் கிடைக்கப் போகும் பேரை புகழையும் கற்பனை செய்து பாருங்கள். தேர்வு பற்றிய பயம் போய் விடும்.

**நல்வாழ்த்துக்கள்**

தேடல் உள்ளவர்கள் அடைந்து விடுகிறார்கள். நாம் வெற்றியடையாத போதெல்லாம் சரியாகத் தேடவில்லை என்பதே பொருள்.
தேடுவோம்; கண்டடைவோம்.


## நம்பிக்கையே அதிஷ்டமாகும்



அவன் மிகவும் ஏழை. தனது குறைந்த வருமானத்தில் வாழ்க்கை நடத்தி வந்தான். ஒரு நாள் தெருவில் அவன் நடந்து செல்கையில் பழைய காலத்து நாணயக் குற்றி ஒன்று கிடைத்தது. அந்த நாணயத்தின் நடுவில் ஒரு துளை இருக்கக் கண்டான். 'துளையிட்ட காசு கிடைப்பது அதிஷ்டம்' என்ற ஒரு நம்பிக்கை இருந்தது. இதன்படி "இனி அதிஷ்டம் என்னைத் தேடி வரும். நான் பணக்காரனாகி விடுவேன்" என்று நினைத்துக் கொண்டான். அந்த நாணயத்தைத் தன் பையில் போட்டு பத்திரப்படுத்தி கொண்டான். அன்று அவனுக்கு மற்ற நாள்களை விட அதிக வருமானம் கிடைத்தது. எல்லாம் அந்தக் காசு கிடைத்த நேரம் என நினைத்தான். அன்றிலிருந்து அவன் தினமும் தன் பையில் இருக்கும் காசை அடிக்கடி தொட்டுப்பார்த்துக் கொள்வான். அதனை வெளியே மட்டும் எடுக்க மாட்டான். சில ஆண்டுகளில் பணம் பதவி அனைத்தும் அவனிடம் வந்து சேர்ந்தன. எல்லாம் நாணயம் கொடுத்த அதிஷ்டம்தான்" என்று எண்ணினான். அந்தக் காசை ஒரு முறை பார்த்துவிட ஆசைபட்டு கோட்டுப் பையில் கையை விட்டு காசை எடுத்தவனுக்கு அதிர்சியே காத்திருந்தது.

அந்தக் காசில் துளையே இருக்கவில்லை. என்ன ஆயிற்று? என்று குழப்பத்துடன் மனைவியை நோக்கினான். அவள் "என்னை மன்னியுங்கள். கோட்டு தூசியாக இருக்கிறதே என்று நான் அதனை வெளியே உதறினேன். காசு எங்கோ விழுந்துவிட்டது. எவ்வளவோ தேடியும் அது கிடைக்கவேயில்லை. நான்தான் அதற்குப் பதிலாக வேறு காசைப் போட்டு வைத்தேன்" என்றாள். "இது எப்போது நடந்தது? என்று அவன் கேட்டான். "அந்தக் காசு கிடைத்த ஒரு வாரத்துக்குள்ளேயே அது தொலைந்து போய் விட்டது" என்றாள் சற்றுத் தயங்கியபடி. அவன் ஆத்திரமடையவில்லை. அமைதியாகச் சிந்தித்தான். "எனக்கு உண்மையில் அதிஷ்டத்தைக் கொடுத்தது. நாணயம் இல்லை. அதுதான் எப்போதோ தொலைந்து விட்டதே! ஆக அந்த நாணயக்குற்றி எனது பையில் இருக்கிறது என்ற நம்பிக்கை தான் எனக்கு அதிஷ்டத்தைத் தந்தது" என நினைத்து மகிழ்ந்தான். உடனே முன்பைவிட நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் தனது பணிகளைத் தொடந்தான்.

**புள்ளிகளை இணைத்து உருவத்தைப் பூர்த்தி செய்க**




## காக்கைக் குடும்பம்



பட்டணத்தில் வசிப்பவராயினும், பட்டிக்காட்டில் வசிப்பவராயினும் தந்திரம் நிறைந்த நாட்டுக் காக்கையை அறியாதவர் இல்லை. இது வீட்டுக் காக்கை (House Crow) என்று ஆங்கிலத்திலும், அழகிய காகம் என்று இலத்தின் மொழி விலங்கியல் பிரகாரமும் அழைக்கப்படுகிறது. அரிசிக் காக்கை என்றும், அண்டங்காக்கை என்றும் அழைக்கப்படுவதுண்டு. சாம்பல் நிறக் கழுத்தும் சற்று சிறிய உருவத்துடனும் இருப்பது அரிசிக் காகம். இது எவருக்கும் மிகப் பழக்கமான பறவை. மனிதனை முழுவதும் அண்டி வாழும் பறவை. இது புத்திக் கூர்மையும் தைரியமும் அபாயத்தை அறிந்து அதனைத் தவிர்க்கும் வழிகளும் தெரிந்து வெகு தந்திரமாக நடக்கும். உணவைப் பொறுத்த மட்டில் எதையுமே அது வெறுத்துத் தள்ளுவதில்லை. செத்துக் கிடக்கும் எலியோ, சமயலறையிலிருந்து அள்ளி எறியும் சிந்திய உணவுப் பொருளோ, மீன்காரியிடம் திருடிய மீனோ அல்லது குழந்தையின் கையிலிருந்து தட்டிப் பறிக்கப்பட்ட இனிப்புப் பண்டமோ எல்லாமே காகம் விரும்பும் உணவுதான். ஆயினும் இதனது இந்தத் திருட்டுத் தன்மையை ஓரளவு அதன் அழுக்குகளைத் தின்று சூழலை சுத்தப்படுத்தும் தன்மையால் மக்கள் மன்னித்து விடுகின்றனர். என்றாலும் தோட்டத்தில் வளர்க்கும் அழகிய பாடும் பறவைகளை அது துன்புறுத்துவதும் அடைகாத்து வெளிவரும் கோழிக் குஞ்சுகளைத் திருட முயற்சிப்பதும் அதற்குப் பெரும் கெட்ட பெயரையே உண்டாக்கியிருக்கிறது. காகத்தின் கூடு அழகற்ற ஒரு குச்சி மேடை எனலாம். நிலத்தில் இருந்து சுமார் மூன்று முதல் எட்டு மீற்றர் உயரம் வரையான மரக் கிளைகளில் அந்தக் கூடு இருக்கும். கூட்டின் மத்தியில் கிண்ணம் போன்ற பாகம், தும்பு, கயிறு, சணல் துண்டுகள் என்பவற்றால் வனையப்பட்டிருக்கும் இதனுள் 3 தொடக்கம் 5 வரையான முட்டைகளைக் காகம் இடும். காகத்தின் கூட்டில் குயில்கள் முட்டையிடுவதுண்டு. அண்டங்காக்கை அரிசிக் காகத்தை விடப் பெரியது. ஒரு வித ஒளிரும் கருநிறம் கொண்டது. கனத்த அலகையுடையது. பலமான கரகரப்பான 'கா' என்ற சத்தத்தையுடையது. பெரும்பாலும் காடுகள், சோலைகள் என்று நகருக்கு வெளியே வாழும். இது மனிதரால் கொட்டப்படும் குப்பை கூழங்களில் உள்ள அழுகிய பொருள்களை உண்ணும் தன்மையது.

## நாம் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்களின் பெயர்களை எழுதுவோம்









## மரண அறிவித்தல்

### திருமதி தங்கரத்தினம் குணரத்தினம்


பிறப்பு 15.02.1955 இறப்பு 06.09.2017

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் இல.148/3, திருவையாறு, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கரத்தினம் குணரத்தினம் 06.09.2017 புதன் கிழமை அகாலமரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதர் - சொர்ணம் தம்பதியரின் அன்பு மகளும் நாகலிங்கம் குணரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - நாகமுத்து தம்பதியரின் அன்பு மரு மகளும் பார்த்திமன் (தீபன், பாடசாலை பணியாளர் - விக்கினேஸ்வரா வித்தியாலயம், பூநகரி), சோபாயினி (பெல்யியம்), கர்ணன் (கணிய அளவையாளர் - டுபாய்), பிரபாலினி (ஆசிரியை - சென்.திரேசா பெண்கள் கல்லூரி, கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இராசலட்சுமி (தங்கா - திருவையாறு), கலைவாணன் (ஜெகன் - பெல்யியம்), தபோதினி ஆகியோரின் அன்பு மாமியும் அபிநயா, அட்சயா, தேனுகானன், சங்கீர்த், ஜெய்வின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2017) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக இரணைமடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**திருவையாறு**
**077 111 6085, 077 796 6896**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 03 . 1929



மறைவு 06 . 09 . 2017

### திருமதி பஞ்சலட்சுமி தர்மலிங்கம்

வட்டுகிழக்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பஞ்சலட்சுமி தர்மலிங்கம் (2017.09.06) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - செல்லம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற தர்மலிங்கம் அவர்களின் அன்புமனைவியும் சரவணபவானந்தன் (ஆஸ்திரேலியா), திருச்செல்வி (வட்டுக்கோட்டை), கலைச்செல்வி (கனடா), நித்தியானந்தன் (ஜேர்மனி), சிவானந்தன் (அமெரிக்கா), குகானந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், விசுவநாதன் மற்றும் மகாலிங்கம் (வட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற தர்மகுலசேகரம் மற்றும் செல்வலக்சுமி, பாலச்சந்திரன், சர்மிளா, ரஜனி, ராஜினி ஆகியோரின் அன்புமாமியும் சாரங்கன், துஷ்யந்தன், சிவாயன், அபிஷேக், அபிலாஷா, நிரஞ்சன், நிழலினி, அஸ்வினா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் நடராசா (சுவிஸ்) அவர்களின் அன்பு அண்ணியும் வசந்தமலர் (சுவிஸ்) அவர்களின் சகலியும் நளாயினி, நிரஞ்சனி காலஞ்சென்ற குணவதன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2017) வியாழக்கிழமை மு.ப. 9 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**'சிவகிரி'**
**வட்டுகிழக்கு, வட்டுக்கோட்டை.**

**தகவல்: குடும்பத்தினர்**
**021 225 1267, 077 305 3028**



உங்கள் கனவு
வெளிநாட்டில் தாதியர் ஆகுவதா ???
உங்களுக்கோர் சிறந்த வாய்ப்பு ...

UK, Canada நாட்டில் தலைசிறந்த கல்லூரி அனுமதியைப் பெற்று தாதியர் கற்கை நெறியினை கற்க இன்றே விரைந்திடுங்கள்

- அடிப்படை தகைமைகள் O/L இல் ஆங்கிலம் உட்பட 6 பாட சித்தி.
- பகுதிநேர வேலைவாய்ப்பு வசதிகள்
- தங்குமிட வசதிகள்
- எங்குமில்லாத மிகக் குறைந்த கட்டணங்கள்
- இலவச IELTS வகுப்புகள்.
- இலவச விமான பயணச் சீட்டு.

வயதெல்லை:-
23 வயதிற்கு உட்பட்டவர்கள் மட்டும்.

15.09.2017 இற்கு முன்னர் பதிவு செய்பவர்களுக்கு 25% கட்டண கழிவு உண்டு.

WINSTAR VISA CONSULTANTS
106, Postbox Junction, Palaly Road,
Thirunelveli, Jaffna.
021 300 4641 www.winstarjaffna.com


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
04.04.1937

மறைவு
01.10.2016

**சின்னையா திரவியம்**

விண்ணோடு விண்மீனாகி ஓராண்டு கடந்த போதும்
அன்னையே நெஞ்சோடு
உறைந்திட்ட உம் நினைவுகள்
என்றும் எம்முள் நிலைத்திருக்கும்

கனகசபை றோட்,
மானிப்பாய்.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி கமலாதேவி கனகராசா

(குண்டுமணி)



நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும்வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி கனகராசா (குண்டுமணி) கடந்த (04.09.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றமாணிக்கம்-அன்னம்மாதம்பதியரின் மருமகளும் கனகராசாவின் (பாலசிங்கம்) அன்பு மனைவியும் பூபால சிங்கம், சரஸ்வதி (சுவிஸ்) ஆகியோரின் சகோதரியும் பாமிலா (சுவிஸ்), கேசவன், ஜெமிலா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவநாதன் (அசோக் - சுவிஸ்), உதயசங்கர், குகப்பிரியா ஆகியோரின் அன்பு மாமியும் சிந்துஜா, அபிநயா, ஓவியா, காவியா, ஜருஷன், துவாரகன், துஜானி, ரிஷான் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2017) வியாழக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.
தகவல்: குடும்பத்தினர்.
(கேசவன் 077 811 4379)

## யாழ்.மாவட்ட உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் - வ.து 2017 - 2018 பெரும்போக விதை உருளைக்கிழங்கு விநியோகம் - அறிவித்தல்

உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் தமது பிரிவுச் சங்கத்தில் விண்ணப்பத்தை பெற்று ஒரு அந்தர் (50 கிலோ) கிழங்கிற்கு ரூபா 1000 (ஆயிரம் ரூபா) வீதம் செலுத்தி பதிவு செய்து கொள்ளவும்.

பதிவுக்காலம்:-09.09.2017தொடக்கம்20.09.2017 வரை

குறிப்பு : - முற்பணம் செலுத்தி பதிவு செய்துகொண்ட விவசாயிகளுக்கு மட்டும் மானியம் மற்றும் சலுகைகள் வழங்கப்படும்.

இ.தெய்வேந்திரம்
தலைவர் 077 628 2578

தி.சதீஸ்குமார்
செயலாளர்

07.09.2017

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மகேஸ்வரி கந்தசாமி




வேலணை கிழக்கு, 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி கந்தசாமி நேற்று (06.09.2017) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா - ஆச்சிக்கண்ணு தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராஜதுரை மற்றும் கனகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், குலசிங்கம், இராசசிங்கம், அம்பிகாபதி மற்றும் இராஜேஸ்வரி, இந்திராவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் விஜயகுமார், றஞ்சினிதேவி, லலிதாதேவி, நேசகுமார் (ஜேர்மனி), யோகநாயகி (ஜேர்மனி), காலஞ்சென்ற ஜெபக்குமார் (ஜேர்மனி) மற்றும் சுபாசினி, சிவகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுகந்தமலர், இந்திரகுமார், புவனேஸ்வரன், சுசீலன் (ஜேர்மனி), விஜித்திரா (ஜேர்மனி), றஞ்சினி (ஜேர்மனி), உதயகுமார், றஞ்சினி ஆகியோரின் பாசமிகு மாமியும் சுகந்தகுமாரி, சுகந்தன், ராஜன், விஜி, ரேவதி, கிந்துஜா, பிரியா, சிந்து, காண்டீபன், குயிலா, கார்த்திகா, வினேஸ், கௌசி, தர்சன், ஆதவன், அஷோக், அபிஷா, சுவாதிகா, சுதர்சன், சுஜீபன், கிருஷாந், நிருஷாந், விதுசன், மதுசன், யதுஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் தனுசியா, கவினேஸ், தேஷிதா, கனிந்திகா, அக்ஷயா, ஹசினி, அனியா, கபிஷன், டனுசியன், அனுஷ்கா, அதுஸ்கா, தஸ்வின், தனுஷாந், தக்ஷிகா, தாரிகா, வம்ஷிகா ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2017) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 607 8337
தகவல்: குடும்பத்தினர்.



### பெரியதம்பி சின்னத்துரை

இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி சின்னத்துரை (06.09.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி - நாகாத்தை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற பூபதியின் அன்புக்கணரும் தவராணி (ஜேர்மனி), சிவரஞ்சிதம் (கொழும்பு), கலைவாணி (லண்டன்), கலைமகள் (சுவிஸ்), மதிவண்ணன் (அப்பன் - இணுவில்) ஆகியோரின் அன்புத்தந்தையும் காண்டீபன் காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் சத்தியானந்தன், நிமலசிங்கம் ஆகியோரின் மாமனாரும் சரண்யா, சாருஜன், சுதர்சிகா, தரணிகா, தாரபி, வசீகா, நிதர்சனா, கீர்த்திக் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2017) வியாழக்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சத்தியானந்தன் (மருமகன்)

## பெயர் மாற்றம்

ஆலடி ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கில் வசிக்கும் துரையப்பா கருணாவேல் ஆகிய நான் எனது பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தில் கருணைவேலு எனப் பதியப்பட்டதை கருணாவேல் எனப் பெயர் மாற்றம் செய்கின்றேன் எனவும் எனது சகல ஆவணங்களிலும் கருணாவேல் எனவே பயன்படுத்தி வருகின்றேன் என்பதையும் இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

**வைரமுத்து துரையப்பா கருணாவேல்**

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

இறப்பு
2014.09.10

பிறப்பு
1950.05.21



**வசந்தாதேவி குலசிங்கம்**

துளிக்கின்ற ஒவ்வொரு பொழுதிலும்
துடியாய் துடியாய் துடிக்கிறோம் உங்கள் பிரிவால்
வாழ்கின்ற காலமெல்லாம் தாயே
வாழுவோம் உங்கள் நினைவால் தொலைதூரம் சென்றாலும்
தொலையாது உங்கள் நினைவுகள் அம்மா.......

சீமாவளவு,
அளவெட்டி மத்தி.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி திலகவதி குணரத்தினம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் தற்போது இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலக்வதி குணரத்தினம் நேற்று (06.09.2017) புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தவனம் - நாகம்மா தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்ற குணரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான லச்சுமிஅம்மா, புனிதவதி, அருளம்பலம் நித்தியானந்தன் மற்றும் சுகுணவதி ஆகியோரின் சகோதரியும் சாந்தகுமார் (தொழில்நுட்ப உதவியாளர் - RDA), சூரியகுமார், யசோதா (ஆசிரியர் - யா/இராம நாதன் கல்லூரி), வரதா (ஆசிரியர் - யா/ திருவடிநிலை சைவப் பிரகாச வித்தியாசாலை) ஆகியோரின் தாயாரும் சிவாசினி (ஆசிரியர் - யா/தாவடி இ.த.க. பாடசாலை), மதிவாணி, சொர்ண லிங்கம் (ஆசிரியர் - யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்), உமாகாந் ஆகியோரின் மாமியும் ஹரிணி, திவாஹரி, ஆதிரை, நேர்த்திரன், சர்வஜனப்ரியன், பராங்கதன், ஜிதசங்கர், கேமப்பிரியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2017) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் இணுவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாப்பாதோட்ட வீதி.
இணுவில் மேற்கு.
தகவல்: குடும்பத்தினர்.
075 068 7434, 077 880 5816

# உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தைத் திருத்த ரணில் பின்னடிப்பு

"அரச ஊழியர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக, சட்டத்தில் மீண்டும் திருத்தம் மேற்கொள்ளப்பட்டால், உள்ளூராட்சித் தேர்தல் நடத்துவது மேலும் காலதாமதமாகும். இது தொடர்பில் கட்சித் தலைவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும்" என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

"சில துறைசார் அரச ஊழியர்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதாயின் அவர்கள் ஒரு வருடத் துக்கு முன்னரே சேவையிலிருந்து விலகியிருக்க வேண்டும் என்ற சரத்து, உள்ளூராட்சி மன்றச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதனைத் திருத்த வேண்டும். தலைமை அமைச்சர் ரணில் இதனை முன்னெடுக்க வேண்டும்" என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும கோரினார்.

இதற்குத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பதில் வழங்கினார். (வ-5,31)

## காணாமற்...

யாழ்ப்பாணம், செப். 7

"காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்துக்குப் பொருத்தமானவர்களைக் கண்டறிவதில் தாமதம் ஏற்படுகின்றது. அதனாலேயே அந்த அலுவலகம் இன்னமும் நிறுவப்படவில்லை" என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களிடம் கூறியுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கும், அரச தலைவருக்கும் இடையேயான சந்திப்பில் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் நிறுவுவதில் ஏற்படும் தாமதம் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அரச தலைவர், "அந்த அலுவலகத்துக்குப் பொருத்தமானவர்கள் நியமிக்கப்பட வேண்டும். பிழையானவர்களை நியமித்தால், அவர்கள் உங்கள் பிள்ளைகளைக் கண்டுபிடித்து தருவோம் என்று சொல்லி பணம் கறக்கக் கூடும். சரியானவர்களை, பக்கம் சாராதவர்களையே அலுவலகத்துக்கு நியமிக்க முடியும். இதனாலேயே காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் நிறுவுவதில் தாமதம் ஏற்படுகின்றது" என்று குறிப்பிட்டார். (வ-5)

## ராணுவத்தை...

இல்லை இரகசிய முகாம் இருக்கின்றது. எமக்கு நம்பத்தகுந்தவர்கள் ஊடாக அதனை நாம் அறிந்துள்ளோம் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மீண்டும் தெரிவிக்க, "சரி அப்படி இருந்தால் நான் இப்போதே அரச வாகனமும், அதிகாரிகளையும் உங்களுக்குத் தருகின்றேன். நீங்கள் சொல்லும் இரகசிய முகாம் எங்கு இருக்கின்றதோ அங்கு சென்று பாருங்கள். அப்படி யாராவது தடுத்து வைக்கப்பட்டிருந்தால் எனக்கு அறியத்தாருங்கள்" என்று அரச தலைவர் மைத்திரிபால பதில் வழங்கியுள்ளார்.

"கடந்த ஆட்சிக் காலத்தில் காணாமல் ஆக்கப்படுதல் சம்பவங்கள் நடைபெற்றன. எனது ஆட்சிக் காலத்தில் அவ்வாறான சம்பவங்கள் நடக்கவில்லை. கடந்த காலத்தில் நடந்த சம்பவங்கள் எத்தனையோ இன்னமும் வெளித் தெரிய வராமலேயே இருக்கலாம். ஏனெனில் ஊடகங்கள் மீதும் அந்தக் காலத்தில் அச்சுறுத்தல் இருந்தது" என்று அரச தலைவர் மைத்திரி குறிப்பிட்டுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், "நாம் போரின் இறுதியில் இராணுவத்தினரிடம்தான் எமது பிள்ளைகளை ஒப்படைத்தோம். எங்கள் கைகளால் அவர்களிடத்தில் கையளித்தோம். எமது பிள்ளைகள் காணாமல் ஆக்கப்பட்டதற்கு அவர்கள்தான் பொறுப்பு. அப்படிச் செய்த இராணுவத்தினரை நாம் எந்தக் காலத்திலும் மன்னிப்பதற்குத் தயாராக இல்லை." அவர்களுக்குரிய தண்டனை வழங்கப்படவேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

இதற்குப் பதிலளித்த அரச தலைவர் மைத்திரிபால, "இராணுவத்தினரிடம் ஒப்படைத்தமைக்கான ஆவணங்கள் - ஆதாரங்கள் இருந்தால் தாருங்கள். அது தொடர்பில் நான் தேடுதல் நடத்துகின்றேன். விசாரணையை முன்னெடுக்கின்றேன்" என்று பதில் வழங்கியுள்ளார். (வ-5,101)

## ஜெனரல்...

வன்னிக் கட்டளைத் தளபதியாக கடமையாற்றியது ஜெகத் ஜயசூரியவே. இவரின் அநீதிகள் மற்றும் குற்றமிழைப்புகள் தொடர்பில் கண்டனத்தை வெளியிட்டிருந்த பன்னாட்டு மனித உரிமை அமைப்புகளையும், இராஜதந்திரிகளையும் அவர் அடித்து விரட்டி யிருந்தார்.

ஒரு லட்சத்து 46 ஆயிரம் பேர் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பிலான ஆதாரங்கள் பல அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட் டுள்ளன. கைது செய்யப்பட்டவர்களும் இவரின் கட்டுப்பாட்டிலேயே இருந்துள்ளனர்.

இவர் போர்க்குற்றம் இழைத்தமைக்கான ஆதாரங்கள் உள்ளதாக சரத் பொன்சேகா கூறியிருந்தார். ஆனால், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சியின் 66ஆவது மாநாட்டில் ஜெகத் ஜயசூரியவை காப்பாற்றும் விதத்தில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இந்த நாட்டில் இன்னமும் இனவாதம் ஒழியவில்லை. இனவாதத்தின் அடிவேர் அறுக்கப்படவில்லை. குற்றமிழைக்காவிடின் ஜெகத் ஜயசூரிய எதற்குப் பிரேசிலில் இருந்து இங்கு தப்பியோடி வந்தார். ஜெகத் ஜயசூரிய தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்திய போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைக்கு சாட்சியமளிக்க சரத் பொன்சேகா தயாராக இருக்கின்றார். ஜெகத் ஜயசூரியவுக்கு எதிரான விசாரணையை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் -என்றார். (வ-5)

## நானும்...

டையவர்களையே சந்திக்க வேண்டும் என்று அரச தலைவர் விரும்பியிருந்தமையால், அதற்கு அமைவாக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கப் பிரதிநிதிகள் அழைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தானும் 1971ஆம் ஆண்டு காணாமல் ஆக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

"1971ஆம் ஆண்டு என்னை மட்டக்களப்புச் சிறையில் அடைத்துவிட்டார்கள். எனது வீட்டாருக்கு நான் எங்கே என்பது தெரியாது. காணாமல் ஆக்கப்பட்டதாகவே அவர்கள் நினைத்தார்கள். இதனால் காணாமல் ஆக்கப்படுதலின் வலி இழப்பு, காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் உணர்வு எனக்கு நன்கு தெரியும். அதனை நான் அனுபவித்தவன். உங்கள் பிரச்சினைக்கு நிச்சயம் விரைவில் தீர்வை வழங்குவேன்" என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார். (வ-5)

## தமிழர்...

இடையிலான சந்திப்பு நேற்று மதியம் 12.30 மணிக்கு ஆரம்பமானது. இந்தச் சந்திப்பு சுமார் 2 மணி நேரம் நீடித்தது. அரச தலைவரின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ, தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் பல காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. அரசியல் ரீதியான மாற்றங்களும் நடைபெற்றுள்ளது. தமிழ் மக்களில் 90 சதவீதமானவர்கள் எனக்கே வாக்களித்தனர். அவர்களின் வாக்குகளாலேயே நான் அரச தலைவராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளேன். உங்களுக்கு நியாயமாகவே நான் செயற்படுவேன், என்று அரச தலைவர் மைத்திரி இதன் போது குறிப்பிட்டுள்ளார். (5)

## எந்தவொரு...

பதியும், பிரேசில் உள்ளிட்ட இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு தூதுவராகப் பணியாற்றிய வருமான ஜெனரல் ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராகப் போர்க்குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவர் போர்க்குற்றத்தில் ஈடுபட்டவர் என்றும், அதற்குரிய சான்றுகள் இருக்கின்றன என்றும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

மேற்படி அறிவிப்பு பற்றி சரத் பொன்சேகாவிடம் விளக்கம் கோரப்படுமா? அவரின் அறிவிப்பு குறித்து அரசின் நிலைப்பாடு என்ன? படையினரைக் காட்டிக்கொடுக்கும் வகையில் செயற்பட்ட அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா? படையினருக்கோ அல்லது இராஜதந்திர சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு எதிராகவே இவ்வாறு வழக்குத் தொடுக்கப்பட்டால் அரசு முன்னெடுக்கும் நடவடிக்கை என்ன?" என்று நாடாளுமன்றில் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன கேள்வி எழுப்பியிருந்தார்.

இவற்றுக்கு இரண்டு வாரங்களில் அயலுறவுத் துறை அமைச்சர் பதில்களை வழங்குவார் என்று சபை முதல்வர் அறிவித்தார். இதை சாதாரணமான விடயமாகக் கருதிவிட முடியாது. விரைவில் பதில் வேண்டும் என்று மகிந்த அணியினர் வலியுறுத்தினர். சிறிது நேரம் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது.

அதன் பின்னர் கருத்து வெளியிட்ட சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல, "சரத் பொன்சேகாவின் கருத்து அரசின் நிலைப்பாடு அல்ல. அது அவரின் தனிப்பட்ட அறிவிப்பாகும். வெளிநாட்டிலுள்ள அரசொன்று வழக்குத் தாக்கல் செய்யவில்லை. அமைப்பொன்றே செய்துள்ளது. வெளிநாட்டு நீதிமன்றங்களில் எனக்கு எதிராகவும் வழக்குப் போட முடியும். கடந்த அரசே பொன்சேகாவை சிறையில் அடைத்தது. ஆனால், இன்று படையினர் பற்றி முதலைக்கண்ணீர் வடிக்கின்றது. எது எப்படியிருந்தபோதிலும் படையினரை கூட்டு அரசு சிறையில் அடைக்காது -என்றார். (வ-5)

## இடைக்கால...

கால அறிக்கையை அன்றைய தினம் முன்வைப்பார். இந்த அறிக்கை மீதான விவாதம் ஒக்ரோபர் மாதம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

வழிநடத்தல் குழுவின் கூட்டம், நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று இடம்பெற்றது. சுமார் அரை மணி நேரத்தில் விடயங்கள் சுமுகமாக ஆராயப்பட்டு முடிக்கப்பட்டன.

வழிநடத்தல் குழுவின் இடைக்கால வரைவுடன், ஒவ்வொரு கட்சிகளும் வழங்கிய அறிக்கை பின்னிணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது. பின்னிணைப்புக்களையும் உள்ளடக்கிய இடைக்கால வரைவு வழிநடத்தல் குழுவில் நேற்று ஆராயப்பட்டுள்ளது. அனைத்துக் கட்சிகளும் வரைவுக்கு இணக்கம் வெளியிட்டுள்ளன.

இதனையடுத்து அரசமைப்பு நிர்ணய சபையில் சமர்பிப்பதற்கான திகதி தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. அந்தத் திகதி இறுதி செய்யப்படாத போதும், பெரும்பாலும் எதிர்வரும் 21ஆம் திகதியே அதனைச் சமர்பிக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த மாதத்தின் இரண்டாவது நாடாளுமன்றக் கூட்டத் தொடர் எதிர்வரும் 19ஆம், 20ஆம், 21ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. இதில் 21ஆம் திகதி காலை நாடாளுமன்றத்தை அரசமைப்பு நிர்ணய சபையாகக் கூட்டுவது என்றும், அன்றைய தினம் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையைச் சபையில் சமர்பிப்பார் என்றும் தெரியவருகின்றது.

அன்றைய அமர்விலேயே, வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையையும், உபகுழுக்களின் அறிக்கையையும் எப்போது விவாதத்துக்கு எடுத்துக் கொள்வது என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (வ-5)

## கடலுக்குள்...

பரிதாபமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் வேலணை பாலத்தடியில் நேற்று மாலை இடம்பெற்றது.

புங்குடுதீவைச் சேர்ந்த யோகநாதன் ஜெயக்குமார் (வயது - 37) என்ற குடும்பத்தலைவரே உயிரிழந்தார்.

"குடும்பத்தலைவர் தனது வேலை முடித்துக் கொண்டு வீட்டுக்கு திரும்பிக்கொண்டிருந்தார். வேலணை பாலத் தடியில் பயணிக்கும் போது அவருக்கு திடீர் வலிப்பு ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக அவர் கடலுக்குள் தவறி வீழ்ந்துள்ளார். அதனாலேயே அவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்" என்று பொலிஸாரின் ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

"இறந்தவருக்கு வலிப்பு நோய் ஏற்கனவே இருந்துள்ளது. அதற்கான சிகிச்சையையும் அவர் எடுத்து வந்துள்ளார். அந்த வீதியால் பயணித்தவர்கள் பாலத்தை அண்டிய கடல்ப் பகுதியில் சடலம் இருப்பதை அவதானித்துள்ளதுடன் பொலிஸாருக்கும் தகவலையும் வழங்கினர். அதன் அடிப்படையில் சடலம் மீட்கப்பட்டது" என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-8)

## 8 கிலோ...

ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"சுழிபுரம் பகுதியிலுள்ள வீடொன்றில் கஞ்சா பொதிகள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக இரகசியத் தகவல் கிடைத்தது. அந்தப் பகுதியில் வட்டுக்கோட்டை பொலிஸார் தேடுதல் மேற்கொண்டனர். இதன்போது வீடொன்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 8 கிலோ கிராம் கஞ்சா மீட்கப்பட்டது. அதனை வைத்திருந்த குற்றச்சாட்டில் அந்த வீட்டிலிருந்த ஒருவர் கைது செய்யப்பட்டார்" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த சில தினங்களுக்கு முன்னர் சங்கானைப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் கஞ்சாவை கடத்த முயன்ற 2 பேர் சிறப்பு அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டனர். அதன் பின்னர் சங்கானை, வட்டுக்கோட்டை மற்றும் அராலி ஆகிய பகுதிகளில் சிறப்பு அதிரடிப்படையினரும் பொலிஸாரும் தீவிர சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர். (வ-8)

## தைக்கொண்டோ...

பெற்று வருகிறது. கொழும்பு டொறின்ரன் உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்த கிளிநொச்சி மாவட்ட வீராங்கனை ஆர்.தமிழ்மகள் தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார். தைக்கொண்டோ போட்டிகளின் வரலாற்றில் வடக்கு மாகாணத்துக்குக் கிடைத்த முதலாவது தங்கப்பதக்கம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டு நடைபெற்ற தைக்கொண்டோவில் இவர் வெள்ளிப்பதக்கத்தைச் சுவீகரித்திருந்தார். (ம-422)

## கல்லுண்டாய்...

ணமாக குப்பைகளிலிருந்து வெளியேறும் உயிர் வாயுவால் தீ மூழ்கிறது" என்று யாழ். மாநகரச சபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார். யாழ். மாநகர சபையே கல்லுண்டாயில் குப்பைகளைக் கொட்டி வருகின்றது.

கடந்த ஏப்ரலில் மீதெட்ட முல்லவில் குப்பை மேடு சரிந்து 26 பேர் உயிரிழந்தனர். அந்தக் குப்பை மேட்டில் மீதேன் வாயு அதிகரித்து, அது இடையில் தீப்பற்றி எரிந்ததாலேயே சரிந்து விழுந்து பேரிடர் ஏற்பட்டது என்று ஆய்வுகள் பின்னர் தெரிவித்தன. கல்லுண்டாய் வெளிக்கு அண்மையில் குடியிருப்புக்கள் இல்லாவிடினும் அந்தப் பகுதியால் தினமும் பல நூற்றுக் கணக்கானவர்கள் பயணிக்கின்றனர்.

மீதெட்டமுல்ல பேரிடரின் பின்னர் அங்கு ஆய்வு மேற்கொண்ட ஜப்பான் வல்லுநர்கள், குப்பை மேட்டுப் பகுதியில் அளவுக்கதிகமான மீதேன் வாயு காணப்படுவதாகவும் அது ஆபத்தானது என்றும் தெரிவித்திருந்தனர். மெதேன் வாயுவின் அளவானது சாதரணமாகக் காற்றில் 0.5 வீதம் காணப்படும். அது 1.5வீதம் வரை சராசரியாக அதிகரிக்கும். எனினும் மீதெட்ட முல்ல குப்பை மேட்டில் மீதேன் வாயுவின் அளவானது 16 வீதமாக இருந்தது. மலசலக் கழிவுகளும் குப்பை மேட்டில் கொட்டப்படுவதே மீதேன் வாயுவின் அளவுக்கதிகமான அதிகரிப்புக்குக் காரணம் என்றும் ஜப்பான் வல்லுநர்கள் தெரிவித்திருந்தனர்.

யாழ்ப்பாண மாநகர சபை மற்றும் தனியார் நிறுவனங்களால் யாழ்ப்பாண மாநகரிலுள்ள குடியிருப்புக்கள் மற்றும் நிறுவனங்களில் அகற்றப்படும் மலசலகூடக் கழிவுகளும் கல்லுண்டாய் குப்பை மேட்டுப் பகுதியிலேயே கொண்டப்படுகின்றன.

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மருத்துவக் கழிவுகளும் கல்லுண்டாயில் கொண்டப்பட்டு எரிக்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டை பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி மறுத்தார்.

"போதனா மருத்துவமனைக் கழிவுகள் கல்லுண்டாய் வெளியில் கொழுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுவதில் எந்தவிதமான உண்மையும் கிடையாது.

போதனா மருத்துவமனையில் தினமும் சேதனக் கழிவுகள் 500 கிலோ தொடக்கம் 600 கிலோ வரையில் சேர்கின்றன. அவற்றை நாம் தெல்லிப்பழையில் உள்ள புகை போக்கி மூலமே எரித்து அகற்றுகின்றோம்.

இதேபோன்று தினமும் உணவுக் கழிவுகள் இரண்டு உழவு இயந்திரங்கள் சேர்கின்றன. அவையும் மாநகர சபையினருக்கு பணம் செலுத்தி அகற்றப்படுகின்றன. அதேபோன்று சத்திரச் சிகிச்சை மூலம் அகற்றப்படும் மனித உடற்பாகங்கள் மற்றும் இறந்த சிசுக்கள் என்பன வாரம் ஒருமுறை மாநகர சபை மூலம் அகற்றப்பட்டுக் கோம்பயன் மயானத்தில் எரிக்கப்படுகின்றன. அதற்கும் மாநகர சபைக்கு பணம் செலுத்தப்படுகிறது. இதுவே எமது கழிவகற்றல் முறமையாகும்" என்று மருத்துவர் த.சத்தியமூர்த்தி மேலும் தெரிவித்தார்.

குப்பை தொடர்ந்து இரவு பகலாக எரிவதால் எழும் புகை நவாலி வரை பரவி குடியிருப்புகளைப் பாதிக்கின்றது என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (உ-வ-101)

# இன்றைய மோதல்கள்

## திருமகள் ச.ச.நி. கரப்பந்தாட்டம்

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளியில் நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் காலிறுதி ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி அணியை எதிர்த்து அச்சுவேலி யுத் அணி மோதவுள்ளது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி தொடர்ந்து இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் மத்தியுடன் மோதும். தொடர்ந்து இடம்பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி அணி மோதவுள்ளது.

## வளர்மதி ச.ச.நி. கரப்பந்தாட்டம்

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 58ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தப்படும் 'பி' பிரிவு அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்சுவேலி யுத் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வளக்கம்பரை அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் சென்றல் அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

## சென். அன்ரனிஸின் கால்பந்துத் தொடர்

மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவசக்தி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நியூட்டன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

## துடுப்பாட்டம்

இலங்கை கிரிக்கெட் சபை நடத்தும் 15 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இன்று நடைபெறவுள்ளன. யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட 'ஏ' அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதவுள்ளது. யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட 'பி' அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி மோதவுள்ளது.

## தாச்சித் தொடர்

யாழ்ப்பாண மாவட்ட தாச்சிச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மானிப்பாய் ஆனந்தா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## மரதனோட்டம்

யாழ்ப்பாணம், செப். 7
அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அமரர்களான திரு.திருமதி செல்லத்துரை பாக்கியம் ஞாபகார்த்தமாக அன்னாரது குடும்பத்தினரின் அனுசரணையில் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தப்படும் ஆண்களுக்கான 5 மைல் மரதன் ஓட்டப்போட்டி நாளை மறுதினம் குறித்த சனசமூக நிலைய முன்றிலில் காலை 6 மணியளவில் இடம்பெறவுள்ளது. இந்தத் தொடரில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் நாளைக்குள் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-23)



# அம்பாள் சம்பியன்

யாழ்ப்பாணம், செப். 7
நாவற்குழி சரஸ்வதி சனசமூக நிலையமும், விளையாட்டுக் கழகமும் இணைந்து யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்திய தாச்சித் தொடரில், தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணி சம்பியனாது.
சரஸ்வதி சனசமூக நிலையத்தின் திடலில் அண்மையில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதியது. 5:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் காளி அம்பாள் அணி வெற்றிபெற்றது. சிறந்த வீரனாக தாவடி காளி அம்பாள் அணியின் அகிலன் தெரிவானார். பரிசளிப்பு நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் கஜதீபன் கலந்து கொண்டார். (ம-23)



யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்கான சதுரங்கத் தொடரில் தென்மராட்சி பிரதேச செயலக ஆண்கள் அணி சம்பியனானது. (ம-9)


# யாழ். மாவட்ட 'பி' அணி மிகச் சிறப்பான வெற்றி



யாழ்ப்பாணம், செப். 7
இலங்கை கிரிக்கெட் சபை நடத்தும் 15 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யாழ்ப்பாண மாவட்ட 'பி' அணி அபார வெற்றிபெற்றது.
கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் இணைந்த அணியை எதிர்த்து யாழ்ப்பாண மாவட்ட 'பி' அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாண மாவட்ட 'பி' அணி 48.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பிரியந்தன் 35 ஓட்டங்களையும், ஹரிசன் 30 ஓட்டங்களையும், றொக்சன் 21 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் காண்டீபன் 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.
210 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களின் இணைந்த அணி 20.1 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 70 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. இதனால் 139 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது யாழ்ப்பாண மாவட்ட'பி' அணி. (ம-23)

## இந்து இளைஞர் ஆவரங்கால் மத்தி. அரையிறுதிக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம், செப். 7
அரியாலை திருமகளின் கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் மற்றும் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் என்பன அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.
திருமகளின் கரப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதின. மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 25:23, 25:14 என்று புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றது ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம்.
தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. 25:22, 26:24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம். (ம-108)



## காலிறுதியில் பெடரர்

அமெரிக்க ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்குத் தகுதி பெற்றார் பன்னாட்டுத் தரப்படுத்தலில் மூன்றாம் இடத்தில் உள்ள வீரரான றோயர் பெடரர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் பெடரரை எதிர்த்து 33ஆம் நிலை வீரரான பிலிப் மோதினார். ஐந்து செற்களைக் கொண்டாக ஆட்டம் அமைந்தது. முதல் மூன்று செற்களையும் முறையே 6:4, 6:2, 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றார் பெடரர். (ம)


# ஆஸ்திரேலிய அணி முன்னிலை பெற்றது

பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலிய அணி முன்னிலை பெற்றுள்ளது.

சிட்டகொங்கில் இந்த ஆட்டம் கடந்த 4ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 305 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. பந்துவீச்சில் லையன் 7 இலக்குகளையும், அகர் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி நேற்றுமுன்தின இரண்டாம் நாள் முடிவில் 2 இலக்குகளை இழந்து 225 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. வோர்ணர் 88 ஓட்டங்களுடனும், ஹான்ட்ஸ்கொம் 69 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர்.

சதம் கடந்தார் வார்ணர். இந்தச் சதத்துக்காக அவர் 5 பவுண்டரிகளை மட்டுமே விளாசியிருந்தார். வழக்கமாக அதிரடியாக விளையாடும் வோர்ணர் நேற்று தனது இயல்புக்கு மாறாக அதிகம் நிதானித்தார். மிக அரிதான வகையில் அவரின் ஆட்டம் இருந்தது. 82 ஓட்டங்களுடன் ஹான்ட்ஸ்கொம் ஆட்டமிழந்தார். 123 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் வோர்ணருக்கு முடிவு கட்டினார் ரகுமான். மக்ஸ்வெல் பெற்ற 38 ஓட்டங்களே மத்திய வரிசையில் அதிகபட்சம். நாள் முடிவில் ஆஸ்திரேலிய அணி 9 இலக்குகளை இழந்து 377 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. கெமி 8 ஓட்டங்களுடனும், லையன் ஓட்டமெதனையும் பெறாமலும் களத்தில் உள்ளனர். ஆஸ்திரேலிய அணி இதுவரை 72 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது. (ம)



## அமைச்சர் தயாசிறிக்கு கராத்தே கறுப்புப்பட்டி

விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர கராத்தே கறுப்புப்பட்டி அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். கொரிய குக்கிவோன் தைகொண்டோ தலைமையகத்தால் 7ஆம் தரத்திற்கான கறுப்புப்பட்டி, அமைச்சர் தயாசிறிக்கு வழங்கப்பட்டுள்ளது. குக்கிவோன் தலைமையகமானது உலகளாவிய ரீதியில் உள்ள விளையாட்டுத்துறை அமைச்சர்களைக் கௌரவிக்கும் வகையில் இந்தக் கராத்தே கறுப்புப்பட்டியை அணிவித்து வருகின்றது. பெரும்பாலானவர்களுக்கு ஆறாம் தரத்துக்கான கறுப்புப்பட்டியே வழங்கப்பட்டாலும் சிலம்பம், கரணம், மல்யுத்தம் போன்ற கூடுதலான விளையாட்டுத் தகைமைகளை கொண்டுள்ளதால் அமைச்சர் தயாசிறிக்கு ஏழாவது தரத்திற்கான கறுப்புப்பட்டியை இந்த அமைப்பு வழங்கியுள்ளது. (ம)



## இறுதி டெஸ்ட் இன்று

இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவதும் இறுதியானதுமான டெஸ்ட் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

முடிவடைந்த முதல் இரண்டு ஆட்டங்களில் முதலாவதில் இங்கிலாந்து வெற்றிபெற்றது. இரண்டாவதில் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி பெற்றது. இதனால் இரு அணிகளும் தொடரில் 1:1 என்ற நிலையில் உள்ளன. கிண்ணத்தைத் தீர்மானிக்கும் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் லோட்ஸில் இன்று நடைபெறவுள்ளது. (ம)



ஐரோப்பிய கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் நாளை மறுதினம் நடை பெறும் ஆட்டத்தில் பார்சிலோனாவும் எஸ்பன்ஜோலும் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. இந்த ஆட்டத்துக்காக நேற்று கடும் பயிற்சியில் ஈடுபட்டது பார்சிலோனா அணி. (ம)

# ரி-20 கிண்ணத்தையும் கைப்பற்றியது இந்தியா

இலங்கைக்கு எதிரான ரி-20 ஆட்டத்தில் 7 இலக்குகளால் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது இந்திய அணி.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ரி20 ஆட்டம் கொழும்பில் நேற்று இரவு நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இலங்கையின் ஆரம்ப வீரர்களான டிக்வெல்ல மற்றும் தரங்க இருவரும் முறையே 17 ஓட்டங்களுடனும், 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து ஏமாற்றினர். எனினும் முனவீர அடித்தாடி இந்தியாவுக்கு சிறிது பதற்றத்தை ஏற்படுத்தினார். அவர் 26 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். இவற்றில் 5 பவுண்டரிகளும், 4 சிக்சர்களும் அடங்குகின்றன. முடிவில் 7 இலக்குகளை இழந்து 170 ஓட்டங்களைக் குவித்தது இலங்கை அணி.

பந்துவீச்சில் சாகல் 3 இலக்குகளையும், குல்தீப் யாதவ் 2 இலக்குகளையும், புவனேஸ்குமார், பும்ரா இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணிக்கு 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார் ரோகித் சர்மா. ராகுல் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். எனினும் இலங்கையின் வெற்றிக் கொண்டாட்டத்தை அடக்கியாண்டார் அணித்தலைவர் கோக்லி. அவருக்கு சிறந்த பக்கபலமாக நின்றார் மனீஸ் பாண்டே. ஒரு முனையில் பவுண்டரிகள் குவிந்தன. மறுமுனையில் இலங்கை வெற்றிபெறுவதற்கான கடைசிச் சந்தர்ப்பமும் இல்லாமல் போய்க்கொண்டிருந்தது. வெறும் 54 பந்துகளில் 82 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார் கோக்லி. கோக்லியின் ஆட்டமிழப்பால் எவ்விதப் பதற்றமும் உணரப்படவில்லை. பவுண்டரியுடன் ஆட்டத்தை வெற்றியுடன் முடித்துவைத்தார் பாண்டே. (ம)

## மரண அறிவித்தல்

### நல்லம்மா தர்மராசா



வசாவிளான் வன்னியார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், பொலிகண்டி பத்திரகாளி அம்மன் கோயிலடியை வதிவிடமாகவும் கொண்ட நல்லம்மா தர்மராசா நேற்று (06.09.2017) புதன்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தவனம் - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற தர்மராசா வின் அன்பு மனைவியும் க.சத்தியபாமா, சு.ஜெகதீஸ்வரி, அ.விமலேஸ்வரி காலஞ்சென்ற ச.விக்னேஸ்வரி, த. அருந்தவராசா, மோ.றதீஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.09.2017) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2 மணிக்கு பொலிகண்டி ஊரணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.







# THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna.

## 2018 A/L DAY CLASS

| CHEMISTRY | PHYSICS | COM. MATHS |
|---|---|---|
| சுபீசன் | ராகுலன் | ஐங்கரன் |

ஆரம்பம் : 07.09.2017 வியாழன் காலை 8.00 மணி

## வேலைவாய்ப்பு

ஷாம்சன் ஆங்கிலமொழிப்பயிற்சி மையத்தில் விற்பனைப்பிரதிநிதிகள் 20 பேருக்கான (ஆண்,பெண்) உடனடிவேலைவாய்ப்பு.

- மாதாந்தம் இரண்டு இலட்சம் ரூபாவிற்குமேல் உழைப்பதற்கான வாய்ப்பு
- அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை
- மோட்டார் சைக்கிள் அல்லது கார் ஓட்டுனர் அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் அவசியம்.
- இன்றும் [07.09.2017], நாளையும் [08.09.2017] நேரடியாக நேர்முகத்தேர்விற்கு அடையாள அட்டையுடன் சமூகமளிக்கவும்.

SAAMSON
Experts in English Training
403, பெருமாள் கோவில் அருகில், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

திருமணம், பூப்புனித நீராட்டு, பிறந்தநாள் விழா

# Video Editing

பயிற்சி முடிவில் 100% வேலைத் திறனிற்கு உத்தரவாதம்
தொலைக்காட்சியில் பணிபுரியும் ஆசிரியரால் கற்பிக்கப்படும்

**10 Days 20 Hours**
Adobe Premiere CC, Edius 7, Adobe After Effect, Video Plug-ings, Adorage filter, Gold Make-up, New Blue Skin Touch-up, Video Color Tune-up, Looks, Song Editing Technic, Blu-ray Burning

புதிய பிரிவுகள் ஆரம்பம் 09th September 2017
பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன

விபரங்களிற்கு: MCS IT Campus-Jaffna 0773903123

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி மகாசங்கத்தில் கருத்திட்ட முகாமையாளராக கடமையாற்றும்

**இ. தர்மகுலசிங்கம்** அவர்களின் அன்புத் தாயார்

### இராசு அன்னம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிசங்கம்.**

## மரண அறிவித்தல்

### சோமசுந்தரம் பத்மநேசன்

(சண்டிலிப்பாய்)



பிறப்பு - 05.04.1939
இறப்பு - 05.09.2017

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் பத்மநேசன் 05.09.2017 செவ்வாய்க்கிழமை சீரணி அம்பாள் திருவடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் சண்டிலிப்பாய் வடக்கு காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை இராசமணி தம்பதியரின் மருமகனும் ஜெகதீஸ்வரியின் அன்புக்கணவரும் சோமதீபனின் அருமைத் தந்தையும் பத்மசுந்தரி காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் பத்மரஞ்சினி, திலகவதி, பத்மதேவன், பத்மஜோதி, பத்மானந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிவகுருநாதன், குகதாசன், சேனாதிபதி, சிவனேசன், காலஞ்சென்ற சந்திராவதி மற்றும் நாகராஜேஸ்வரி, புஷ்பா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2017) வியாழக்கிழமை ந.ப 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கல்வளை வீதி,
சண்டிலிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 6160030/0768837444/0774967286

## வீடு வாடகைக்கு தேவை

3 பேர் கொண்ட அரச உத்தியோகத்தர் குடும்பத்திற்கு யாழ். நகரிலிருந்து 3 கிலோ மீற்றர் தூரத்துக்குள் பஸ் போக்குவரத்துள்ள பிரதான வீதிகளுக்கு அருகில் வீடு வாடகைக்குதேவை. (K.K.S வீதி விரும்பத்தக்கது)
தொடர்பு - 077 138 1772

## Win Repair

சகல விதமான குளிர்சாதனப் பெட்டிகளும் A/C களும் உங்கள்வீடுகளுக்குவந்துசிறந்தமுறையில் திருத்திக் கொடுக்கப்படும்.
077 964 8942

## இயந்திரங்கள் விற்பனைக்கு

35 Kw ஜெனரேட்டர் UK, மரவேலை, இரும்பு, அலுமினியம் வேலை பொருள்கள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு - 077 133 6617

## கார், வான் வாடகைக்கு

கார், வான் நாள் வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம்.
**RP Rent a Car**
தொடர்பு - 077 0295 211

## வீடு வாடகைக்குதேவை

நல்லூர் கோவில் வீதி மற்றும் நல்லூரை அண்டியபகுதி வைமன் வீதி, பிறவுன் வீதி, நாவலர் வீதி மற்றும் யாழ்.நகரை அண்டிய பகுதியில் சிறியகுடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு - 075 9595 509

## தவறிவிட்டது

கடந்த ஞாயிற்றுக்கிழமை கனகநாதன் சுஜீவன் என்பவரின் **N.I.C, Licence, Tax, Insurance, 5S Apple Phone** வல்லிபுரகோயில் சுற்றாடலில் தொலைந்து விட்டது. கண்டு எடுத்தவர் செல்ல முத்தூஸ் புடைவையகம் நெல்லியடியில் ஒப்படைக்கவும்.
தொடர்பு - 077 900 4189

## K B K ACCOUNTING CENTRE

1. கந்தர்மடச்சந்தி (Tue & Fri → 3-6 P.M)
2. கொழும்புத்துறை (Sat & Sun → 2-6 P.M)

*A/L - 2018 & A/L - 2019*
புதிய பிரிவுகள் ஆரம்பம்: *08.09.2017* - 3 மணி

குறிப்பு:
எனது மாதிரி பரீட்சை வினாத்தாளில் இருந்து 90% ஆன வினாக்கள் A/L 2017 பரீட்சை வினாத்தாளில் உள்ளடங்கியிருந்தது.

**உயர்தரக் கணக்கீடு**
அன்றும்..... இன்றும்..... என்றென்றும்
*MR.BALAKAJEN*
Mobile - 076 565 5956

## மரண அறிவித்தல்



### திருமதி ரூபாதேவி கதிர்காமநாதன்

யாழ்ப்பாணம் சிவப்பிரகாசம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரூபாதேவி கதிர்காமநாதன் நேற்று (06.09.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசர் - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கதிர்காமநாதனின் அன்பு மனைவியும், வினோஜாவின் அன்புத் தாயாரும், சிவமயூரனின் அன்பு மாமியாரும், கனகேஸ்வரி (ஓய்வுபெற்ற - ஆசிரியர்), காலஞ்சென்ற சிவநேசன் (லண்டன்) மற்றும் சிவதாசன் (மாலைதீவு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவபாலன், தமிழ்ச்செல்வி, காயத்ரி, காலஞ்சென்ற சோதிநாதன் மற்றும் குருநாதன், சிவநாதன், கமலலோயினி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிவஞானமூர்த்தி, சிதம்பரராணி (சித்தன்கேணி) ஆகியோரின் அன்பு சம்பந்தியும், ரவிசங்கரின் அன்புச் சித்தியும், ஹரி, மேனகா, தனஞ்ஜெயன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2017) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**24/ 1, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.**

தகவல்:
குடும்பத்தினர்.

077 258 0972




# வேலைவாய்ப்பு

**கிளிநொச்சி அலுவலகம்**
**வவுனியா அலுவலகம்**

மேற்குறிப்பிட்ட உதயன் கிளைக் காரியாலயங்களுக்கு முகாமையாளர், சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் மற்றும் எழுதுவினைஞர்கள் தேவை. ஆர்வம் உள்ளவர்கள் 09.09.2017 சனிக்கிழமை கீழ் காணும் எமது முகவரிக்கு நேரில் சமூகம் தரவும்.



**உதயன் பணிமனை**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

மேலதிக விவரங்களுக்கு: 071 8 695 695

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.